# கல்கி

KALKI 16.12.2007
ரூ.8.00 80 பக்கங்கள்

குடும்பத்துடன் படிக்க...



## தில்லான திருப்புமுனை!

## நெல்லை மாநாடு - ஸ்டாலின் பட்டாபிஷேகம்!




கல்கி
அடுத்த இதழ்...
இசை
'சிரி'ப்பிதழ்!
வாசகர்களுக்கான
மார்கழி ட்ரீட்!
வாரம் ஒரு
பாசுரம்
-சுஜாதாவின்
பரவச எழுத்துக்களில்
மீண்டும் ஆரம்பம்...
கல்கி
டோன்ட் மிஸ் இட்

# குஷ்புவின் டைரிக் குறிப்பு!

மீண்டும் ஒரு சர்ச்சை! அது சம்பந்தமாய் மீண்டும் பல ஊர்களில் வழக்குகளென பரபரப்பாகியுள்ளார் குஷ்பு. இப்படியே போனால் அவரது 'கால்ஷீட்' டைரி எப்படி இருக்கும்? சாம்பிளுக்கு இதோ ஒரு வார டைரிக் குறிப்புகள்...

## திங்கள்

சில நாட்களுக்கு முன்பு சுந்தர் மாமா சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது புரையேறியது. தலையில் தட்டினேன். பதற்றத்தில் கொஞ்சம் பலமாய்த் தட்டிவிட்டேன். தமிழ்ப் பண்பாட்டுக்கு விரோதமாக, கணவனை அடித்தேன் என்று ஒருவர் வழக்குப் போட்டுள்ளார். அது விஷயமாக கோர்ட்டுக்குப் போக வேண்டும்.

## செவ்வாய்

குழந்தைகளை பள்ளியில் அழைத்துச் சென்று விட்டபோது 'டாடா' காட்டினேன். பண்பாட்டுக்கு விரோதமாக நீண்ட நேரம் கையை உயர்த்திக் கொண்டிருந்ததாக வக்கீல் நோட்டீஸ் வந்துள்ளது. நான் 'டாடா' காட்டியது சென்னையில், வழக்கு போட்டிருப்பவர் இருப்பது கன்னியாகுமரியில். என்ன கொடுமை சார் இது?

## புதன்

ஒரு படத்தின் பூஜையில் அடக்க முடியாமல் தும்மல் வந்ததால் தும்மிவிட்டேன். பூஜையையும் சாஸ்திரத்தையும் அவமதித்ததாக வழக்குப் போடப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக திருநெல்வேலி மாவட்டம், வம்புப்பட்டி போஸ்ட், வெட்டிவீரன் வழி, அரிவாள்பட்டி கிராமத்தின் ஆலமரப் பஞ்சாயத்துக்கு அழைத்திருக்கிறார்கள்.

## வியாழன்

இன்று ஒரு கடிதம் வந்தது. அவர் ஓய்வுபெற்ற அரசு ஊழியராம். 'புத்தகங்களைப் படித்து அலுத்துவிட்டது. சீரியல்களைப் பார்த்துச் சலித்துவிட்டது. வீட்டில் போர் அடிக்கிறது. உங்கள் மீது ஏதாவது வழக்குப் போட்டு பொழுதை ஓட்ட விரும்புகிறேன். ஏதாவது ஏடாகூடமாகப் பண்ணுங்கள்' என்று எழுதியிருக்கிறார். கூடவே போட்டோவும் அனுப்பி இருக்கிறார். பார்க்கவே பாவமாக இருக்கிறது. அவரது ஆசையை நிறைவேற்ற வேண்டும்.

**குசும்புராஜ்**

## வெள்ளி

இன்று கடுமையான காய்ச்சல். டாக்டர் 'தண்ணீரையே தொடாதீர்கள்' என்று சொல்லிவிட்டார். 'ஒரு பெண்ணாக இருந்து கொண்டு வெள்ளிக்கிழமையும் அதுவுமாக குளிக்காமல் இருக்கிறாள்' என்று யாராவது வழக்குப் போட்டு விடுவார்களோ எனப் பயமாக உள்ளது. ஆகவே, 'ரெயின் கோட்' போட்டுக் கொண்டாவது குளித்து விடுவ தென முடிவு செய்திருக்கிறேன்.

## சனி

இன்றும் நாளையும் நீதிமன்றங்களுக்கு விடுமுறை. தினமும் கோர்ட்டுகளுக்குப் போய் பழக்கமாகிவிட்டதால் இந்த இரண்டு நாட்களும் 'போர்' அடிக்கப் போகிறது. சனி, ஞாயிறுகளிலும் கோர்ட் இயங்கினால் நன்றாக இருக்கும். இது விஷயமாக பிரதமரைப் பார்த்துப் பேச வேண்டும்! ●





# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் : மு.மாறன்

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி : **2225 1522, 2225 0623, 2225 1324**

தொலைநகல் : **044 - 2225 1021**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



* மாநாட்டு முகப்பு...

இளைஞரணி மாநாட்டுக்காக இப்போதே களைகட்டத் தொடங்கிவிட்டது நெல்லை. டிசம்பர் 15, 16 தேதிகளில் மாநாடு என்று அறிவிக்கப்பட்டதுமே, ஸ்டாலின் முப்பது மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, இளைஞர் அணியினரை முடுக்கிவிட்டு வந்துள்ளார்.

'ஸ்டாலினுக்குத் துணை முதல்வராகப் பட்டாபிஷேகம் நடத்தப்படவிருக்கிறது', 'கலைஞர் தம் பொறுப்புகளை ஸ்டாலினிடம் ஒப்படைக்கப் போகிறார்', 'இளைஞரணி பொறுப்பு அடுத்து ஸ்டாலின் மகனுக்கோ, அழகிரி மகனுக்கோ கொடுக்கப்படவிருக்கிறது' என்று ஆள் ஆளுக்கு யூகங்களுடன் அலைகிறார்கள். சென்னை துவங்கி துவரங்குறிச்சி வரைக்குமான பகுதிகளின் மாநாட்டு விளம்பரங்களில் 'தளபதி' அழைக்க, கொட்டாம்பட்டியில் தொடங்கி விருதுநகர் வரை 'அஞ்சாநெஞ்சன்' அழைக்கிறார். அழகிரி ஏரியாவில் ஸ்டாலின் பின்னுக்குத் தள்ளப்பட்டதை மற்ற கட்சிகள் நமுட்டுச் சிரிப்புடன் நோக்க, தி.மு.க.வினர் அதனையும் பெருமையாக எடுத்துக்கொண்டு வீரநடை போடுகின்றனர்.

''இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். பேரணியில் எவ்வாறு நடந்து வருவது என்கிற பயிற்சிகள் அவர்களுக்குத் தரப்பட்டு வருகின்றன. 1957ல் தி.மு.க.வுக்கு இளைஞர்களை ஈர்த்த தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் கலைஞர். 2007ல் தி.மு.க.வுக்குப் பெருமளவில் இளைஞர்களைத் திரண்டு வர வைக்கும் தலைவராக உயர்ந்திருப்பவர் தளபதி ஸ்டாலின்!'' என்கிறார் திருச்சி மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் மல்லியம்பத்து கதிர்வேல்.



நெல்லை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இருபது ஏக்கர் பரப்பளவில் மாநாட்டு அரங்கு அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாலரை லட்சம் சதுர அடியில் பிரமாண்ட பந்தல்; கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட மேடை. அரண்மனை நுழைவாயில் போன்ற முகப்பு என பார்த்துப் பார்த்துச் செய்யப்படுகின்றன

# நெல்லை மாநாடு... ஸ்டாலினுக்குப் பட்டாபிஷேகம்!



படம் : ஸ்ரீஹரி

ஏற்பாடுகள். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கட்டளையை மீறாமல் நடக்க ஆங்காங்கே கட்சியினராலேயே பலத்த கண்காணிப்பு என்றாலும், பொங்குகிறார் நெல்லை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் நிஜாம்:

''அரசுக்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரி இடத்துல ஆளுங்கட்சியா இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொது மாநாடு நடத்துவதற்கு வாடகை செலுத்தியாக வேண்டும். இந்த விதியினைக்கூட கடைப்பிடிக்கவில்லை தி.மு.க.வினர்.

புறநகர்ப் பகுதியில் மாநாடு நடத்தினால், மாநகரப் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படப் போவதில்லை. ஆனால், நெல்லையின் மையப் பகுதியில், அதுவும் மருத்துவக் கல்லூரி மைதான வளாகத்தில் நடத்தப்படுவது வேதனை தரும் விஷயம். அது நெல்லை மாநகரவாசிகள் காலை நடைப்பயிற்சி செய்யும் இடம். அதிகாலை ஐந்து மணி முதல் காலை எட்டு மணிக்குள் சுமார் ஏழாயிரம் பேர் நடைப்பயிற்சி செய்து பயன்பெறுவார்கள். ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக யாரையும் அனுமதிக்கவில்லை காவல்துறை'' என்கிறார் நிஜாம்.

**மா**நாட்டில் அவரவர் வயதினைக் குறிக்கும் வகையில் கருணாநிதிக்கு 84 பவுன் தங்கத்திலும் மூன்று கிலோ வெள்ளியிலும், ஸ்டாலினுக்கு 54 பவுன் தங்கத்திலும் இரண்டு கிலோ வெள்ளியிலும் நினைவுப் பரிசுகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்துள்ளது நெல்லை மாவட்ட தி.மு.க.! மாநாட்டுச் செலவுகளுக்காக இது வரை மாவட்ட கழகங்களின் சார்பில் வந்துள்ள நிதி ஐந்து கோடி ரூபாய். இன்னும் இரண்டு கோடி ரூபாய் வசூலாகும் என்றும் சொல்லப்படுகிறது.

''**த**மிழகத்தில் முதல்வர் கனவுகள் சுமந்து திரைப்பட நடிகர்கள் துவங்கும் அரசியல் கட்சிகளில், இளைஞர்கள் அதிகமாக அங்கம் வகிப்பதாக ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மாயத் தோற்றத்தினை மாய்த்திடச் செய்யுமளவுக்குத் திரண்டு வரவிருக்கிறது தி.மு.க. இளைஞரணி'' என்று நெல்லை மாவட்டச் செயலாளரும், மாநாட்டு அமைப்பாளருமான கருப்பசாமி பாண்டியன் சொல்ல, அடித்துப் பேசுகின்றனர் அ.தி.மு.க.வினர்!

''அதெல்லாம் சும்மா பேச்சு. வயதானவர்கள்தான் தி.மு.க.வின் 'இளைஞர்கள்'. மருத்துவக் கல்லூரி வளாகம் 24 மணி



★ கருப்பசாமி



★ ஸ்ரீராம்



★ கதிர்வேல்



★ முத்தையா

நேரமும் பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய பகுதி. அங்கு இரண்டு நாள் மாநாடு என்றால், பொது மக்கள் படும் பாட்டை நினைத்துப் பாருங்கள். மைதானத்தில் பெரிய பெரிய மரங்களை தி.மு.க.வினர் வெட்டிப் போட்டனர். இங்கு மாநாடு நடத்த அனுமதி தரக்கூடாது என மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இதற்கெல்லாம் போட்டோ ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன'' என்கிறார் அ.தி.மு.க. நெல்லை மாவட்டச் செயலாளர் பாப்புலர் முத்தையா.

மருத்துவக் கல்லூரி மாணவர்களிடமும் நாம் பேசத் தவறவில்லை. ''எங்கள் போராட்டமே எங்களுக்குப் பெரிய பஞ்சாயத்து. இந்நிலையில், ஆளுங்கட்சி மாநாடு குறித்து கருத்துக் கூற நாங்கள் விரும்பவில்லை'' என்பதே அவர்களின் பதிலாக இருக்கிறது. கல்லூரி முதல்வர் விநாயகமோ, ''சென்னையில் இருக்கும் மருத்துவத் துறை இயக்குநரிடம் விளக்கம் கேட்டுக்கொள்ளுங்கள்!'' என்று ஒதுங்கிக்கொண்டார்.

*செய்திச் சித்திரம் :*

**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# பளிச்சென்று பத்து!

அரசியலில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் ஸ்டாலின் மேலும் தம்மை முன்னிலைப் படுத்திக்கொள்ள வேண்டும். எப்போதும் பின்னணியில் இருந்தால், விமர்சனத்துக்கு ஆளாக நேரிடும். சட்டசபை விவாதங்களில் கலந்துகொண்டு வலுவாகப் பேச வேண்டும் என்ற ஆர்வமோ, எதிர்க் கட்சியினர் பேசும்போது புத்திசாலித்தனமாகக் குறுக்கீடு செய்யும் முயற்சியோ அவரிடம் இருந்தது இல்லை. கருணாநிதி ஸ்டாலினை 1996ல் மேயராக்காமல் நேரடியாக அமைச்சராக்கியிருந்தால் இன்று அனுபவம் கூடியிருக்கும்.

இன்று 60 சதவிகித அரசு நிர்வாகம் ஸ்டாலின் கையில். ஆனால், ஓஹோவென பாராட்டும் செயல்பாடுகள் இல்லை. கருணாநிதி கைதின்போது கட்சித் தொண்டர்கள் அவரிடம் இன்னும் ஆவேசத்தை எதிர்பார்த்தார்கள். இதையெல்லாம் அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். 'உங்களில் ஒருவன்' என்ற தலைப்பில் முரசொலியில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதினாலும், கலைஞரின் கடிதங்கள் அளவுக்கு அவை பேசப்படுவதில்லை.

வருங்காலத்தில் கட்சி அவர் பின்னால் இருக்கும். குடும்ப அதிகார மையங்களை அரவணைத்துப் போக வேண்டும். தயாநிதியைச் சேர்த்துக்கொண்டால் பலம் கூடும். ஜெ., சரத், விஜயகாந்த் என்று பலரை எதிர்த்து அரசியல் நடத்தக் கூட்டணிக் கட்சிகளை அரவணைத்துப் போகும் சாதுர்யம் வேண்டும். உட்கட்சி - எதிர்க்கட்சி எழுப்பும் அரசியல் சூறாவளிகளைச் சந்திக்க வேண்டும். அந்தச் சவால்களை வெற்றிகரமாகச் சமாளிக்கும்போதுதான் அவரது அரசியல் எதிர்காலம் உறுதிப்படும்.

அந்த அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைத்துக்கொள்ளவோ அரசு நிர்வாகத் திறமைகளை நிரூபிக்க வேண்டும்; 'தமிழக முன்னேற்றத்துக்கு ஸ்டாலின் என்ன செய்தார்?' என்று கேட்டால், பளிச்சென்று சொல்ல பத்து பதில்கள் தேவை.

**- தில்லப்பா**




# ரஜினி...

ஏவி.எம்.சரவணன் நல்ல தயாரிப்பாளர் மட்டுமல்ல; கதையின் ஓட்டத்துக்கு ஏற்ப திருப்பங்களைக் கூறும் மறைமுகக் கதாசிரியரும்கூட! இதற்குப் பல உதாரணங்களை அடுக்கலாம். மிகச்சிறந்த உதாரணம் 'நல்லவனுக்கு நல்லவன்' படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி!

இந்தப் படத்தில் மனைவி ராதிகா இறந்துவிட, தம் சொத்து முழுவதையும் மகளின் பெயருக்கு எழுதி வைத்து விடுவார் ரஜினி. ''நான் ஒண்ணே ஒண்ணை மட்டும் இங்கிருந்து எடுத்துட்டுப் போக அனுமதிக்கணும்'' என்று சொல்லிவிட்டுத் தம் மனைவி ராதிகாவின் புகைப்படத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வீட்டை விட்டுப் போவார். படம் முடியும். இப்படித்தான் முதலில் க்ளைமாக்ஸ் எடுத்திருந்தோம்.

* ஏவி.எம்.சரவணன்



படத்தைப் பார்த்த தயாரிப்பாளர் ஏவி.எம்.சரவணன், ''அதிரடி, ஆக்ஷன், சென்டிமெண்ட் என்று படம் கலந்து கட்டிய கதம்பமாக இருக்கிறது. ஆனால், முடிவு மட்டும் கவித்துவமாக இருக்கிறதே. ஆக்ஷன் படத்துக்கு ஆக்ஷன் க்ளைமாக்ஸாக இருந்தால்தான் ரசிக்கப்படும். எனவே, க்ளைமாக்ஸ் காட்சியை சண்டைக் காட்சியாக வைத்துவிடலாமே'' என்றார். அவர் சொல்லியதும் ஒரு விதத்தில் சரி என்றே எனக்குப் பட்டது. அதுதான் ரஜினி ரசிகர்களையும் திருப்திபடுத்தும் என்றும் தோன்றியது. அதன் பிறகு கேரளாவின் கள்ளிக்கோட்டையில் க்ளைமாக்ஸ் சண்டைக் காட்சியைப் படம் பிடித்துப் படத்தில் இணைத்தோம். அது ரசிகர்களை மட்டுமல்லாது, வெகுஜன மக்கள் மத்தியிலும் அமோக ஆதரவைப் பெற்றுத் தந்தது. படமும் வெள்ளி விழா கண்டது.

இந்தப் படத்தின் முதல் பாதியில் சதா அடிதடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதிரடி ரௌடியாகவும் மறுபாதியில் பணக்காரராகவும் நடிப்பை கலந்துகட்டிக் கொடுத்திருப்பார் ரஜினி. அடியாளாக இருக்கும் ஒரு மனிதனை அவனது மனைவி எப்படித் திருத்தி, வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைவதற்கு உதவுகிறார் என்பதுதான் கதை.

ஒரு காட்சியில் ரஜினியிடம், ''இனிமேல் நீங்க யாரையும் அடிக்கக் கூடாது. நீங்க உண்டு உங்க வேலை உண்டு என்று இருக்கணும்'' என்று அட்வைஸ் பண்ணுவார் மனைவி ராதிகா. ரஜினியும் மனைவி சொல்லே மந்திரமென அமைதியாகக் கேட்டுக்கொள்வார். ஒரு நாள் வெளியே போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வரும்போது, ரத்தம் சொட்ட, காயத்தோடு ஆனாலும் மல்லிகைப் பூவோடு வருவார். ராதிகா பதறிப்போய், ''என்னாச்சுங்க, ஏன் இப்படி ரத்தம் சொட்டுது'' என்று கேட்க, ''என்னோட பழைய சகாக்கள் 'என்னடா ரொம்ப நல்லவனா மாறிட்டியா'ன்னு

## எஸ்.பி.முத்துராமன்

வம்புக்கு இழுத்தாங்க. நீதான் சொல்லி யிருக்கல்ல, யாரையும் அடிக்கக் கூடாதுன்னு. அதான் இப்படி'' என்பார் ரஜினி! ''நான் வீணா சண்டைக்குப் போகா தீங்கன்னுதான் சொன்னேன். மத்தவங்க அடிச்சா அடியை வாங்கிக்கிட்டு வாங் கன்னு சொன்னேனா? போங்க! போய் உங்களை எப்படி அடிச்சாங்களோ அப் படியே அவங்களைப் புரட்டி எடுத்துட்டுத் தான் நீங்க வீட்டுக்கு வரணும். அப்பத்தான் நீங்க வாங்கிக்கிட்டு வந்த மல்லிகைப் பூவை வெச்சிக்குவேன்'' என்பார் ராதிகா. உடனே புயலாகப் புறப்படும் ரஜினி, தன்னை எப்படி விரலைச் சுண்டிச் சுண்டி சொடக்குப் போட்டு அடித்தார்களோ, அதேபோல விரலைச் சொடக்குப் போட்டுத் திருப்பிக் கொடுப்பார். நாங்கள் எதிர்பார்த்தபடியே, தியேட்டரில் இந்த சீன் வந்தபோது அரங்கமே அதிர்ந்தது. விசில் காதைப் பிளந்தது. ரசிகர்கள் ஒவ் வொருவரும் ரஜினியாக மாறிப்போயி னர்.

# க்ளைமாக்ஸ்... ரகசியம்!

அப்படிப்பட்ட இந்தப் படத்தில் நடிகர் கார்த்திக் நடிக்க மறுத்தார் என்றால், ஆச்சரியமாக இருக்கிறதா?

**கா**ர்த்திக் படத்தில் ஏற்று நடித்தது வில்லன் பாத்திரம். முதலில் அறிமுக மாகும்போது கார்த்திக் நல்லவராகத்தான் இருப்பார். ஆனால், போகப்போகத்தான் கதையின் பின்பாகத்தில் தம்முடைய வில்லத்தனத்தைக் காண்பிப்பார். ஹீரோ வாக நடித்துக்கொண்டிருந்த கார்த்திக், வில்லன் பாத்திரத்தில் நடிக்கத் தயங்கியது மிக இயல்பான ஒன்று. கார்த்திக்கிடம் ''உங்களுக்கு இந்தப் படத்தில் வில்லன் ரோலாக இருந்தாலும் நடிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. கண்டிப்பாக உங்கள் பாத்திரம் பேசப்



* 'நல்லவனுக்கு நல்லவன்!'

# ரசிகர் மன்ற ராஜாக்கள்



• ஹேமநாதன்

அடிப்படையில் நகைச்சுவை உணர்வுள்ள ஹேமநாதன், 'தில்லு முல்லு' படத்தில் ரஜினியின் நகைச்சுவை நடிப்பால் ஈர்க்கப்பட்டதில் ஆச்சர்யமில்லை. ஹேமநாதனைப் பொருத்தவரை ரஜினிக்கு அடுத்துதான் எல்லாமும். நாய்க்குட்டி முதல் நண்பர்களின் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பது வரை எப்படியாவது ரஜினியின் பெயரைப் புகுத்திவிடுவார். 'ஒவ்வொரு ரஜினி பட ரிலீசும் எனக்கு உற்சாக உற்சவம்தான்' என்று சொல்லும் ஹேமநாதன், ரஜினியின் பிறந்த நாளின் போது ஏழைக் குழந்தைகளுக்குத் துணிமணிகள் எடுத்துத் தருவது, வசதியற்ற குழந்தைகளை பள்ளியில் சேர்க்கப் பண உதவி செய்வது என்பதனை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். அலுவலகத்தில் இவரை எல்லோரும் செல்லமாக அழைப்பது 'சூப்பர் ஸ்டார்' என்றுதான். உதவி என்று கேட்டு வரும் அனைவருக்கும் தன்னால் இயன்றதைச் செய்யும் ஹேமநாதனுக்கு வயது இருபத்தொன்பதுதான். 'இளைய தலைமுறையாயிருந்துகொண்டு இளைய தலைமுறை நடிகர்கள் ஏன் உங்களைக் கவரவில்லை?' என்றால், படீரென்று வருகிறது பதில். 'குழந்தைகளையும் வசீகரிக்கிற சக்தி சூப்பர் ஸ்டாருக்கு மட்டும்தான் உண்டு. நான் அவரிடம் கவிழ்ந்ததில் ஆச்சர்யமில்லை.' ரஜினியை இவ்வளவு நேசிக்கும் ஹேமநாதன், இன்றுவரை ரஜினியை நேரில் சந்தித்துப் புகழ் வெளிச்சம் போட்டுக் கொண்டதில்லை என்பது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்.

**– கமலி**

படும்'' என்று எவ்வளவோ சொல்லியும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ''இந்தப் படத்தில் நடியுங்கள். அடுத்து உங்களையே ஹீரோவாகப் போட்டு ஏவி.எம். ஒரு படத்தைத் தயாரிக்கும்'' என்று சரவணன் உறுதிமொழி கொடுத்த பிறகே கார்த்திக் சம்மதித்தார். அதன்படி கார்த்திக் ஹீரோவாக நடிக்க ஏவி.எம். தயாரித்த படம்தான் 'நல்லதம்பி'.

படத்தில் ரஜினியின் மகளைக் காதலிக்கும் கார்த்திக், ரஜினியின் சம்பந்தமில்லாமல் அவரைத் திருமணம் செய்வார். மகளின் ஆசையை நிறைவேற்றி வைக்கும் நோக்கத்தோடு, திருமணம் நடக்கும் மலைக்கோயிலுக்குச் செல்வார்கள் ரஜினி - ராதிகா தம்பதி. அங்கு அவர்களுக்கு மகளாலேயே அவமானம் காத்திருக்கும். அவமானத்தோடு திரும்பும் அந்தக் காட்சியில் தம் மகளை கிளியாக உருவகப்படுத்தி ரஜினி பாடும் 'சிட்டுக்குச் செல்ல சிட்டுக்கு' பாடல் தந்தைக்கும் மகளுக்குமான நேசத்தை அப்பட்டமாகப் படம் பிடித்திருக்கும். மகள் மீதான பாசமுள்ள எந்தத் தந்தையையும் ஒரு கணம் நெஞ்சுருக வைத்துவிடும். அந்தப் பாடலில் ரஜினியின் நடிப்பு, படம் பார்த்தவர்களின் நெஞ்சத்தில் சிம்மாசனம் போட்டுக்கொண்டது. இந்தப் படத்துக்கு தம்முடைய ஸ்கிரிப்ட் மூலம் உதவியவர் விசு. திறமையான, அதே நேரத்தில் மனதில் பட்டதை உள்ளது உள்ளபடி சொல்லிவிடும் பண்பாளர்.

• விசு



'நல்லவனுக்கு நல்லவன்' படம் முடிந்த பிறகு அடுத்து அதிரடிக்காகக் காத்திருந்தோம் நானும் ரஜினியும். அப்படி வந்தது ஒரு நல் வாய்ப்பு!

**(பயணம் தொடரும்)**

எழுத்து வடிவம் :

**சந்திரமௌலி**

# கலைஞர் மேல் மலேசிய அமைச்சருக்குக் கோபம் ஏன்?

● எம். ராஜேந்திரன், லால்குடி

*? கேரளாவில் சம்பள தினத்தன்று மதுக் கடைகள் மூடியிருப்பது போல் தமிழ் நாட்டிலும் செய்தால் என்ன?*

! நம் குடிமகன்கள், 'கடை திறக்கும் தினத்தில் சம்பளம் வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லிவிடுவார்கள்.

● சித்ரா, நெல்லை

*? பில்லா பட தலைப்பு தமிழா?*

! கவலைப்பட வேண்டாம். ரிலீஸுக்கு முன்னதாக வரிவிலக்கு பெற ஏதாவது செய்துவிடுவார்கள். கலைஞரும் கருணை மனசோடு கவிழ்ந்துவிடுவார்.

● வெ.ராம்குமார், வேலூர்

*? உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, தென்னாப்பிரிக்காவில் கோககோலா குளிர் பான பாட்டில்களில் மண்டேலாவின் விழிப் புணர்வு வாசகம் வெளியிடப் போகிறார் களாமே?*

! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்; சமூக அபாயத்தைச் சொன்னது போலவும் இருக்கும்; தங்களது பானத்தைக் குடிப்ப தால் ஏற்படும் அபாயத்தை மறைத்தது போலும் இருக்கும்!

● ஆன்டனி தமிழரசன், மும்பை - 17

*? 'அபத்தமாகக் கட்டுரை எழுது வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்' என்று தஸ்லிமா நஸ்ரீனுக்கு லாலு பிரசாத் யாதவ் அறிவுரை கூறியுள் ளாரே?*

! 'எதை எழுதினாலும் பிறர் மனம் புண்படாமல் எழுதப் பழகுங்கள்' என்று கூறினால் அறிவுரை அர்த்தமுள்ளதாக இருக்கும். இப்போதோ, லாலுவின் அறிவு ரையே அபத்தமாகிவிட்டது. சர்ச்சைக்குரிய வரிகளை தஸ்லிமா நஸ்ரீன் வாபஸ் பெறு

✱ உதித்த அறிவுடைமை!



✱ இழந்த செல்வம்





✱ உரைத்த சால்ஜாப்பு!

## நீங்கள் கேட்டவை

# தராசு

வதாகக் கூறியது அறிவுடைமையாகி விட்டது.

● இரா.சக்கரபாணி, மதுரை

? 'இளைஞர்கள் பதவியைத் தேடிச் செல்லக் கூடாது; பதவி அவர்களை நாடி வரவேண்டும்' என்று மு.க.ஸ்டாலின் சொல்கிறாரே?

! பேச்சு என்னவோ தர்ம நியாயமாகத்தான் தொனிக்கிறது. ஆனால், நடைமுறையில் பல சமயம், பதவிகள் தகுதியற்றவர்களை நாடிச் செல்ல வசதியாகத் தலைமைகுறுக்கு வழிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும்போதுதான் மற்றவர்கள் மனம் வாடிவிட நேர்கிறது.



● விபரீத அறிவிப்பு!

● பொன்விழி, அன்னூர்


? எம்.கே.தியாகராஜ பாகவதரின் சமாதி புல், முள் சூழ்ந்து கிடக்கிறதே! பராமரிக்க ஒரு நடிகரும் ரசிகரும் முன்வராதது குறித்து?

! நமது நாட்டவருக்குப் பொதுவாகவே வரலாற்று உணர்வு குறைவு. தென்னிந்திய நடிகர் சங்கம் சற்று கவனம் செலுத்தலாம். சமாதியைச் சீர் செய்யாவிட்டாலும் ஒரு Hall of Fame உருவாக்கி, புகழ்பெற்ற நடிகர்களைப் போற்றலாம்.

● எம்.எஸ்.வாழவந்தான், தேனி

? காங்கிரஸ் கட்சிக்குள் மது அருந்தலாமா, கூடாதா என்று சர்ச்சை எழுந்துள்ளது பற்றி...?

! இதுபோன்ற பல சீரழிவுகளை எதிர்பார்த்துத்தான் சுதந்திரம் கிடைத்ததும் காந்திஜி 'காங்கிரஸின் பணி முடிந்தது; இனி அதைக் கலைத்துவிட வேண்டும்' என்று சொன்னார்.



● ஆச்சர்ய உத்தரவு!

● எஸ்.விஜயலட்சுமி, சேலம் ❐

? நினைப்பதற்குள் கடந்துவிடும் காலத்தை நமக்கானதாக மாற்றிக்கொள்ள எந்தவிதமான சிந்தனை அவசியம்?

! தீர்க்கதரிசன சிந்தனை

● எஸ்.சாந்தி, காட்பாடி

? 'ஆண்டவன் படைப்பிலேயே கூன் - குருடு என்று குறை இருக்கும்போது, தி.மு.க. ஆட்சியில் குறை இருக்காதா?' என்கிறாரே துரைமுருகன்?

! தி.மு.க.வின் படைப்பிலேயே உள்ள குறை, இதுபோன்ற அர்த்தமற்ற பேச்சுக்கள்தான். குறைகளை நீக்கவும் அவற்றை வெற்றி கொள்ளவும்தான் இறைவன் மனிதனுக்கு அறிவைக் கொடுத்தாரேயன்றி சால்ஜாப்பு சொல்வதற்காக அல்ல.

● ஏ.எஸ்.யோகானந்தம், ஔவையார்பாளையம்

? 'ஒன் இந்தியா' திட்டம், 'ஆஃப் இந்தியா' திட்டமாக (பி.எஸ்.என்.எல்.) மாற்றப்படும் என்று மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் ராஜா கூறியுள்ளது பற்றி...?

! நாட்டின் பல்வேறு பகுதிகளையும் ஒன்றாக இணைக்கும் BSNL என்பதைக் குறிக்க One India திட்டம் என்பதே சரி. Of India என்பது Off India அல்லது Half Indiaவாக விபரீத அர்த்தத்துடன் சிதையக் கூடும்.

● பி.இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? கொல்கத்தா ரயில் நிலைய விழா ஒன்றில், தம்மைப் புகழ்ந்து பாடியவருக்கு ரயில்வேயில் உடனடியாக வேலை வழங்க உத்தரவிட்டிருக்கிறாரே லாலு?

! ஆச்சர்யமேயில்லை; தம்மைப் புகழ்ந்து பாடாதவர்களை வேலை நீக்கம் செய்யாமல் இருக்கிறாரே லாலு! அதான் பெரிய ஆச்சர்யம்.

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? பிற நாடுகளின் வங்கித் துறை வீழ்ச்சி அடைந்தாலும் இந்திய வங்கித் துறை வீழ்ச்சி அடைய வாய்ப்பில்லை என்று

ப.சிதம்பரம் கூறியுள்ளாரே - நம்பலாமா?


! சிதம்பரத்தை நம்புகிறவர்கள் அவர் கூறுவதை நம்பலாம். எது வீழ்ச்சியடைந்தாலும் இங்கே விலைவாசிகள் வீழ்ச்சியடையப் போவதில்லை என்பதையும் சேர்த்து நம்பலாம்!

● சி.சுரேஷ்,
திருச்சிற்றம்பலம்

? நந்திகிராம் மக்களுக்கு மத்திய, மாநில அரசுகள் என்ன உதவி செய்ய வேண்டும்?

! அரசியல் கண்ணோட்டத்தைத் துறந்து மனிதநேய கண்ணோட்டத்தில் சிந்தித்துச் செயல்பட வேண்டும். இதற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

● அ.அனிதா,
அகஸ்தீஸ்வரம்



✱ மறந்த மாணிக்கம்!

? சென்னை, புதுவண்ணாரப்பேட்டை பள்ளி ஒன்றில் மாணவ - மாணவிகள் பேய் பீதியால் அலற, பள்ளிக்கு விடுமுறைகூட அளிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து உங்கள் கருத்து...?

! 'பேய் பிசாசு போன்றவை வெறும் பயமுறுத்தல்; நம்ப வேண்டாம்' என்று ஆறுதல் சொல்லி தைரியமூட்டுவதற்குப் பதில், பள்ளி நிர்வாகமே இதைப் பிரச்னையாக்கியது தான் ரொம்ப கேவலம்.

● சு.நா.இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்

? தங்கம், வைரம், வைடூரியம் கலந்து ரவிவர்மாவின் ஓவியங்களுடன் நாற்பது லட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள பட்டுச்சேலையை, தமது நடிகைகளுள் யார் உடுத்தினால் அழகாக இருக்கும்?

! இதெல்லாம் கண்காட்சியில்தான் அழகாயிருக்கும். உடுத்தினால் அழகாயிராது. பகட்டு ஆணவமாகத்தான் தெரியும்.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? கிரண் பேடி என்னும் திறமையான போலீஸ் அதிகாரி விருப்ப ஓய்வு பெறுவதால் யாருக்கு நஷ்டம்?

! இந்திய காவல் துறைக்கு.

● எஸ். மாரியப்பன்,
புதுக்கோட்டை

? கலைஞர் மேல் மலேசிய அமைச்சருக்கு ஏன் இத்தனை கோபம்?

! கலைஞருக்கு அவ்வப்போது ராமதாஸ் மேல் கோபம் வரவில்லையா? அந்த மாதிரிதான் இந்தக் கோபமும்.

● ஆர்.மாதவராமன்,
கிருஷ்ணகிரி

? கணவனிடம் ஜீவனாம்சம் கேட்காமல் அவனுக்கு நாலு லட்ச ரூபாய் திருப்பிக் கொடுத்து விவாகரத்து பெற்ற சென்னை பெண் அதிரடி பற்றி...?

! புதிதல்லவே! அமரர் கல்கியின் 'தியாக பூமி' நாவல் கதாபாத்திரம் உமா ராணி 1930களிலேயே செய்யத் தயாராயிருந்த புரட்சிதான்.

● வசீகரன்,
சென்னை - 18 ★



✱ விழாத விலைவாசி!

? இந்தியாவைவிட பாகிஸ்தானில்தான் பத்திரிகைச் சுதந்திரம் அதிகம் என்கிறார்களே இங்கு வந்துள்ள பாக். பத்திரிகையாளர்கள்?

! அவர்களுடைய தேச பக்தி பேசுகிறது. சொந்த நாட்டில் என்ன இக்கட்டானாலும், அதை விட்டுக் கொடுக்கக் கூடாது என்கிற உறுதி பேசுகிறது! ●

❒ ரூ.100/- பரிசு பெறுபவர் :

எஸ்.விஜயலட்சுமி, சேலம்

✱ ரூ.50/- பரிசு பெறுபவர் :

வசீகரன், சென்னை - 18





# கல்கி



2007 டிசம்பர் 16
சர்வஜித் கார்த்திகை 30
மலர் : 66
இதழ் : 20

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

*- பாரதியார்*

## அன்புமணியின் அன்பற்ற அணுகுமுறை!


புகை பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடச் செய்ய, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி கெடுபிடி காட்டி வருகிறார். அவரது பலமான வேண்டுகோளுக்கிணங்கி, நடிகர் விஜய், இனி தமது படங்களில் புகைக்கும் காட்சிகள் இடம்பெறமாட்டா என்று அறிவித்து விட்டார்!

பொது இடத்தில் புகைத்தால் தண்டனை. அந்தத் தண்டனையை விதிக்க, பொதுவாழ்வில் உள்ள ஆசிரியர்கள், கண்டக்டர்கள் போன்றோருக்கு அதிகாரம், புகையிலைப் பொருட்களின் மேல் அபாயச் சின்னம் பொறிக்க ஆணை என முயற்சிகள் தொடர்வதும் கிடுக்கிப்பிடி போடுவதும் வரவேற்க வேண்டிய நடவடிக்கைகள்.

ஆனால், அதே கெடுபிடியும் கிடுக்கிப்பிடியும் எல்லா இடங்களிலும் செல்லுபடியாகமாட்டா; கையாளப்படக் கூடாது என்பதையும் அன்புமணி நினைவில் கொள்ள வேண்டும்.

அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (AIIMS) நிர்வாகத்தில், சுகாதாரத் துறை அமைச்சரின் தலையீடை எதிர்த்து வந்தார் அதன் இயக்குநர் வேணுகோபால். அவரது பதவிக் காலத்தைக் குறைக்கச் சட்டத் திருத்தமே கொண்டு வந்தார் அன்புமணி. இப்போது இந்த விவகாரம் உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. டாக்டர் வேணுகோபாலின் மனுக்களைப் பரிசீலித்த நீதிமன்றம், அமைச்சர் தரப்பிடம் விளக்கம் கேட்டிருப்பதுடன், வேணுகோபாலின் புகாருக்கு அனுதாப நிலைப்பாடைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறது.

அன்புமணிக்கு விடுக்கப்பட்டுள்ள ஓர் எச்சரிக்கையாகவே இதைக் கருதலாம். ஆனால், அன்புமணி அவ்வாறு கருதக்கூடியவராக






இல்லாமல், 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று செயல்படும் அவசரமும் தோரணையும் கொண்டவராகவே காணப்படுவதுதான் கவலைக்குரிய விஷயம். சுகாதாரத் துறை அமைச்சர், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விஷயத்திலும் மிகக் கடுமையாகவே நடந்துகொண்டிருக்கிறார். இந்த மாணவர்கள் கிராமப்புறங்களில் பணியாற்ற வேண்டும் என்கிற நோக்கு உன்னதமானது; அதில் சந்தேகமேயில்லை. ஆனால், மருத்துவப் படிப்பு முடிந்த கையோடு கிராமத்தில் போய்த் தங்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது நியாயமில்லை என்பதுடன் அதனால் அதிகம் பயனும் இராது. 'மருத்துவ வசதிகள் அதிகம் இல்லாத கிராமங்களில் மருத்துவர்கள் மட்டும் என்ன செய்துவிட முடியும்?' என்று மாணவர்கள் கேட்பதில் அர்த்தம் இருக்கிறது. இதனால், 'கத்துக்குட்டி' டாக்டர்கள்தான் கிராமங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமா என்கிற கேள்வி வேறு எழும். 'கிராம மக்கள் இரண்டாம்தர குடிமக்களா?' என்கிற சர்ச்சையும் கூடவே எழும்.

நான்காவது அல்லது ஐந்தாவது ஆண்டு எம்.பி.பி.எஸ். படிப்பில் ஆறுமாத காலம் 'கிராமப்புற களப்பணி' என்பதைப் பாட திட்டத்திலேயே புகுத்தலாம். அனுபவம் மிக்க சிறந்த டாக்டர்களைச் சுழற்சி முறையில் மேற்பார்வையிடச் செய்து, மாணவர்களை கிராமப்புற சிறு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் 'நோய் நாடி, நோய் முதல் நாடி' சிகிச்சை அளிக்கப் பயிற்றுவிக்கலாம். இந்தக் காலகட்டத்துக்குச் சிறிதளவு ஊதியமும் தரலாம். 'ஹவுஸ் ஸர்ஜன்ஸி' என்று நகரத்து மருத்துவமனைகளில் மட்டுமே நடைபெறும் களப் பயிற்சியை இவ்வாறு மாற்றினால், நல்லிதயம் படைத்த ஒரு சில மாணவர்களுக்கேனும் கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆர்வம் துளிர்க்க வாய்ப்பு உண்டு. கூடவே, தமிழகத்தின் சிறு நகரங்களில் பல்வசதி படைத்த தனியார் மருத்துவமனைகள் நிறுவ வசதி செய்து தரப்பட்டால், கிராம மக்கள், தீவிர சிகிச்சைக்குத் தொலைதூரம் செல்ல வேண்டாம். மருத்துவர்களும் இச்சிறு நகரங்களிலிருந்து விரைந்து கிராமங்களுக்குப் போய் உதவ முடியும்.

நகர மயமாகிவிட்ட நமது நாட்டின் மருத்துவத் துறை, அயல்நாட்டவரையும் இன்று ஈர்க்கிறது. நம் நாட்டு ஏழை, கிராம மக்களுக்கும் அத்துறையின் பயன்பாடு கிடைக்கச் செய்வது அன்புமணியின் அன்பும் சாதுர்யமும் கலந்த அணுகுமுறையினால் மட்டுமே சாத்தியமாகும்; பிடிவாத கெடுபிடிகளால் அல்ல! ●

பாண்டிச்சேரியின் ஒரு வீதியில் பலரும் வருவதும் போவதுமாக இருக்கையில், சற்று பைத்தியம் பிடித்தவன் போல் இருந்த அந்தச் சிறுவன் பாரதியாரின் கருணைப் பார்வையை ஈர்த்தான். யாரையும் அதிகம் தொந்தரவு செய்யவில்லை எனினும், அவனது நடை, உடை, பாவனை, தனக்குத்தானே பேசிச் சிரித்துக் கொள்வது எல்லாம் அவன் மனநிலை பாதிக்கப்பட்டவன் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தின. அந்தச் செயல்பாடுகள் பலருக்குக் கேலியையும், கிண்டலையும் வரவழைத்தன. ஆனால், பாரதிக்குத்தான் 'அகத்திலே அன்பினோர் வெள்ளம்' ஆயிற்றே. அந்தச் சிறுவனை அருகில் அழைத்து, கூடவே அமரச் செய்தார். அவனுக்குச் சாப்பிடத் தின்பண்டங்கள் கொடுத்தார். இது அந்தச் சிறுவனுக்குப் புதுமையான அனுபவம்! வியப்பு மேலோங்க, கொடுத்ததை வாங்கி உண்டான்.

காலப் போக்கில் இது தினம் தினம் நடக்கும் விஷயமாகிப் போனது. அந்தச் சிறுவன் பல நாட்கள் பாரதியுடனேயே தங்கிவிடுவான். இரவு அவர் அருகிலேயே படுத்துத் தூங்குவான். கூட இருந்த பாரதி அன்பர்களுக்கு இது பிடிபடவில்லை. வ.ரா. மற்றும் நண்பர்கள் பாரதியைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். தங்களுக்குள் ஒருவரையொருவர், பாரதி அந்தச் சிறுவனைச் செய்வதுபோல் கன்னத்தைத் தடவிக் கொஞ்சிக் கொள்வார்கள். ஆனால் பாரதியோ மிகவும் நம்பிக்கையாக இருந்தார். 'இது மனம் சம்பந்தப்பட்ட நோய். எனவே, மனத்தை குதூகலம் செய்தால் இந்த நோயை விரட்டிவிட முடியும். அன்பு செய்தால் யார் மனதும் குளிரும். இந்த அன்பின் அதிசயம் மூலம் அவனைச் சரிசெய்துவிட முடியும்' என்று நம்பினார். நண்பர்களுக்கு இதில் நம்பிக்கை இல்லை. எத்தனையோ படிப்புப் படித்த, டாக்டர் பட்டம் பெற்ற மனோதத்துவ நிபுணர்கள் செய்யும் வேலையை, இந்தச் சாதாரண மனிதன் சாப்பாடு ஊட்டிவிட்டுச் சரிசெய்யப் பார்க்கிறானே என்ற ஏளனம்.

ஆனால், ஓரிரு மாதங்கள் கழித்து அந்த நிலைமை மாறிப்போனது. பையன், மற்ற சிறுவர்கள் போல் சாதாரண நிலைக்கு வந்துவிட்டான். பைத்தியம் தெளிந்துவிட்டது. பாரதியின் நண்பர்கள் ஆச்சரியத்தில் கண் விரிக்க, அவரோ, இந்தச் செயலைச் செய்தது தாம் தான் என்ற எண்ணம் சற்றும் இல்லாமல், 'சக்தி தொழிலால்' நடந்தது என்று சந்

# ரகசிய



# மந்திரம்!

'சேவாலயா' முரளிதரன்

தோஷமாய் பிரார்த்தனையில் மூழ்கிவிட்டார். அன்பு, திறக்க முடியாத எந்தக் கதவையும் திறந்துவிடும். எல்லா தடைகளையும் நீக்கிவிடும் ரகசிய மந்திரம் அன்புதான். நீங்கள் தேச பக்தர்களாகவோ, சீர்திருத்தவாதிகளாகவோ ஆகவேண்டுமென்றால், முதலில் உங்களுக்கு அன்பு செய்யத் தெரியுமா? மற்றவர் துன்பம் கண்டு உணர்ச்சி பொங்குகிறதா? அந்த உணர்ச்சி உங்கள் இரத்தத்தில் கலந்து, இதயத் துடிப்பில் ஒன்றாகி விட்டதா? அப்படியென்றால், நீங்கள் தேச பக்தர்தான்; சீர்திருத்தவாதிதான் என்றும், அன்பு செய்தலே தலைவனாக முதல் தகுதியென்றும் முழங்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

**ம**காத்மா காந்திஜியைச் சந்திக்க நேரு, படேல், மௌலானா ஆசாத் போன்ற பல பெரிய தலைவர்கள் காந்தி ஆசிரமத்துக்கு வருகிறார்கள். பிரிட்டிஷ் அரசை எதிர்த்து, நம் நாட்டுச் சுதந்திரத்துக்காக மிக முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய தருணம் அது. ஆலோசனைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மகாத்மா காந்திஜி எழுந்துவிட்டார். மற்ற

> **திறக்க முடியாத எந்தக் கதவையும் திறந்துவிடக் கூடியது அன்பு!**

தலைவர்கள் திகைத்து நின்றபோது அவர் சொன்ன காரணம்: ஆசிரம ஆட்டுக்குட்டி ஒன்றுக்குக் காலில் அடிபட்டு இருக்கிறது. அதற்கு மருந்து போடும் நேரம் வந்துவிட்டது. அதை முடித்துவிட்டு வந்து விடுகிறேன். வெளியே சென்றவர், தம் கையாலேயே ஆட்டுக்குட்டிக்கு மருந்து போட்டுவிட்டு மீண்டும் தேசிய ஆலோசனையில் கலந்துகொள்கிறார். ஆறறிவுடைய உயிர்களை மட்டுமல்லாது, ஐந்தறிவு ஜீவன்களையும் அன்பு செய்த மனது காந்திஜியினுடையது.




ஜெயராமன் என்றொரு நண்பர். திருநெல்வேலிக்காரர். நல்ல மனது. ஒரே ஒரு குறை, சரளமாகப் பேசுவது கொஞ்சம் சிரமம். இதனால் வெளிநாட்டில் கிடைத்த வேலையைச் சரியாகச் செய்ய முடியாமல், மீண்டும் இந்தியா திரும்பி விட்டார். ஒருமுறை இப்படி அடிபட்டு விட்டால், மனம் மிகவும் நொறுங்கிப் போய்விடுகிறது. அடுத்த அடி எடுத்து வைக்க தைரியம் வருவதில்லை. எனவே, வீட்டில் உள்ளவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், மறுபடியும் வேலை தேட மறுத்து விட்டார். மற்ற நண்பர்கள் மூலமாக 'சேவாலயா'வைப் பற்றிக் கேள்விப்பட்டு, இங்கு தன்னார்வத் தொண்டராக வந்து வேலை செய்ய விருப்பம் தெரிவித்தார். எங்களுக்கு முதலில் தயக்கம். இவர் பேசுகிற விதத்தை குழந்தைகள் கிண்டல் செய்து, அவர் மனம் புண்படும்படி எதுவும் ஆகிவிடுமோ என்று தயங்கினோம். பிறகு குழந்தைகளை அழைத்து, தவறாக நடந்துகொள்ளக் கூடாது என்று அறிவுரை செய்த பிறகே, ஜெயராமனை விடுதியில் தங்க அனுமதித்தோம். அதிகம் பேசத் தேவைப்படாத, நூலகப் பராமரிப்பு வேலையை அவருக்குக் கொடுத்தோம். அவர் மாணவர்களுக்கு நூல்களை எடுத்துக் கொடுப்பார்; தானும் நிறையப் படிப்பார். இப்படியே ஓராண்டு காலம் ஓடிவிட்டது. தயக்கம் காரணமாக வெளியாட்களிடம் பேசுவதைத் தவிர்த்து வந்த ஜெயராமன், குழந்தைகள் வந்து பேசப்பேச, அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை. திக்கித் திணறிப் பேச முயற்சித்தார். ஆயிரம் குழந்தைகளுக்கு நடுவில் இருக்கும்போது பேசித்தானே ஆக வேண்டும். சிறிது சிறிதாக அவர் பேச்சு முன்னேற்றம் அடைய ஆரம்பித்தது. சனிக்கிழமை இரவுகளில் சேவாலயாவில் 'நிலா முற்றம்' என்ற நிகழ்ச்சி நடக்கும். மாணவர்கள் ஆடிப்பாட ஒரு சந்தர்ப்பம். அதில் ஒரு முறை ஜெயராமன் கணீர் என்ற குரலெடுத்து 'சின்னஞ்சிறு கிளியே!' பாடினார். அவரைப் பேச வைத்ததும் பாட வைத்ததும் சேவாலயாவின் சின்னஞ்சிறு கிளிகள்தான்!



> **ஜெயராமன் குறையைக் குணமாக்கியவர்கள் speech therapists இல்லை. அன்பு பொங்கித் ததும்பும் குழந்தைகள்**

இன்று மீண்டும் மனவலிமை நிறைய வந்துவிடவே, தைரியமாக வேலைக்கு முயற்சி செய்து, நேர்காணலில் சரியாகப் பேசி, கோயம்புத்தூரில் வேலை கிடைத்துச் சென்று இருக்கிறார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் மீண்டும் சேவாலயா வளாகம் வந்து 'சின்னஞ்சிறு கிளியே' பாடுகிறார். இவர் குறையைக் குணமாக்கிய குழந்தைகள் speech therapists இல்லை. ஆனால், அன்பு பொங்கித் ததும்பும் குழந்தைகள்!

**(சுவாசிப்போம்)**



**பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமின்றி, தேசிய அளவில் இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முகமாகக் காட்சியளிப்பவர் டி.ராஜா. நாம் பேட்டிக்காக அவரை அணுகியபோது, நந்திகிராம் விவகாரம் முதல் நம் ஊர் விஜயகாந்த் வரை சகலமும் பேசினார்...**

**நந்திகிராம் பிரச்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டை கண்டிக்காமல், நீங்களும் அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பது எந்த விதத்தில் நியாயம்?**

''நந்திகிராமில் பல்வேறு வெளி சக்திகள் அரசியல் ஆதாயம் கருதிச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஹால்பியா வளர்ச்சிக் குழுமம், அங்கே ரசாயனத் தொழிற்சாலை வரும் என்று அறிவித்த போதுதான் கொந்தளிப்பான சூழல் உருவாகி, துப்பாக்கிச் சூடு வரை சென்றுவிட்டது. பூமிப் பாதுகாப்பு கமிட்டி வன்முறையிலும் அராஜகத்திலும் இறங்கியதால், 3,000 இடதுசாரி ஆதரவாளர்கள், தங்கள் நிலத்தையும் வீடுகளையும் விட்டு கிராமத்திலிருந்து வெளியேறி, அகதிகள் முகாமில் தங்க வேண்டி வந்தது. கடந்த ஆறேழு மாதங்களாக அந்தப் பகுதி முழுவதையும் பூமிப் பாதுகாப்பு கமிட்டி தன் கைவசம் எடுத்துக்கொண்டது. அரசு செயல்பட முடியவில்லை. அங்கே சகஜ நிலை வர வேண்டும் என்பதற்காகவும் பிரச்னையில் முடிவு காண்பதற்காகவும் 'அங்கு எந்தத் தொழிற்சாலையும் வராது; நில ஆர்ஜிதம் கிடையாது' என்று திட்டவட்டமாக மேற்கு வங்க அரசு அறிவித்துவிட்டது. அதைத் தொடர்ந்து அகதிகள் முகாமில் இருந்த இடதுசாரி ஆதரவாளர்கள் நந்தி கிராமம் திரும்பியதைத்தான் பூமிப் பாதுகாப்பு குழு 'மறு கைப்பற்றல்' என்று சொல்கிறது. அந்த கிராமத்து மக்கள் அங்கேயே திரும்பி வராமல் எங்கே செல்வார்கள்? இதுதான் நந்தி கிராமத்தில் நடந்தது.

# "நேரம்

மற்றபடி சிறப்புப் பொருளாதார மையத்தால் மட்டுமே தொழில் வளர்ச்சி ஏற்படும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1957-ல் வகுக்கப்பட்ட தொழிற்கொள்கை அடிப்படையில் ஏகப்பட்ட தொழிற்சாலைகள் உருவாயின என்பது குறிப்பிடத்தக்கது.''

**இந்திய அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்துவிட்டு இப்போது அமைதியாகிவிட்டது ஏன்?**

''இந்த ஒப்பந்தத்தில், பாதுகாப்பு அம்சங்கள் குறித்த ஷரத்துகளை சர்வதேச அணுசக்தி கமிஷனுடன் சேர்ந்து முடிவு செய்து, பின்னர் அதன் முன் வடிவத்தை கூட்டு கமிட்டியில் வைத்து விவாதிக்க இருப்பதாக மத்திய அரசு சொல்லி இருக்கிறது. அமெரிக்கா முழுக்க முழுக்க சுய நலத்தோடும் ஆதிக்க மனப்பான்மையுடனும் இந்த ஒப்பந்தத்தை நம்மீது திணிக்கப் பார்க்கிறது. ஆனால், இந்த ஒப்பந்தம் இந்தியாவின் சுதந்திரத்தையும் சுய சார்பையும் பாதிக்குமானால், நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டோம். இதனால் மத்திய அரசு கவிழ்ந்தாலும் சரி. எதிர்கால மின் தேவைகளுக்காக இந்த

# நெருங்கிவிட்டது!''

## —மத்திய அரசுக்கு கம்யூனிஸ்ட் எச்சரிக்கை

ஒப்பந்தம் அவசியம் என்று சொல்லும் பிரதமர், 1991-ல் அவர் நிதி அமைச்சராக இருந்தபோது அணுமின் சக்திக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?''

**சரி, மத்திய அரசின் செயல்பாடு திருப்திகரமாக இருக்கிறதா?**

''அதன் பொருளாதாரக் கொள்கைகள் பன்னாட்டு ஏகபோக சக்திகளுக்கு இசைவாகவும், உலக வங்கியின் வழிகாட்டுதலிலும் வகுக்கப்படுகின்றன. விலைவாசி விஷம் போல ஏறிக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் 77 சதவிகித மக்கள், தினசரி



25 ரூபாய்கூட சம்பாதிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஏழை - பணக்காரன் ஏற்றத்தாழ்வு அதிகமாகிறது. விவசாயமும், விவசாயிகளும் கடுமையான நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு, விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டிருக்கிறது.''

**திருப்தியில்லையென்றால் ஆதரவை இன்னும் விலக்கிக் கொள்ளாமலிருப்பது ஏன்?**

''எந்தக் காரணம் கொண்டும் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிட வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்ற அடிப்படையில், ஐ.மு. அரசுக்கு ஆதரவு தொடர்கிறது. ஆனால், மத்திய அரசு தன்னைத் திருத்திக் கொண்டு ஏழைகள் சார்பு கொள்கைகளை அமல்படுத்த வேண்டும். இப்போது நான்காவது வருடமாக ஆட்சி தொடர்கிறது. மத்திய அரசின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து, ஐ.மு. அரசுடன் இடதுசாரிகளின் உறவு முறையை மறுவரையறை செய்ய வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.''

**தேசிய அளவில் மூன்றாவது அணி ஏற்பட வாய்ப்பு உண்டா?**

''நிச்சயமாக இப்போது இல்லை. ஆனால் தொலைநோக்கில், இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து இன்றைக்கு உள்ள அதிகார அமைப்புகளை மாற்றிக் காட்டும் விதமாக, கொள்கை அடிப்படையில் மாற்று அணி உருவாக வேண்டும். இதுபோன்ற அணி அமைய மக்கள் போராட்டமும், தூண்டுதலும் மிக அவசியம்.''

**முல்லைப் பெரியாறு பிரச்னையில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிக்காதது மட்டுமின்றி, புதிய அணை கட்டுவோம் என்று மிரட்டி, தமிழகத்தை வஞ்சிக்கப்**

**பார்க்கிறதே கேரள அரசு!**

''இன்றைக்கு இந்தியா முழுக்கப் பல் வேறு மாநிலங்களுக்கிடையே நதி நீர்ப் பங்கீடு பிரச்னையில் மோதல் இருக்கிறது. மக்களின் உணர்வோடு தொடர்புடைய இதுபோன்ற பிரச்னைகளில், நீதிமன்றத் தீர்ப்புகள் உதவினாலும், பிரச்னைகளுக்கு முடிவு என்பது ஜனநாயக அமைப்பில் பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே சாத்தியம்.''



## ''மக்களின் பிரச்னைகளுக்காக யார் போராடினாலும் அதை வரவேற்போம்!''

**தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் தீவிரமாகிக் கொண்டே போவது குறித்து?**

''டாக்டர்கள் கிராமப்புறத்துக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்கிற கருத்தில் அனைவருக்கும் உடன்பாடு உண்டு. ஆனால், மருத்துவ மாணவர்களை மாணவர்கள் என்ற நிலையில் கிராமங்களுக்கு அனுப்பாமல், நல்ல சம்பளத்துடன் டாக்டர்கள் என்ற நிலையில் அனுப்பினால் மக்களும் அவர்களை அணுகுவார்கள். கிராமப்புற சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் முதலில், நவீன மருத்துவ சாதனங்களை நிறுவ வேண்டும். கிராமப்புறத்தில் பணியாற்றினால் பட்டமேற்படிப்பில் இடம் உண்டு என்று சலுகை காட்டினால், நிறைய புதிய மருத்துவப் பட்டதாரிகள் கிராமப்புறங்களுக்குச் செல்வார்கள். இதற்காக போடப்பட்டிருக்கும் கமிட்டி என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். தங்கள் கோரிக்கைகளுக்காக போராட மாணவர்களுக்கு உரிமை உண்டு; அதே சமயம் அவர்களால் சேவை பாதிப்பு அடையக் கூடாது.''

**தமிழ்நாட்டில் நடிகர்கள் விஜயகாந்த், சரத்குமார் ஆகியோர் பல பிரச்னைகளில் மக்கள் கருத்தை எடுத்துப் போராடுகிறார்கள். அவர்களுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து செயல்படுமா?**

''நாங்கள் தேர்தலின்போது தி.மு.க.வோடு அணி அமைத்தோம். அதன்பின் தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்துக்குள்ளேயும், வெளியேயும் பல மக்கள் பிரச்னைகளை எடுத்து வைத்துப் போராடி இருக்கிறோம். முதல்வருடன் உள்ள இணக்கமான சூழலைப் பயன்படுத்தி பல பிரச்னைகளை அவரது நேரடி கவனத்துக்கே கொண்டு சென்றிருக்கிறோம். இந்த நிலையில் சாமான்ய உழைக்கும் மக்களின் பிரச்னைகளுக்காக யார் போராடினாலும் நாங்கள் அதை வரவேற்போம்.''

**– ப்ரியன்**

படங்கள் : **ராஜன்**



கட்டி வந்தது எனக்குத் தெரியும். என் பெரியப்பா - சித்தப்பா வழி வந்தவர்கள் ஜாதகப் பொருத்தத்துக்கு ரொம்ப முக்கியத்துவம் தருவார்கள்.

ஆனால், என் தகப்பனார் கல்கி கிருஷ்ணமூர்த்தி இதற்கு நேர்மாறானவர். ஜாதகம், ஜோதிடம், ராகு காலம், அஷ்டமி, நவமி, எமகண்டம் எல்லாமே

# காதல் கல்யாணங்கள்

சேதுராமன் எனக்கு இன்னொரு மகன்போல. என் பெரியப்பா பேரன். ஒன்று விட்ட அண்ணா மகன். லயோலாவில் எம்.காம். முடித்து இந்தியன் வங்கியில் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து, இன்று அதே வங்கியில் ஆபீஸர்களுக்குப் பயிற்சி தரும் பொறுப்பில் பெரிய ஆபீஸராக இருக்கிறான். ஒரு நாள் சேது ஃபோன் செய்து, ''சித்தப்பா, நல்ல நியூஸ்! என் மகளுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கேன்'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று சொல்லி மாப்பிள்ளை பற்றி விவரமாக விசாரித்துத் தெரிந்துகொண்டேன். வெளிநாட்டில் பெரிய உத்யோகம். ஆனால், தமிழ் மண்ணில் வேரூன்றிய நல்ல குடும்பம்.

''ரொம்ப நாளா முயற்சி பண்ணிண்டிருந்தே. உன் முயற்சி வீண்போகலை. கடைசியில் சூப்பரா மாப்பிள்ளை அமைஞ்சுட்டார்'' என்று வாழ்த்தினேன்.

சேதுராமன் தன் மகளுக்காகப் பலரிடம் ஜாதகம் வாங்கிப் பொருத்தம் பார்த்து, வடி அவருக்கு மூடநம்பிக்கைகள். இவற்றைக் கிண்டலடித்தும் நிந்தித்தும் அவர் எழுதியுள்ள கதை, கட்டுரைகள் ஏராளம். அலகு குத்திக்கொள்வது, தீ மிதிப்பது போன்றவையெல்லாம் அவரைப் பொருத்தமட்டில் அநாகரிகம்.

இதற்கு அவருடைய ஆரம்பகால குரு ஈ.வே.ராமசாமி நாயக்கர் ஒருவேளை காரணமாக இருந்திருக்கலாம். ஈ.வே.ரா.வுக்கும் ராஜாஜிக்கும் இடையே நிலவிய நட்புறவும் பலரும் அறிந்ததுதான். ஈ.வே.ரா., அந்த ஆரம்ப நாட்களில் காங்கிரஸில்தான் தொண்டாற்றி வந்தார். திராவிடர் கழகம் பின்னால் தோன்றியதுதான். அவருடைய பகுத்தறிவுச் சிந்தனைகளை கல்கி ஏற்றுக்கொண்டார் என்றாலும் நாத்திகராக மாறிவிடவில்லை. தெய்வ பக்தியும் பித்ரு பக்தியும் அவருக்கு ரொம்ப உண்டு. அண்ணாவைப் பிரிந்து கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்து தனிக்குடித்தனம் நடத்தியதால், தந்தைக்கு இவரும்

கல்கி ராஜேந்திரன்

சிராத்தம் தப்பாமல் செய்வார். ஹோமப் புகையால் பாதிக்கப்பட்டு ஆஸ்த்துமா அதிகமாகிவிட, இரவெல்லாம் அவதிப்படுவார்.

அந்த நாளில் பெயருக்குப் பின்னால், ஐயர், அய்யங்கார் என்று சேர்த்துக்கொள்வது ரொம்ப சகஜம். 'கல்கி' என்றுமே கிருஷ்ணமூர்த்திதான். தினசரி நெற்றிக்கு பட்டையாக விபூதி இட்டு, மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்காரும் வழக்கம் அவரிடம் இல்லை. அதற்கு நேரமும் இருந்ததில்லை. ஆனால் சந்தியாவந்தன மந்திரங்கள், ருத்ரம் - சமகம் எல்லாம் மாணவப் பருவத்திலிருந்தே அத்துப்படி. இருப்பினும் எனக்கோ, என் சகோதரி ஆனந்திக்கோ ஜாதகம் கணிக்க அவர் முற்படவேயில்லை. எனக்குக் காது குத்த வேண்டாம் என்றும் தீர்மானமாகக் கூறி விட்டார். ''ஆண் குழந்தை கடுக்கன், தோடு, ஜிமிக்கி என்று போட்டுக்கொள்ளப் போகிறானா என்ன? எதற்கு குழந்தையைத் துன்புறுத்தணும்?'' என்று கூறிவிட்டார்.

மகள் ஆனந்தி திருமண வயதை எட்டிய பிறகு, சில வரன்களை யோசித்தார். அவள் ஜாதகமே கணிக்கப்படவில்லை என்பதால் எல்லைகள் சுருங்கிப் போயின. ஜாதகம் பற்றிக் கவலைப்படாத குடும்பங்களில் இருந்த சில இளைஞர்கள் பற்றி மனைவியிடம் கலந்தாலோசித்தார்.

இச்சமயத்தில் சென்னைக்கு வந்து, சதாசிவம் - எம்.எஸ். தம்பதியின் விருந்தோம்பலை அனுபவித்துக் கொண்டிருந்த டி.கே.சி., கல்கியும் உடனிருந்த சமயம் பார்த்து, ''கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு யாரேனும் நெய் தேடி அலைவார்களோ?'' என்று கேட்டார்.

யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. டி.கே.சி. கல்கியைப் பார்த்தார். ''மாப்பிள்ளை தேடுகிறீங்களாமே, மாப்பிள்ளை! பக்கத்திலேயே அம்பியை வைத்துக் கொண்டு பம்பாயிலும் டில்லியிலும் தேடினால் எப்படி அகப்படுவான்?'' என்றார்.

அம்பி என்று அவர் குறிப்பிட்டது, சதாசிவத்தின் மருமான் ராமச்சந்திரன். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து சகோதரி தங்கத்துடன் சதாசிவம் - எம்.எஸ். தம்பதியின் நிழலில் ஒதுங்கி வளர்ந்தவர்.

எல்லோருக்குமே டி.கே.சி. சொன்னது முதலில் சற்று திகைப்பாகவும் பிறகு நியாயமாகவும், அப்புறம் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

சுபஸ்ய சீக்கிரம் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.


எங்கள் குடும்பத்தில் கல்யாணத்துக்குப் பிறகு தம்பதியிடையே காதல் துளிர்விட்டு வளர்ந்து பயன் தந்தது உண்டு. காதல் மலர்ந்து மணம் பரப்பி, திருமணத்தில் முடிந்து கனிந்ததும் உண்டு.


சதாசிவத்தின் சுவீகார புத்திரன் 'கண்ணா குட்டி' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட தியாகராஜன், காதல் வயப்பட்டான். அப்பாவிடம் சொல்ல பயம். அவர் முன்கோபம் பலரும் அறிந்தது. யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். சதாசிவம் குளித்துக் கொண்டிருக்கும்போது கதவைத் தட்டினான். ''அப்பா! ஒரு விஷயம்!'' என்றான்.

''என்ன?'' என்ற அதட்டலான குரல் உள்ளே இருந்து ஒலித்தது.

''ஒண்ணுமில்லை, I've fallen in love; I'm getting married" என்றான்.

* ராமச்சந்திரன் - ஆனந்தி திருமணத்தின்போது ராஜாஜி...





* உஷா - தியாகராஜன் தம்பதி

''ஒண்ணுமில்லையாவது! It is everything! Congratulations! Go ahead! All the best!" என்று ஒரு கணமும் தாமதியாமல் மூடிய கதவுக்குப் பின்னாலிருந்தே சதாசிவத்தின் அனுமதி கிடைத்தது.

காரியம் இவ்வளவு சுலபமாக முடிந்ததில் ஆச்சர்யமும் சந்தோஷமும் ஒருங்கே ஏற்பட, கண்ணாகுட்டி எடுத்தான் ஓட்டம்! அப்பாவை நேரில் சந்திக்கும் துணிவு மறுநாள்தான் உண்டாயிற்று அவனுக்கு.

அப்புறம் காலாகாலத்தில் விசாரணைகள் நடந்து, சம்பந்தம் பேசி, நல்ல நாள் குறித்து, உஷாவுக்கும் தியாகராஜனுக்கும் கல்யாணம் திருநீர்மலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது - கல்கி காரியாலய வளாகத்தில் வரவேற்பும் நடந்தது.

ஒரு நாள் அதிகாலையில் என்னைக் காண என் வீட்டுக்கு ஓர் இளைஞர் வந்தார். ''நான்தான் ராம்நாராயண்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர் ஒரு கிரிக்கெட் வீரர் என்றும் சிறந்த 'ஸ்பின் போலர்' என்றும் ஏற்கெனவே அறிந்திருந்தேன்.

உள்ளே அழைத்துப்போய் அமரச் செய்து, ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தேன்.

தமக்கும் எனது சகோதரி மகள் கௌரிக்கும் இடையில் மலர்ந்திருந்த காதல் பற்றிக் கூறி முடிப்பதற்குள், மன நெகிழ்ச்சியில் ராம்நாராயண் கண்களில் நீர் திரையிட்டு விட்டது! இருவரும் மாநிலக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட நேயம்.

மேலும் விசாரித்து, குடும்பப் பின்னணி தெரிந்துகொண்டு திருப்தி அடைந்தேன். சிக்கல் என்னவென்றால் என் சகோதரி ஆனந்தி, மகளுக்கு ஏற்கெனவே வரன் பார்த்து முடித்திருந்தாள். காலதாமதமாக என் உதவியை நாடியதற்கு, கொஞ்சம் ராம்நாராயணைக் கடிந்துகொள்ளவும் செய்தேன்.

பின்னர், ''நான் உங்களுக்கு உதவுகிறேன்; ஆனால் அதற்கு முன் உங்கள் காதல் நிலையானது என்று எனக்குத் தெரிய வேண்டும்'' என்றேன். ராம்நாராயண் உறுதி அளித்தார். கௌரியிடமும் தனியே பேசி நிச்சயப்படுத்திக் கொண்டேன்.

சகோதரி ஆனந்தியிடம் இது பற்றிப் பேசினால் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. குடும்பத்தில் பெரியவர் சதாசிவம்தான். அவரிடம் சென்று, ''ஒரு முக்கிய விஷயம்; I am afraid Gowri has fallen in love" என்றேன்.

"Why should you be afraid of that? It is only natural" என்று உடனே சொன்னார்.

''இல்லை... உங்களுக்குத்தான் தெரியுமே; ஆனந்தி ஏற்கெனவே மாப்பிள்ளை தேர்ந்தெடுத்து...''

''அதுக்கென்ன பண்றது? ஆனந்தி தனக்குப் பிடித்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுக்கலாம்; ஆனால் கௌரிதானே தனக்குப் பிடித்த கணவனைத் தேர்ந்தெடுக்க முடியும்? பாவம், குழந்தை இத்தனை நாளாகச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் மனசுக்குள் என்ன பாடு பட்டாளோ!'' என்றார்.

'காரியம் வெற்றி' என்று நினைத்துக் கொண்டேன். அப்புறம் சதாசிவம் அவர்களே முன்னின்று எல்லாரையும் சமாதானப்படுத்தியும் உற்சாகப்படுத்தியும் நிலைமையைச் சரிக்கட்டி கல்யாணத்தை முன்னின்று பிரமாதமாக நடத்தி வைத்தார். அந்தத் திருமணமும் கல்கி காரியாலய வளாகத்திலேயே நடைபெற்றது.

இந்த இரு திருமணங்களின்போதும் எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியைத் தாம் சந்தித்து, காதலித்துத் திருமணம் செய்துகொண்ட நினைவுகள் சதாசிவம் மனத்தில் அரங்கேறியிருக்கலாம்தானே!

(பேசுவோம்)

# உருகும் இதயம்!













**தொலைக்காட்சி உலகம் - பவா சமத்துவன், புதுயுகம் செய்முறை செம்மையாக்கம், சென்னை - 5, விலை ரூ.300**

தொலைக்காட்சிப் பணிகளின் பல விதமான பிரிவுகளில் தகவல்களைத் தேடிச் சேகரித்து, ஊடகத்துறை அறிவுக் களஞ்சியமாக இந்நூலைத் தந்திருக்கிறார் பவா சமத்துவன். தொலைக்காட்சியின் தோற்ற வரலாறு, நிர்வாகம், பன்முகச் செயற்பாடுகள், மக்கள் பயன்பாடு போன்றவற்றை பொதுமக்கள் புரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டுள்ள இந்நூல், தமிழின் முதல் முழுமையான தொலைக்காட்சி ஊடக நூல்! ஊடகங்களைச் சார்ந்தவர்களின் கருத்துகள், தகவல்கள் மட்டுமில்லாமல், தொழில்நுட்பம் குறித்தும் பதிவு செய்யப்பட்டிருப்பதால், ஊடகங்களை நோக்கிப் படையெடுக்கும் இளைஞர்களுக்கு, இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

**கண்டேன் கயிலையான் பொற்பாதம் - டாக்டர் என்.கங்கா, விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02. விலை ரூ.65**

திருக்கயிலாய யாத்திரை அனுபவங்கள். கயிலையானின் பொற்பாதம் காண, பயணம் மேற்கொள்ளும் யாவருக்கும் தேவையான அனைத்து விவரங்களும் நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன.

**உள்ளத்தில் உறுதி இருந்தால் - நட. சங்கர், ஜெயக்கொடி பதிப்பகம், 9/14, கூரிச் சாத்தான் ஐய்யனார் கோயில் தெரு, இராமநாதபுரம். விலை ரூ.30**

சமுதாயத்தில் காணப்படும் குறைகளைச் சாடி, நடப்புச் சம்பவங்களை செய்திக் கவிதைகளாக வார்த்திருக்கிறார் நட.சங்கர். எப்படிச் சொல்கிறோம் என்பதைவிட, எதைச் சொல்கிறோம் என்பதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

**கடவுளின் குழந்தைகள் - விஜயகுமாரி சி.சி., சிவசக்தி காக்கும் கரங்கள், 3/16, பொன்னியம்மன் கோயில் தெரு, ஆலப்பாக்கம், போரூர், சென்னை - 16. விலை ரூ.250**

நூலாசிரியரின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகள், சிவசக்தி காக்கும் கரங்கள் காப்பகத்தின் வரலாறு, அங்குள்ள குழந்தைகள் - முதியோர்கள் குறித்து இதயம் உருகும் விதமாக எழுதப்பட்டுள்ள சுயசரிதை புத்தகம். மனவளர்ச்சி குன்றிய காப்பகத்துக் குழந்தைகளைப் பற்றிய தகவல்கள் நெகிழ வைக்கின்றன. மாற்றுத் திறன் கொண்டோருக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்து வரும் விஜயகுமாரியின் வாழ்வு யாவருக்கும் பாடமானது!

- மித்ரா

**சுசீலாவை அடக்கி விட்டாலும் எனக்கு உறுத்தலாகவே இருந்தது- 'இங்கு எத்தனை நாள் இருக்க முடியும்!'**

# மகாநதி

## பாலுசத்யா

தண்ணீர் நாற்றமெடுத்தது. குழாயிலிருந்து வந்து விழுகிற தண்ணீரை முகர்ந்து பார்த்துவிட்டுப் பயன்படுத்துகிற என் எச்சரிக்கை உணர்வு அன்றைக்கு எங்கே போனதென்று தெரியவில்லை. தண்ணீரை அப்படியே கைகளில் ஏந்தி, கொப்பளிப்பதற்காக வாயில் கொட்டியிருந்தேன். நாற்றம் சகிக்க முடியாததாக இருந்ததில் குமட்டிக் கொண்டு வந்தது.

'இன்னிக்கிக் குளிக்க முடியாது' கைகளைக் கைலியில் துடைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தேன். சுசிலா சுருண்டு படுத்திருக்க, தமிழ்ச்செல்வன் அவள் பக்கத்தில் குப்புறப்படுத்திருந்தான். உறங்கும் போது குழந்தைகள் கொள்ளை அழகாக இருக்கிறார்கள். அவனுடைய ஈர ஜட்டியைக் கழற்றி, போர்வையால் போர்த்தினேன்.

இரண்டு பிளாஸ்டிக் குடங்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன். அந்த காம்பவுண்டில் இருந்த அத்தனை வீட்டுக் கதவுகளும் குளிருக்குப் பயந்து மூடிக்கிடந்தன. தலைக்குத் துண்டையாவது கட்டிக்கொண்டு வந்திருக்கலாம் என்று தோன்றியது. அதிகாலைக் குளிர் ஜலதாரை போல் இறங்கிக்கொண்டிருந்தது. தெரு முக்கு பம்ப்பில் என்னை வெறுப்பேற்றுவது போல சுமார் இருபது பேர் நின்றிருந்தார்கள். வரிசையாக வைக்கப்பட்டிருந்த குடங்கள் வளைந்து, வளைந்து ரோட்டுக்கு நடுவே ஒரு புதுப் பாதையைப் போட்டிருந்தன. நான் குடங்களை வரிசையில் வைத்தேன்.

''உங்க லைன்லயும் தண்ணி நாத்தமெடுக்குதா?'' எனக்கு முன்பாக நின்றிருந்த எதிர்வீட்டு அம்மாள் கேட்டாள்.

''ஆமா.''

''பத்து நாளா இதே பாடா இருக்கு. பத்து பேரு மொத்தமா சேர்ந்து போய் கம்ப்ளெயிண்ட் பண்ணினா சரி பண்றதுக்கு யாராவது வருவாங்க. எல்லாரும் வேலை, வேலைன்னு போயிட்டா என்னா பண்றது?''

''எங்க போயி கம்ப்ளெயிண்ட் குடுக்கணும்?''


''நம்ம கவுன்சிலர்கிட்ட சொல்லிட்டாப் போதும். அவரு பாத்துப்பாரு.''

ஆர்வத்தால் கேட்டுவிட்டேனே தவிர, என்னால் நிச்சயமாகப் போக முடியாது. அலுவலகத்தில் இதற்கெல்லாம் லீவு கொடுக்க மாட்டார்கள். கைக்குழந்தையை வைத்துக்கொண்டு சுசிலாவாலும் தனியே போக முடியாது. முதல் ஆளாக பம்ப்பை அடித்துக்கொண்டிருந்தவர், ஆவேசம் வந்ததுபோல அடித்துக்கொண்டிருந்தார்.

நான் திரும்பிப் பார்த்தேன். காம்பவுண்டு வாசலில் வீட்டுக்கார அம்மாள் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார். 'அதே நாற்றமெடுத்த தண்ணீராகத்தான் இருக்கும்.' எனக்கு மறுபடியும் குமட்டுவது போல இருந்தது. எதிர்வீட்டு அம்மாளிடம் சொல்லிக்கொண்டு டீக்கடைப் பக்கம் நகர்ந்தேன்.

சென்னை, எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட்டிலிருந்து வேர்களைப் போல, குறுக்கு நெடுக்காக விரியும் தெருக்களில் ஒன்றில் நாங்கள் குடியிருந்தோம். அதை வீடு என்று சொல்ல

# விழிப்புணர்வுக் கதை – 6



முடியாது. நான்கு சுவர்களும் ஒரு கதவும் இருந்தால் அது வீடாகிவிடுமா? பன்னிரண்டுக்குப் பத்து அறை. ஜன்னல்கள் இல்லை. பனிக்காலத்தில் ஆளைக் கொல்லும் குளிர். மற்ற காலங்களில் வியர்வை, புழுக்கம், கொசுக்கடி. நானும், சுசீலாவும், குழந்தையும் ஒண்டிக்கொள்ள ஓர் இடம் கிடைத்ததே என்ற அளவில் மனத்தைத் தேற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

இப்போதெல்லாம் சென்னையில் முப்பதாயிரம் ரூபாய் அட்வான்ஸுக்குக் குறைந்து வீடு கிடைப்பதில்லை. அவ்வளவு பணத்துக்கு என் போன்றவர்கள் என்ன செய்வார்கள்? ஏழாயிரம் ரூபாய் அட்வான்ஸுக்குக் கிடைத்த வீடு என்பதால், சில சங்கடங்களைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

இதற்கு முன் தாம்பரம் சானடோரியத்தில் குடியிருந்தோம். கொஞ்சம் விசாலமான வீடு, ஆசுவாசமாக இழுத்து மூச்சுவிடக் காற்று, பாலாற்றுத் தண்ணீர்... என சுகவாசம்தான். ஆனால், என் அலுவலகம் ஆழ்வார்பேட்டையில் இருந்தது.

காலை ஏழு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பினாலும், அலுவலகம் வந்து சேருகிற வரை டிராஃபிக் ஜாம் டென்ஷன் கொஞ்ச நஞ்சமல்ல. பயணத்திலேயே தினமும் நான்கைந்து மணி நேரங்களைத் தொலைக்க வேண்டியிருந்தது.

''ஏங்க! பேசாம சிட்டிக்குள்ளயே ஒரு நல்ல வீடாப் பாருங்களேன். இங்க குடுக்கற வாடகையை அங்க குடுக்கப் போறோம். பஸ், டிரெயின் செலவாவது மிச்சமாகுமில்ல.''

சுசீலா சொன்னது நியாயமாக இருந்தது. அந்தப் புறநகரில், முகதாட்சண்யம் பார்க்கிற, ஆதரவாகப் பேசுகிற ஒன்றிரண்டு நல்ல




மனிதர்களை விட்டுவிட்டு வருவதுதான் சிரமமாக இருந்தது. ஆனாலும் வந்தோம்.

ஆழ்வார்பேட்டையை ஒட்டிய மைலாப்பூர், மந்தைவெளி, தேனாம்பேட்டைப் பகுதிகளில் வீட்டு வாடகை யானைத் தீனி விலையென்றால், அட்வான்ஸ் முழுக் குதிரை விலையாக இருந்தது.

ஒரு வீட்டுத் தரகரோடு, இரண்டு நாள் அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு நாயாக அலைந்ததில் ஏழாயிரம் ரூபாய் அட்வான்ஸ், ஆயிரத்தி ஐநூறு ரூபாய் வாடகைக்கு எம்.ஜி.ஆர். நகரில்தான் வீடு கிடைத்தது.

காம்பவுண்டில் எதிரெதிராக ஆறு வீடுகள் (மன்னிக்கவும் கொட்டடிகள்). மாடியில் எட்டு வீடுகள். ஜன்னல்களில்லாத, சூரிய வெளிச்சம் எட்டிப் பார்க்காத வீட்டை, 'பிடிச்சிருக்கு' என்று மாடு மாதிரித் தலையாட்டியபடி சொன்னேன். பகலில்கூட லைட் எரிந்தால்தான் வீட்டில் வெளிச்சம் இருக்கும். ஆறு வீடுகளுக்கும் பொதுவாக ஒற்றைக் குளியலறை, கழிவறை.

தண்ணீர்? வீட்டுக்கார அம்மாள் பாத்ரூமை ஒட்டியிருந்த குழாயைக் காட்டினார். "கார்ப்பரேஷன் தண்ணிதான். எந்த வீட்டுக்கு வந்தாலும், வராட்டியும் இங்க இருபத்திநாலு மணி நேரமும் வரும். வீடு இறக்கத்துல இருக்குல்ல... அதான்."

குழாயைத் திருகிப் பார்த்தேன். அந்த நான்கு மணி மதியப் பொழுதில், தண்ணீர் 'பொதபொத'வென அருவியாகக் கொட்டியது. ஆச்சரியமாக இருந்தது. சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் இல்லாத இப்படி ஒரு வீடா? கேள்வி கேட்காமல் அட்வான்ஸ் கொடுத்தேன். இரண்டே நாளில் புது வீட்டுக்குக் குடிபோனோம்.

குடி வந்ததற்கு அடுத்த நாள் காலை, கழிவறைக்கு வெளியே இருந்து சுசிலா கத்தினாள்.

"ஏங்க! இங்க வாங்க!"

"என்ன?"

"தண்ணி... சாக்கடை நாத்தம் அடிக்குது?"

என் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் வீட்டுக்கார அம்மாளின் வீடு. குரல் கேட்டு எட்டிப் பார்த்தார்.

"இன்னிக்கு தண்ணி வராத நாள் இல்ல... அப்பிடித்தான் நாத்தமடிக்கும்."

"தண்ணி எப்ப வரும்?"

"என்னா தம்பி! படிச்சவுங்க. உங்களுக்குத் தெரியாதா? ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் கார்ப்பரேஷன்ல தண்ணி விடுவாங்க."

நான் சுசிலாவைப் பரிதாபமாகப் பார்த்தேன். சில நாட்களிலேயே தண்ணீரின் சாயம் முழுக்க வெளுத்துப் போனது. ஒன்று, கலங்கிய நிறத்தில் இருக்கும். அல்லது, மிக அதிகமாக குளோரின் வாடை அடிக்கும். சில சமயங்களில் தண்ணீரில் புழுக்கள் கூட நெளிந்தன.

என்னதான் நன்கு கொதிக்க வைத்து, ஆற வைத்த தண்ணீரைக் குடித்தாலும் அதன் மீதான அருவருப்பு தீரவில்லை. குடிக்க மட்டும் மினரல் வாட்டர் வாங்கினோம். மூன்று நாளைக்கொரு முறை ஒரு கேன் வாங்க வேண்டியிருந்தது.

இந்தத் தொல்லை போதாதென்று, தெரு முக்குத் தாண்டி ஒயின்ஷாப் இருந்தது. போதை தலைக்கேறிய 'குடி'மகன்கள் எங்கள் காம்பவுண்ட் வாசலில் நின்றுதான் சத்தம் போட்டார்கள்; சண்டை போட்டார்கள். சில சமயம் அடித்துக்கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் இரவு பன்னிரண்டுக்கு மேல்தான் இந்த ஓசைகள் மட்டுப்பட்டன.

எங்கள் காம்பவுண்டுக்கு அடுத்த வீட்டில் இருந்த கசாப்புக் கடைக்காரர், நடுத் தெருவில் வைத்து ஆடுகளை வெட்டுகிறவராக இருந்தார். ஞாயிறு, புதன், சனி ஆகிய கிழமைகளில் கழுத்தறுபட்ட ஆடு கதறும் ஓசைதான் எங்களை எழுப்பும்.

ஒரே வாரத்தில் சுசீலா புலம்ப ஆரம்பித்துவிட்டாள். ''வேற வீட்டுக்குப் போயிடலாங்க.''

''இதென்ன கபிஸ்தலம்னு நெனச்சியா? மெட்ராஸு. நெனச்சப்போல்லாம் வீட்டை மாத்த முடியாது. அப்படி இப்படித்தான் இருக்கும். நாமதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகணும்.''

சுசீலாவை அடக்கிவிட்டாலும் எனக்கு உறுத்தலாகவே இருந்தது. 'இங்க எத்தனை நாள் இருக்க முடியும்?'

ஒரு நாள் விட்டு ஒரு நாள் நாற்றமெடுத்துக் கொண்டிருந்த தண்ணீர், கடந்த பத்து நாட்களாக தினமும் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்திருந்தது.

முதலில் நான்கைந்து வீடுகளுக்கு மட்டும் தண்ணீர் வடிவில் போய்க் கொண்டிருந்த அந்தச் சாக்கடை நீர், தெருவிலிருந்த பாதி வீடுகளுக்குப் போக ஆரம்பித்திருந்தது.

''இந்த வீடு வேணாங்க'' சுசீலா மறுபடியும் சொன்னாள்.

''குறக் குடிசை மாதிரி டேராவத் தூக்கிட்டே இருக்கச் சொல்றியா? அதுக்கு வேற ஆளைப் பாரு.'' எரிச்சலையெல்லாம் கூட்டி வைத்துக் கத்தினேன். அவளை மட்டும்தானே என்னால் திட்ட முடியும்?

**டீ**க்கடையிலிருந்து திரும்பி வந்தபோது, என் குடத்துக்குப் பின்னால் பத்துக் குடங்கள் முளைத்திருந்தன.

''சார்! ராமாயி வீட்லதானே இருக்கீங்க?''



## சொல்லி அடிச்ச கில்லி!

''**வி**தவிதமான கெட்டப்புல வர்றதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. என்னோட சமீபத்திய படங்கள் எல்லாமே ஒண்ணுக்கொண்ணு மாறுபட்ட ரசனையோடு இருந்திருக்கு; இனியும் இருக்கும்'' என்கிறார் கரண்.

இந்த வரிசையில் அடுத்து 'காத்தவராயன்' படத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவராக நடிக்கிறார். புதுமுக இயக்குநர் சலங்கைத் துரையின் கனவு, 'கரணுக்கு அடுத்த ஹிட் ரெடி' என்கிறது.

''தப்பான தொழில் செய்யுற எல்லோருமே தனக்குன்னு ஒரு காரணத்தை வச்சிருப்பாங்க. காத்தவராயனும் அதுல விதிவிலக்கில்லை. அவனோட வாழ்க்கைய சுத்திப் பின்னப்பட்ட கதை, ரொம்ப கச்சிதமா வந்திருக்கு. இது அதிரடி ஆக்ஷன் படம். கரண் சார் இதுவரை ஏற்காத பாத்திரம். முரட்டு மீசையோடு செட்ல அவரைப் பார்க்கும்போதே ச்சும்மா அள்ளும். அந்த முரட்டு மனசுக்குள்ளயும் அழகான ஒரு காதல் வரும். அதை இன்னும் சுவாரஸ்யமா சொல்லியிருக்கோம். படத்துக்கு இன்னொரு பெரிய ப்ளஸ் வடிவேலு சார். அவரோட அளப்பறையைப் பார்த்து, ஜனங்க துள்ளப் போறாங்க பாருங்க'' என்று சலங்கைத் துரை முடிக்க, கரண் தொடர்ந்தார்... ''அவரு சொல்றது எதுவும் மிகையில்ல பாஸு... சொல்லி அடிச்சோம்ல கருப்பசாமில. அதுபோல இதுலயும் அடிக்கப் போறோம் கில்லி.''

– ரேவதி




என்னுடன் வரிசையில் நின்றிருந்தவர் கேட்டார்.

''ஆமா''

''உங்க பக்கத்து வீட்டு செப்டிக் டேங்க் தான் லீக்காவுதாம்'' என கிசுகிசுத்தார்.

நான் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தலையாட்டினேன். அவருக்கு அந்த வீட்டு மனிதர்கள் மீது என்ன கடுப்போ!

இரண்டு குடம் தண்ணீர் பிடித்து, முகம் கழுவி, இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு அலுவலகம் கிளம்பும்போது, மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது. தெரு முக்குவரை போய்விட்டுத் திரும்பி வந்தேன்.

''தண்ணிக்கு நீ என்ன பண்ணுவே சுசீலா?''

''அய்ய... இதுக்காகவா திரும்பி வந்தீங்க? பதினோரு மணிக்கு மேல தெருக் குழாய்ல கூட்டம் குறைஞ்சிடும். நான் பாத்துக்கறேன்.''

''குழந்தை?''

''அவன் தூங்கிடுவான். அதான் நான் பாத்துக்கறேன்னு சொல்றேன்ல. நீங்க கௌம்புங்க.''

அன்றைக்கு அலுவலகம் விட்டுத் திரும்பியபோது, வாசலில் இரண்டு இடங்களில் குழி தோண்டி, மண் வெளியே குவிக்கப்பட்டிருந்தது.

சட்டையைக் கழற்றும்போது சுசீலா சொன்னாள், ''இன்னிக்கி மெட்ரோ வாட்டர்லருந்து ஆள் வந்தாங்க. கார்ப்பரேஷன் குழாய், டிரெயினேஜ் ரெண்டும் பக்கத்துல பக்கத்துல ஓடுதுங்க. ஏதோ அடைப்பிருக்குங்கறாங்க. நாளைக்கி சரி பண்ணிடுவாங்களாம்.''

நான் தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டேன். அன்று இரவு பதினோரு மணிக்கு மேல் தெருக் குழாய்க்குப் போய், ஏழு குடம் தண்ணீர் அடித்துக்கொண்டு வந்தேன். சொல்லச் சொல்லக் கேட்காமல், சுசீலா கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு, நான் தண்ணீர் எடுத்து வரும்வரை வாசலிலேயே நின்றிருந்தாள்.

'இப்பவாவது சொல்றதைக் கேளுங்க.வேற வீட்டுக்குப் போயிடலாம்' என்று அவள் சொல்லிவிடுவாளோ என்று எனக்குப் பயமாக இருந்தது.

அடுத்த நாள் நான் அலுவலகம் விட்டு வந்த பொழுது, குழிகள் மூடப்பட்டிருந்தன.

''இன்னிக்கு என்ன ஆச்சு?'' நான் முந்திக்கொண்டு கேட்டேன்.

''சரி பண்ணிட்டாங்க'' என்றாள் சுசீலா.

''சரி பண்ணிட்டாங்களா? எப்படி?''

''ஒரு லாரி நெறயத் தண்ணி கொண்டு வந்தாங்க. கார்ப்பரேஷன் குழாய்க்குள்ள ஒரு டியூபை விட்டுத் தண்ணியைப் பீச்சி அடிச்சாங்க. ஒரு லாரித் தண்ணி! இப்போ நம்ம குழாய்ல தண்ணி சுத்தமா வருது.''

''அவ்வளவுதானா? குழாய்க்குள்ள தண்ணியைப் பீச்சி அடிச்சாப் போதுமாமா?''

''ஆமா.''

நான் குழாயடிக்குப் போய் தண்ணீரை முகர்ந்து பார்த்தேன். தண்ணீர் நாற்றமடிப்பது போலத்தான் இருந்தது.

# வரையறை தாண்டும் வளையல்கள்



கிராபியென் ப்ளாக்

முன்பனி பெய்யத் தொடங்குகையில்
தெருவில் இறங்கி
கோலமிடத் தொடங்குகிறாய்
புள்ளிகளை அழித்தும் சேர்த்தும்

உன் கைகளுக்குள் சிக்கிக்கொள்ளும்
கோலப்பொடிகள் புள்ளிகளாய் தொடங்கி
கோடுகளாய் நீண்டு வர்ணங்களாய்
தெருவை அடைகாத்து நிற்கின்றன

வர்ணங்களை வாரியிறைக்கிறாய்
தெருவெங்கும்
கோலத்தின் வரையறையைத்
தாண்டுகின்றன
சப்தமிட்டபடியே உன் வளையல்களும்

கோலத்தைச் சுற்றிச் சுற்றியே
வருகிறது உன் நடனம்
நீயே கோலமாகிறாய்
வெளியேற வழியின்றி கோடுகளுக்குள்
சிக்கிக்கொள்கின்றன புள்ளிகள்

பின்பனியில் உறையத் தொடங்குகிறது
உன் கோலம் அழிந்த பின்னிரவு
விடிந்தவுடன் மிதிபட மிதிபட
மேலும் அழகாகிறது
நீ வரைந்த கோலம்

தீபாவளி ரேசில் வேல் முந்தியதில் ஹரிக்கு ஏக சந்தோஷம். ''பின்னே என்னங்க, தொண்ணூறு நாட்கள் பிளான் பண்ணோம். எண்பத்தெட்டு நாட்கள்ல முடிச்சுட்டோம். படத்தை வாங்கின டிஸ்ட்ரிபியூட்டர்கள், தியேட்டர்காரங்க, தயாரிப்பாளர்னு எல்லாருக்கும் செம திருப்தி. சந்தோஷத்துக்குக் கேக்கணுமா என்ன?'' என்று சிரிக்கிறார்.

''வேல் படத்தை ஆடியன்ஸ் அவ்வளவு ரசிக்குறாங்க. ஆனா, தேவையில்லாம சிலர் 'இது பழைய கதை. எங்க வீட்டுப் பிள்ளை படத்தை அப்படியே எடுத்திருக்காங்க'ன்னு பொய்ப் பிரசாரம் பண்ணிட்டுத் திரியறாங்க. இதே மாதிரி கேள்விப்பட்டு சத்யராஜ் சார் படம் பார்க்கப் போயிருக்கார். படம் முடிஞ்சதுமே எனக்கு போன் பண்ணி, 'ஹரி, எங்க வீட்டுப் பிள்ளை மாதிரின்னதும் ஓடோடிப் போய்ப் பார்த்தேன். ஆனா அதுக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்ல. ஏன் இப்படி வீணா புரளி கிளப்பி விடுறாங்க'ன்னு வருத்தப்பட்டார். இப்படித்தான் நல்ல படங்களுக்கு அப்பப்ப சோதனை வரும். வேலுக்கு இப்ப சதியே நடக்குது. ஆனா ரசிகர்கள் அதை முறியடிச்சுட்டு வர்றாங்க. கலெக்ஷனே அதுக்கு சாட்சி'' என்றவர், திடீரென்று ''நான் டைரக்டரே இல்லைங்க'' என்றார் அதிரடியாய். 'என்னங்க சொல்றீங்க?' நாம் அதிர்ச்சியாய் நோக்க, சிரித்துக்கொண்டே ஹரி, ''பதறாதீங்க. நான் நல்ல அசோசியேட் டைரக்டர். அப்படித்தான் என்னை நினைச்சுக்கறேன். டைரக்டரா நினைச்சுக்கிட்டா திமிர் வந்துடும். அது வேலைக்கு ஆகாது'' என்றார்.

''நான் பழைய கதைகளைத் தொட்டுப்பேன். ஆனா, என்னோட திரைக்கதைய ரொம்பப் புதுசா வடிவமைப்பேன். தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுபோக மணிரத்னம், ஷங்கர், பாலா, அமீர்னு பல பேர் இருக்காங்க. ஆனா கமர்ஷியல் கிரவுண்டுல ஆட்டம் போடத்தான் இங்க ஆள் இல்ல. அந்த இடத்தை ஃபில் அப் பண்ணத்தான் நான் இருக்கேன். எனக்கு கமர்ஷியல் தவிர எதுவும் தெரியாது; தெரியவும் வேணாம்னு நினைக்கிறேன்.



# “கோபத்தை

அடிப்படையிலேயே நான் வேகமான ஆளு. திருநெல்வேலி போகணும்னா குறைஞ்சது அஞ்சு பஸ்ஸாவது மாறிடுவேன். வேகம் இருக்கணும். போற இடத்துக்கு ரெண்டு மணி நேரம் முன்

# கிரியேட் பண்ணுவேன்!''

## -'வேல்' இயக்குநர் ஹரி

வாடியே போய்ச் சேர்றதுதான் எனக்கு எப்பவும் பிடிக்கும். பயணம்னு இல்ல, இதை நான் எல்லா விஷயத்துலயுமே கடைப்பிடிக்கிறேன்.

பலரும் என்னைப் பார்த்து கேக்குற கேள்வி, ஏன் இப்படி கோபப்படுறீங் கன்னு. கோபம் வராதவன் மனுஷனா? இந்தக் காலத்துல சாமியார்களுக்கே கோபம் வருதே! அதுவுமில்லாம காரண மில்லாம நான் கோபப்படமாட்டேன். அவுட்புட் நல்லா இருக்கணும்ங்கறதுக்காக சமயத்துல கோபத்தை கிரியேட் கூடப் பண்ணியிருக்கேன்.

ப்ளானிங்தான் சினிமால ரொம்ப முக்கியம். இப்ப இருக்குற, இனி மேல் வரப்போற டைரக் டர்ஸ் எல்லாருக்கும் நான் ஒரு விஷயம் சொல்றேன்... ப்ளான் பண்ணாம சினிமாவை ஆரம்பிக்காதீங்க. அது தயாரிப்பாளரை ஏன், சமயத்துல உங் களையேகூட கவுத்துப்போட்டு அடிச் சிடும். முடிஞ்ச வரைக்கும் சொன்ன நேரத்துல, சொன்ன பட்ஜெட்ல படத்தை முடிச்சுக் கொடுத்து தயாரிப்பாளரை வாழ வைப்போம்.

**என்** மனைவி இல்லேன்னா என்னால நிம்மதியா வேலை பார்க்கவே முடியாது. நான் எப்பவுமே கடகடன்னு ஓடிட்டே இருக்குற ஆளு. குடும்பச் சுமை எதுவும் என்னை அழுத்தாம பார்த்துக்கிட்டு, என்னை அப்படியே ஏத்துக்குற மனைவி கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். வேலைப் பளுவால கடந்த ஒன்பது மாசமா என் மகனைக்கூட நிம்மதியா என்னால கொஞ்ச முடியல. இப்பத்தான் 'வேல்' முடிச்சுட்டு ஒரு அஞ்சு நாளா அவனுக்கு நேரம் ஒதுக்குறேன். என் பக்கத்துல வரவே பயந்தவன், மெல்ல மெல்ல இப்பத் தான் ஒட்ட ஆரம்பிச்சிருக் கான்.

பல ஹீரோக்களுக்கும் ஹிட் கொடுக் கறது மாதிரி என் மைத்துனர் அருண் விஜயை வச்சும் படம் எடுத்து கண்டிப்பா ஜெயிக்க வைப்பேன். நேரம் வரும்போது ரெண்டு பேரும் இணைஞ்சு படம் பண்ணு வோம். அடுத்து பரத்துக்குப் படம் பண் றேன். விஜயை வச்சுப் படம் எடுக்கப் போறதா சொல்றதையெல்லாம் நம்ப வேண்டாம். எங்களுக்கிடையில எந்தப் பேச்சுவார்த்தையும் நடக்கல. நடந்தா சந்தோஷம்தான்'' என்று தோள் குலுக்கிச் சிரிக்கிறார் ஹரி.

- மதுமிதா



# பார்த்திபன் கனவு

## 4. வழிப்பறி

சக்கரவர்த்தி கம்பீரமான பட்டத்து யானை மீது ஆரோகணித்து வந்தார். அவர் நெடுங்காலத்துக்குப் பிறகு மாமல்லபுரத்துக்கு வந்தபடியாலும், முன்னறிவிப்பு இல்லாமல் எதிர்பாராத விதமாக வந்தபடியாலும், நகரவாசிகள் பட்டத்து யானையைச் சூழ்ந்துகொண்டு அளவில்லா ஆரவாரங்களைச் செய்தார்கள்.

இந்த ஆரவாரம் காதில் விழுந்ததும், மாரப்ப பூபதி குதிரையைச் செலுத்திக் கொண்டு அவசரமாக அங்கிருந்து நழுவிச் சென்றான். தேவசேனன் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றான். அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. சக்கரவர்த்தியைத் தான் பார்க்கக்கூடாதென்று அவன் பல்லைக் கடித்துக்கொண்டு வேறு திசையை நோக்கி நின்றான். ஆனால், பட்டத்து யானை அவன் நின்ற இடத்துக்கு நேராக வீதியில் சென்றபோது, அவனுடைய உறுதி குலைந்தது. சோழ வம்சத்தின் பரம வைரியானாலும், உலகெல்லாம் புகழ் பரப்பிய வீராதி வீரரல்லவா சக்கரவர்த்தி? அவனை அறியாமலே அவனுடைய பார்வை அவர்மீது சென்றது. அச்சமயத்தில் சக்கரவர்த்தியும் அவன் நின்ற பக்கமாகத் தம்முடைய கண்ணோட்டத்தைச் செலுத்தினார். அந்தக் கண்ணோட்டத்தின்போது இரத்தின வியாபாரியின் முகமும் ஒரு விநாடி நேரம் அவருடைய பார்வைக்கு இலக்காயிற்று. ஆனால், அப்படிப் பார்க்கும்போது அவருடைய கண்களில் தினையளவேனும் மாறுதல் காணப்படவில்லை. கண்ணிமைகள் சிறிது மேலே போகக்கூட இல்லை. அவனுடைய முகத்தைத் தாண்டிக் கொண்டு அவருடைய பார்வை அப்பால் சென்றுவிட்டது.

பட்டத்து யானையும் மேலே சென்றது. இரத்தின வியாபாரி பெரும் ஆபத்திலிருந்து தப்பியவன் போல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். ஜனக்கூட்டம் எல்லாம் போகும் வரைக்கும் சற்று நேரம் அங்கேயே நின்று அவன் யோசனை செய்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பெருங்குழப்பம் உண்டாயிற்று. முக்கியமாய் மாரப்ப பூபதியை அங்கே சந்தித்ததை எண்ணியபோது நெஞ்சம் துணுக்குற்றது. சித்தப்பாதான் இப்போது சோழ நாட்டுச் சேனாதிபதியாமே! தன்னிடம் ஏன் அவ்விதம் பேசினார்? ஒரு வேளை அடையாளங் கண்டு கொண்டிருப்பாரோ? அந்தப் பெண் உண்மையில் சக்கரவர்த்தியின் குமாரிதானா? அப்படியானால் தன்னிடம் எதற்காகப் பெயரை மாற்றிக் கூறினாள்! அரண்மனைக்கு வரும்படி ஏன் வற்புறுத்திச் சொன்னாள்? நாலு புறத்திலும் தன்னை அபாயங்கள் சூழ்ந்திருப்பதாக தேவசேனனுக்குத் தோன்றியது. இனிமேல் மாமல்லபுரத்தில் இருந்தால் விபரீதங்கள் நேரலாம் என்று நினைத்தான். மேலும், அருள்மொழி தேவியைப் பற்றி மாரப்ப பூபதி மர்மமாகச் சொன்னதை நினைத்தபோது அவனுடைய நெஞ்சு துடித்தது. முதலில் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்க்க வேண்டும். மற்ற காரியங்கள் எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

மாமல்லபுரத்தில் ஒரு குதிரையை

வாங்கிக்கொண்டு உறையூருக்குப் போக லாம் என்ற உத்தேசம் விக்கிரமனுக்கு இருந்தது. அந்த உத்தேசத்தை இப்போது கைவிட்டான். குதிரை வாங்குவதற்குப் பிரயத்தனம் செய்தால் அதனால் என்ன விளையுமோ, என்னமோ? மாரப்பன் மறுபடியும் தன்னைப் பார்த்துவிட்டால், அவரிடமிருந்து தப்புவது கஷ்டமாகலாம். நல்ல வேளையாக அந்தச் சமயத்திலே சக்கரவர்த்தி வீதியிலே வந்தார். அருள் மொழியைப் பற்றி மாரப்பன் ஏதோ சொன்னதும் தான் பதறிவிட்டது விக்கிர மனுக்கு ஞாபகம் வந்தது. ஒருவேளை தன்மேல் சந்தேகம் கொண்டு உண்மை யைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் அப்படி வஞ்சகமாகப் பேசினாரோ? இன்னும் ஒரு வினாடிப் பொழுது சக்கரவர்த்தி வராதிருந் தால் சித்தப்பா தன்னைக் கண்டுபிடித் திருப்பார்! கண்டுபிடித்து என்ன செய்திருப் பாரோ? மாரப்ப பூபதிதான் சோழ நாட்டுச் சேனாதிபதி என்பது மறுபடியும் விக்கிர மனுக்கு நினைவு வந்தபோது அவனை என்னவோ செய்தது. மாமல்லபுரத்துக்கு அவர் எதற்காக வந்திருக்கிறார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்? எதுவா யிருந்தாலும் அவர் இப்போது இங்கே இருப்பது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அவர் இங்கு இருக்கும்போதே, தான் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட வேண்டும். இன்றைக்கே இவ்விடமிருந்து கிளம்பி விட வேண்டும். வழியிலே எங்கேயாவது குதிரை கிடைத்தால் வாங்கிக் கொள்ள லாம்.

இவ்விதம் தீர்மானம் செய்துகொண்டு விக்கிரமன் - அவனுடைய உண்மைப் பெயராலேயே இனி நாம் அழைக் கலாம். தான் தங்கியிருந்த சத்திரத்தை நோக்கி விரைந்து சென்றான். போகும் போது முன்னும் பின்னும் அடிக்கடி பார்த்துக் கொண்டான். குதிரைச் சத்தம் கேட்டால் உடனே கூட்டத்தில்

**அமரர் கல்கி**





**"நேரம் ஆக ஆக, விக்கிரமனுடைய தீரம் மிகுந்த உள்ளத்தில்கூடச் சிறிது பதைபதைப்பு உண்டாகத் தொடங்கியது."**

மறைந்து கொண்டான். இவ்விதம் சென்று சத்திரத்தை அடைந்ததும், அங்கு வழிப் பிரயாணத்துக்காகத் தான் சேகரித்து வைத்திருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு குள்ளனையும் மூட்டைகளைச் சுமந்து வருவதற்காக அழைத்துக்கொண்டு கிளம்பினான். தான் சத்திரத்துக்குள்ளே சென்றிருந்தபோது, குள்ளன் வெளியில் காத்திருந்த ஒரு மனிதனுடன் சமிக்ஞை மூலம் ஏதோ பேசியதை அவன் கவனிக்கக்கூட இல்லை.

விக்கிரமன் குள்ளனுடன் மாமல்லபுரத்தை விட்டுக் கிளம்பியபோது அஸ்தமிக்க ஜாமப் பொழுது இருக்கும். நகர வாசலைக் கடந்து, அவன் வெளியே ராஜபாட்டையில் நடக்க ஆரம்பித்த சமயம், மாலைக் கதிரவனின் கிரணங்கள் பசும்பொன் நிறத்தை அடைந்திருந்தன.

அந்தக் காலத்தில் மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி நகருக்கும், காஞ்சியிலிருந்து உறையூருக்கும் ராஜபாட்டைகள் சென்றன. மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி செல்லும் பாதையானது எப்போதும் ஜனங்களின் போக்குவரவினால் 'ஜேஜே' என்று இருக்கும். குதிரைகள் மீதும் யானைகள் மீதும் பல்லக்குகளிலும் ஜனங்கள் போய்க்கொண்டே இருப்பார்கள். அந்த ராஜபாதை நெடுகிலும் ஒன்றுக்கொன்று வெகு சமீபத்தில் ஊர்கள் உண்டு. கோயில்களும், மடாலயங்களும், சத்திரங்களும், தண்ணீர்ப் பந்தல்களும், பலவிதக் கடைகளும், பாடசாலைகளும் நெடுகிலும் காணப்படும். இதனாலெல்லாம் வெளிநாடுகளிலிருந்து புதிதாக வருகிறவர்களுக்கு மாமல்லபுரத்திலிருந்து காஞ்சி வரையில் ஒரு பெரிய நகரந்தானோ என்று தோன்றும்.

இத்தகைய ராஜபாட்டையிலிருந்து இடையிடையே பிரிந்து சென்ற குறுக்குப் பாதைகளும் ஆங்காங்கு இருந்தன. இந்தக் குறுக்குப் பாதையில் ஒன்று, மாமல்லபுரத்துக்குக் கொஞ்ச தூரத்துக்கப்பால் பிரிந்து, அடர்ந்த காடுகளின் வழியாகச் சென்றது. மாமல்லபுரத்திலிருந்து நேரே உறையூருக்குப் போக விரும்புவோர் இந்தக் குறுக்குப் பாதை வழியாகப் போனால், காஞ்சிக்குக் கொஞ்ச தூரம் தெற்கே உறையூர் ராஜபாட்டையை அடையலாம். குறுக்கு வழியில் செல்வதால் மூன்று காததூரம் அவர்களுக்கு நடை மீதமாகும்.

ஆனாலும், அந்தக் காட்டுப் பாதை

வழியாக ஜனங்கள் அதிகமாகப் போவதில்லை. முக்கியமாக, இரவில் யாருமே போகமாட்டார்கள். அந்தப் பாதையில் சில இடங்களில் துஷ்ட மிருகங்களின் தொல்லை அதிகமாயிருந்தது. இதுமட்டுமல்லாமல், பிரசித்தமான பத்திரகாளி கோயில் ஒன்றும் அந்த வழியில் இருந்தது. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு மாறாக, இந்த பத்திரகாளி கோயிலில் 'சாக்தர்', 'கபாலிகர்' முதலியோர் சில சமயம் நரபலி கொடுப்பது வழக்கம் என்ற வதந்தி இருந்தபடியால், இரவு நேரத்தில் அந்தப் பாதை வழியாகப் போக எப்பேர்ப்பட்ட வீரர்களும் தயங்குவார்கள்.

இதையெல்லாம் அறிந்திராத விக்கிரமன், குள்ளனால் வழிகாட்டப்பட்டவனாய், சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் அந்தக் குறுக்குக் காட்டுப் பாதை பிரியும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். குள்ளன் அந்தப் பாதை வழியாகப் போகலாமென்று சமிக்ஞையால் சொன்னபோது, விக்கிரமன் முதலில் கொஞ்சம் தயங்கினான். பிறகு, 'பயம் என்ன?' என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அந்தக் குறுக்குப் பாதையில் இறங்கினான். உறையூருக்குச் சீக்கிரத்தில் போய் அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமானது, அவனுடைய மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள உதவியாயிருந்தது. அதோடு இன்னொரு காரணமும் சேர்ந்தது. அந்த முச்சந்திக்குச் சற்றுத் தூரத்தில் குறுக்குப் பாதையில் நாலு பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை விக்கிரமன் பார்த்தான். அவன் குறுக்குப் பாதையில் இறங்கியவுடனே மேற்சொன்ன நால்வரும் எழுந்திருந்து விறுவிறுவென்று மேலே நடக்கத் தொடங்கினார்கள். தான் கொஞ்சம் சீக்கிரமாக நடந்தால் அவர்களோடு சேர்ந்துகொள்ளலாம் என்றும், வழித் துணையாயிருக்குமென்றும் விக்கிரமன் எண்ணியவனாய் அந்தப் பாதையில் வேகமாக நடக்கலானான். ஆனால், குள்ளன் வழக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் மெதுவாகவே நடந்தபடியால், விக்கிரமனுடைய எண்ணம் நிறைவேறுவதாயில்லை.

அந்தப் பாதையில் போகப் போக இருபுறங்களிலும் காடு அடர்த்தியாகிக் கொண்டு வந்தது. முன்னிருட்டுக் காலமாதலால், நாலாபுறத்திலிருந்தும் இருள் சூழ்ந்துகொண்டு வந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் நன்றாய் இருட்டிவிட்டது. ஆனால் வானம் துல்லியமாயிருந்தபடியால், வழி கண்டுபிடித்து நடப்பதற்கு அவசியமான வெளிச்சத்தை விண்மீன்கள் அளித்தன. மற்றபடி பாதையின் இருபுறமும் மரங்கள் அடர்ந்திருந்தபடியால் ஒரே அந்தகாரமயமாயிருந்தது. அந்தக் கனாந்தகாரத்தில், அந்த வனாந்தரப் பிரதேசத்தில் எண்ணில் அடங்காத மின்மினிகள்



பிரகாசித்துக் கொண்டிருந்த காட்சியானது, வனதேவதைகள் தங்களுடைய மாயா ஜால சக்தியினால் தீபாலங்காரம் செய்தது போலத் தோன்றியது.

நேரம் ஆக ஆக, விக்கிரமனுடைய தீரம் மிகுந்த உள்ளத்தில்கூடச் சிறிது பதைபதைப்பு உண்டாகத் தொடங்கியது. காட்டில் சில சமயம் சலசலப்புச் சத்தம் உண்டாகும். துஷ்ட மிருகங்களின் குரல் ஒலியும் ஆந்தைகளின் அருவருப்பான கூவலும் கேட்கும். இந்தக் காட்டுப் பாதை இப்படியே எவ்வளவு தூரம் வரை போகும், இரவில் எங்கே தங்கலாம் என்னும் விஷயங்களை அந்த ஊமைக் குள்ளனிடம் விக்கிரமன் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினான். ஆனால், இருள் காரணமாக குள்ளனுடன்சமிக்ஞை மூலம் சம்பாஷணை நடத்துவது எளிதாக இல்லை.

இருட்டி சுமார் ஒரு ஜாமப் பொழுது ஆகியிருக்கும். விக்கிரமன் அப்பால் போக இஷ்டப்படவில்லை. இருண்ட அந்த வனப் பிரதேசத்தில் தன்னை திடீரென்று தாக்கும் பொருட்டு அபாயங்கள் பல மறைந்து காத்திருப்பதாக அவனுடைய இருதய அந்தரங்கத்தில் ஏதோ ஒரு குரல் சொல்லிக்கொண்டே இருந்தது. திரும்பி ராஜபாட்டைக்கே போய்விடலாமா என்ற எண்ணம் உண்டாயிற்று. போகப் போக இந்த எண்ணம் ரொம்பவும் வலுப்பட்டது. மேலே நடக்க அவனுடைய கால்கள் மறுத்தன. குள்ளனுடைய தோளைத் தட்டி நிறுத்தித் தானும் நின்றான்.

அவன் நின்ற அதே சமயத்தில் எங்கேயோ வெகு தூரத்தில் 'டக்டக்', 'டக்டக்' என்று குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது.

குள்ளன் அதைக் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்ததும், விக்கிரமனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவே இல்லை. இவன் செவிடனாய் இருந்தால் அவ்வளவு லேசான சத்தம் எப்படி இவனுக்குக் கேட்டது.


உடனே விக்கிரமன் தன் அரையில் மேலங்கியினால் மறைக்கப்பட்டுக் கட்டித் தொங்கிய உடைவாளைப் பளிச்சென்று கையில் எடுத்தான். அந்தக் காரிருளில், நெய் தடவித் தீட்டப்பட்டிருந்த கத்தியானது பளபளவென்று மின்னிற்று. விக்கிரமன் குள்ளனுடைய தலையிலிருந்த பரட்டை மயிரை ஒரு கையினால் பற்றிக் கத்தியை ஓங்கி,





''அடேய்! உண்மையைச் சொல்லு! நீ நிஜமாகச் செவிடன்தானா? உனக்குக் காது கேட்பதில்லையா? உண்மையைச் சொல்லாவிட்டால் இங்கேயே, இந்த க்ஷணமே இந்த வாளுக்குப் பலியாவாய்'' என்றான்.

குள்ளன் உரத்த குரலில் சிரித்தான். 'கக் கக், கக்கக்' என்ற ஒலியை எழுப்பிய அந்தச் சிரிப்பின் பயங்கரமானது, விக்கிரமனுடைய உடம்பின் இரத்தத்தை உறைந்து போகும்படி செய்தது. இதனால் விக்கிரமன் ஒரு கணம் திகைத்து நின்ற போது, குள்ளன் அவனுடைய பிடியிலிருந்து திமிறிக்கொண்டு விடுபட்டு, ஒரு பத்தடி தூரம் பாய்ந்து சென்றான். அங்கு நின்றபடி இரண்டு கையையும் வாயினருகில் குவித்துக்கொண்டு மிகக் கோரமான நீடித்த சத்தத்தை உண்டாக்கினான். மனிதக் குரலுமல்லாமல், மிருகங்களின் குரலுமில்லாமல், கேட்பதற்குச் சகிக்க முடியாத அருவருப்பை உண்டாக்குவதாயிருந்த அந்தச் சத்தத்தைத் தூர இருந்து கேட்பவர்கள், 'பேய், பிசாசுகள் ஊளையிடுகின்றன' என்று எண்ணிப் பீதி அடைந்தார்களானால், அதில் ஆச்சரியம் அடைவதற்கு இடம் இராது.



அந்தச் சத்தத்தைக் கேட்டபோது விக்கிரமனுடைய உடம்பு ஒரு நடுக்கம் நடுங்கிற்று. ஆனாலும் உடனே அவன் சமாளித்துக்கொண்டு, அந்த க்ஷணமே அக்குள்ளனை வெட்டிக் கொன்றுவிடுவது என்ற தீர்மானத்துடன் பாய்ந்து சென்றான். அதே சமயத்தில் பாதையின் ஒரு பக்கத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து நாலு பேர் பாய்ந்து ஓடிவந்தார்கள். அவர்களுடைய கைகளில் கத்திகளைக் கண்டதும் விக்கிரமனுக்கு நெஞ்சில் பழையபடி துணிவும், தைரியமும் பிறந்தன. இருட்டினாலும், தனிமையினாலும், குள்ளனுடைய பயங்கரக் கூவலினாலும், மனிதர் உலகுக்குப் புறம்பான பேய் உலகத்துக்கு வந்திருக்கிறோமோ என்று எண்ணி, மனத்தில் திகில் அடைந்திருந்த விக்கிரமனுக்குக் கத்திகளைக் கண்டவுடன், இது மனித உலகத்தைச் சேர்ந்த காரியந்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டது. எனவே, பீதியும் போய்விட்டது. உடனே தன் வாளை எடுத்துச் சுழற்ற ஆரம்பித்தான். வந்த நால்வரும் விக்கிரமனை ஏக காலத்தில் தாக்கத் தொடங்கினார்கள். விக்கிரமன் சக்ராகாரமாகச் சுழன்று அவர்களுடன் போரிட்டான். அவனுடைய கத்தியின் முதல் வீச்சிலேயே ஒருவன் படுகாயம் பட்டுக் கீழே

விழுந்தான். இன்னொருவனுடைய கத்தி அடிபட்டு தூரப் போய் விழுந்தபோது குள்ளன் மேலே விழுந்தது. அவன் 'வீல்' என்று கத்திக்கொண்டு தரையில் சாய்ந் தான். கத்திச் சண்டையில் விக்கிரமன் சாதாரண மனிதனல்ல என்று தெரிந்து கொண்ட மற்ற இருவரும் மிகவும் எச்சரிக்கையுடன் அவனுடைய கத்தி வீச்சுக்குள் வராமல் தூர நின்றே சண்டையிட்டார்கள். அவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்ததி லிருந்து யாரையோ அவர்கள் எதிர்பார்த்தது போலத் தோன்றி யது. அதற்குத் தகுந்தாற்போல் குதிரைக் காலடிச் சத்தம் அதி விரைவாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. வெகு சீக் கிரத்தில் மங்கலாகத் தெரிந்தது. விக்கிரமனுடன் போரிட்டவர் களில் ஒருவன், ''எஜமானே! சீக்கிரம்!'' என்று கத்தினான். 'குதிரையின் மேல் வருகிறவன் இவர்களுடைய எஜமானன் போலும்! நம்முடைய முடிவு நெருங்கிவிட்டது' என்று எண்ணினான் விக்கிரமன். ஏற் கெனவே அவன் சண்டையில் களைப் புற்று வந்தான். எனினும் அந்த இரண்டு பேரையும் எப்படியாவது சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் குதிரையின் மேல் புதிதாக வந்த மூன்றா வது மனிதனோடும் எப்படிச் சண்டை யிட்டுச் சமாளிக்க முடியும்?

விக்கிரமனது உள்ளத்தில் ''அன்னை யைப் பார்க்காமல் போகிறோமே!'' என்ற எண்ணம் உதித்தது. பல்லக்கிலிருந்து கனிவு ததும்பிய கண்களுடன் தன்னைப் பார்த்துப் பேசிய பெண்ணின் நினைவும் வந்தது. உடனே, பட்டத்து யானைமேல் வந்த சக்கரவர்த்தியின் முகம் அவன் மனக்கண்ணின் முன் தோன்றியது. 'நரசிம்ம மகா சக்கரவர்த்தியின் ஆட்சியா இவ்வளவு லட்சணமாயிருக்கிறது! பல்லவ சாம்ராஜ்யத்தில் வழிப்பறியும் கொள்ளை யுமா?' என்று நினைத்தான். 'இப்படிப் பட்ட சக்கரவர்த்தியா நமது சோழ நாட்டை



ஆள்கிறார்?' என்ற எண்ணத்தினால் உண் டான ஆத்திரத்துடன் கத் தியை ஓங்கி வீசினான். இரு வரில் ஒருவன் வீழ்ந்தான்.

அதே சமயத்தில் குதிரை மீது வந்த வீரன் தன்னுடைய கத்தியை இன் னொருவன் மீது செலுத்த, அவனும் மாண்டு வீழ்ந்தான்.

விக்கிரமனுக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அவ்வீரன் தன் மீது வீச வேண்டிய வாளைத்தான் தவறுதலாய் அவன் மீது செலுத்திவிட்டானோ என்று நினைப்பதற்கு இல்லை. ஏனெனில் தான் மேலங்கி அணிந்திருந்தபடியாலும் அவர் கள் வெறும் உடம்பினராயிருந்தபடியா லும் எளிதில் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடியதாயிருந்தது. அப்படியானால் இந்த வீரன் யார்! இவர்களால் எதிர்பார்க்கப் பட்டவன் இல்லையா?

அச்சமயம் குதிரை மேலிருந்து கீழே குதித்த அவ்வீரன், ''ஐயா! நீர் யார்? இந்த இருட்டில் தனி வழியே வந்த காரணம் என்ன?'' என்று வினவினான்.

(தொடரும்)




# ஒரு தடவை

''ஏம்பா, வேற ஒருத்தர்தானே சர்வ் பண்ணினது... நீ டிப்ஸ் கேக்கறியே..?''

''என்கிட்ட அவன் வாங்கின கடனை அடைக்கலை சார். அதான் டிப்ஸ் வசூல் பண்ணி கடனை அட்ஜஸ்ட் பண்றேன்!''

– சீர்காழி வி.ரேவதி



''போரில் நமக்குத்தான் வெற்றி கிடைத்துவிட்டதே, பிறகு ஏன் நம் மன்னர் இறந்தார்?''

''அந்த அதிர்ச்சி தாங்க முடியாமல்தான்!''

– ஆர்.ரெங்கரத்தினம்




''என்கவுன்ட்டர்ல கேடி கபாலியை சுட்டுக் கொன்னீங்களா?''

''இல்லையே... அண்ணாமலை தியேட்டர் கவுன்ட்டர்லதானே போட்டுத்தள்ளினேன்.''

– சென்னிமலை சி.பி.செந்தில்குமார்

# சாப்பிட்டா...!





"இந்த ஹோட்டல்ல ஒரு தடவை சாப்பிட்டீங்கன்னா, மறுபடியும் நீங்க வேற எந்த ஹோட்டலுக்கும் போகவே மாட்டீங்க."

"அவ்வளவு நல்லா இருக்குமா...?"

"நீங்க வேற! சாப்பிட்ட கையோடு நீங்கதான் ஆஸ்பத்திரியில அட்மிட் ஆயிடுவீங்களே...!"

– சீர்காழி வி.ரேவதி



"கல்யாணமாகி 14 வருஷம் கழிச்சு ஏன் உன் மனைவியை விட்டு ஓடி வந்துட்டே?"

"ஆயுள் தண்டனை 14 வருஷம் தானுங்களே எசமான்."

– சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்

"அந்த ஜோக் எழுத்தாளரோட மனைவி, அவர்மேல குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்துல புகார் கொடுத்திருக்கிறாராமே, என்ன விஷயம்?"

"தான் எழுதின ஜோக்குகளை எல்லாம் மனைவியைப் படிக்கச் சொல்லி வற்புறுத்தினாராம்!"

– எஸ்.சங்கர்





# நிழலின் நிறம்!

"ஏங்க... நம்ம சரவணனுக்குக் கல்யாணம்தான் ஆயிடுச்சே. அவன் தனியா கடை போடணும்னு ஆசைப் படறான். ஏன் நீங்க விடமாட்டேங்கறீங்க? தனியா இருந்தாத்தானே அவன் தன்னோட திறமையால வளர முடியும்'' என்றாள் விமலா, கணவன் மணியிடம். சரவணன், மணியின் தம்பி.

''ஊஹூம்... அவன் சின்னப் பய... அவனுக்கு என்னடி தெரியும்? இன்னும் கொஞ்ச நாள் நம்ம கூடவே இருக்கட்டும்....'' என்றுவிட்டுத் தோட்டத்துக்கு போனவன்,

''ஏண்டி... என்ன இந்த அவரைச் செடி வளரவே இல்லை...? நாம நட்டப்போதானே பக்கத்து வீட்டு சுதாவும் நட்டாங்க... அவங்க வீட்டுச் செடி மட்டும் நல்லா வளர்ந்து கொடியேறி பந்தல் பூரா இருக்கே'' என்றான்.

''நல்லா பாருங்க... நம்ம செடி அந்த கொய்யா மர நிழல்ல இருக்கு... சுதா வீட்டுச் செடிக்கு எந்த நிழலும் இல்லை... தானா வளருது... நிழல்ல இருக்கறதால எப்பவும் நல்லா வளர முடியாதுங்க...'' என்றாள் விமலா.

அடுத்த நாள் மணி, சரவணனிடம் தனியாகக் கடை போடுவது பற்றிப் பேச ஆரம்பித்தான்.

- கே.ஆனந்தன்

# அபாயச் சங்கிலி

லக்ஷ்மி இப்போதுதான் முதல் முறையாக ரயிலில் தனியாகப் பயணம் செய்கிறாள். பக்கத்திலிருந்த எல்லா இந்திக்காரர்களும் 'ஷோலே' பட வில்லன்கள் போலவே தோன்றினார்கள். தாலி செயினை கெட்டியாகப் பிடித்தபடி எப்படியோ அப்பர் பெர்த்தில் தூங்கி விட்டாள். திடீரென ஒரு இந்திக்காரன் தாலியைப் பறிக்க முயலவும் பயத்தில் சத்தம் கூட போட முடியவில்லை. காங்-கம்யூனிஸ்ட் மத்தியில் நடப்பது போன்ற இழுபறியில் செயினை இழுத்துப் பிடித்துக்கொண்டாள் லக்ஷ்மி. பதறி எழுந்தபோது அவளைச் சுற்றி போலீஸும் டிடிஆரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்புறம் தான் புரிந்தது தான் கண்டது கனவு என்றும், தாலி செயினை காத்துக் கொள்கிறேனென்று அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியிருக் கிறோம் என்றும்.



- ஹெச். அப்துல் சலாம்

பலபேர் சேர்ந்து சளசளவென்று பேசிக் கொண்டிருக்கும்போது எல்லோரையும் சைலன்டாக இருக்கச் சொன்னால் அவர்களால் இருக்க முடிகிறதா? முடிவதில்லை. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷத்துக்கப்புறம் ஒருத்தர் இரண்டு பேர் ரகசியம் பேசிக்கொள்ள ஆரம்பித்து, அப்புறம் எல்லோருமே அப்படிப் பண்ணி, ஒரு பத்து நிமிஷம் போனால், ரகசியம் என்பதும் நல்ல சத்தமாகவே ஆகிவிடுகிறது. மனசின் எல்லா உணர்ச்சிகளையும் ஒரே வீச்சில் அடக்கப் பார்ப்பதும் இப்படித்தான் முடியும். அதுவே, 'சைலன்ஸ் ப்ளீஸ்' என்று திரும்பத் திரும்பச் சத்தம் போட்டுக் கொண்டிருக்காமல், 'ராம ராமா', 'சிவ சிவா' என்று ஏதோ ஒரு நாமாவை யாராவது ஒருத்தர் சொல்ல ஆரம்பித்தால், அதிலேயும் ராகம், தாளம் எல்லாம் சேர்த்து ரசம் அதிகமாகும்படி பஜனையாக ஆரம்பித்தால், எல்லோரும் அதையே திருப்பிச் சொல்லி அத்தனை சத்தமும் இந்த நாம சப்தத்திலேயே அடங்கிப் போய்விடுகிறது. அரை மணி, ஒரு மணிகூட, ராத்திரியெல்லாம்கூடப் பல தினுசாகப் பலுக்கிப் பலுக்கி, ராக தாளங்களை மாற்றி, நாமங்களையும் மாற்றி பஜனை செய்தால், எல்லோரும் மற்ற பேச்சுப் பேசாமல் அதில் கலந்து கொள்ள முடிகிறது. இது மௌனம் இல்லைதான். ஆனால், அதற்கடுத்த படியான உத்தம நிலை என்று சொல்லலாம். இப்படி நாமாவிலே தோய்ந்து சொக்கிப் போனால், தானே மௌனத்தில் கொண்டு விட்டு விடும். வெறும் பேச்சு அப்படிப் பண்ணுமா?



# சத்தம் போடாதே!

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

# நடக்குமென்பார் நடக்கும்!

**தஞ்சை பரத்வாஜ்**

**மேஷம்:** இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். சனி / ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

**ரிஷபம்:** வீடு மாற்றம் உண்டாகும். உடல்நிலையில் கவனம் தேவை. தாயின் உடல்நிலை பாதிக்கும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். சனி/ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

**மிதுனம்:** நினைத்தது கைகூடும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வீடு / மனை வாங்க சிறந்த காலம். தெய்வ அனுகூலம் கிட்டும். செலவுகள் சுபமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புதிய வேலைவாய்ப்பு கிட்டும். கடன் சுமை தீரும். பரிகாரம் தேவையில்லை.

**கடகம்:** எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. வாகனத்தில் செல்லும் போது உஷார். யாரிடமும் பேச்சு அதிகம் வைத்துக்கொள்ளக் கூடாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். திருமண முயற்சி தாமதம் ஆகும். சனி / ராகு / கேது / குரு வழிபட்டு வர, சங்கடங்கள் தீர்ந்து நற்பலன் பெருகும்.

**சிம்மம்:** திருமணம் கைகூடும். வராத நிலுவைகள் வசூலாகும். வீடு / மனை மூலம் ஆதாயம் கிட்டும். கடன் தொல்லை தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. பொருளாதாரம் முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**கன்னி:** கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எதிர்ப்பு, தொல்லை நீங்கும். கடன் தொல்லை நீங்கும். பொறுப்பான பதவி வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வியாழக்கிழமைதோறும் ராகவேந்திர சுவாமியை வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**துலாம்:** கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். சிலருக்கு வேலை மாற்றம் ரெடி. சத்ரு தொல்லை விலகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். நீண்ட காலம் பிரிந்து வாழ்ந்தவர்கள் ஒன்று சேருவார்கள். குரு / ராகு / கேது வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

**விருச்சிகம்:** சுபகாரியம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். இட மாற்றம் உண்டாகும். கடன் சுமை தீரும். புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். செலவுகள் சுபமான

தாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நன்மை உண்டாகும்.

**தனுசு:** தெய்வ அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நீண்ட கால கடன் சுமை தீரும். வழக்கு வெற்றி அளிக்கும். பொருளாதார மேன்மை ஏற்படும். சத்ரு தொல்லை நீங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குருவை வழி பாடு செய்து வந்தால், நன்மை உண்டாகும்.

**மகரம்:** எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது உஷார். இல்லற வாழ்வில் அனுசரணை தேவை. வழக்கு தாமதம் ஆகும். வேலைப்பளு அதிகரிக்கும். ராகு/ கேது / குரு / சனி வழிபாடு செய்து வர சங்கடங்கள் விலகி நற்பலன் உண் டாகும்.

**கும்பம்:** சுபநிகழ்ச்சிகள் கைகூடும். கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உடல்நிலையில் நல்ல மாறுதல் தென்படும். வியாபாரத்தில் ஏற்றம் உண்டு. தடைபட்டு வந்த காரியம் கைகூடும். மனசஞ்சலம் தீரும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பயனை அளிக்கும்.

**மீனம்:** ஊதிய உயர்வு கிட்டும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். மனக்குழப்பம் தீரும். சத்ரு தொல்லை விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல்நிலை பாதிக்காது. திருமணம் கைகூடும். வியாழன்தோறும் ராகவேந்திர சுவாமியை வழிபாடு செய்து வரவும்.




## பரத்வாஜ் பதில்கள்

● என் மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்? உறவில் அமையுமா?

– இரா. ஜெயலட்சுமி, ஜெகந்நாத நகர்

உங்கள் மகனுக்கு 2008-ல் திரும ணம் நடக்கும். தென் திசையில் பிறந்த பெண் அமைவாள். சொந்தம் இல்லை. படித்த, வேலையில் உள்ளவராக இருப்பார்.

● என் மகளுக்குத் திருமணம் எப்போது நடக்கும்? எப்படிப்பட்ட வரன், வாழ்க்கை அமையும்?

– சவிதா ஜெயப்பிரகாசம், பெங்களூரு

உங்கள் மகளுக்கு 26 வயதில் திருமணம் நடக்கும். வெளிநாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். சொந்தம் கிடையாது.

ஈராங்காயம் (சின்ன வெங்காயம்) எடுக்க, போய் ஆட்களுக்குச் சொல்லி விட்டு வரும்படி அப்பா சொல்லுச்சி. அப்படியே செவக்காட்ல கொஞ்சம்போல வெள்ளாட்டங் குட்டிகளுக்கு அகத்திக் குழை ஆய்ஞ்சிட்டும் வரச் சொன்னார். நானும் போயி காளியம்மாகிட்ட, ''எங் கப்பா முழுத்தேரத்து வேலைக்கு எட்டாளு கள கூட்டி வரச் சொல்லிச்சு''ன்னுட்டு அங்கன இருந்து சைக்கிள்ல ஒத்தையடிப் பாதைல போனேன்.

புஞ்சைல அகத்திக்குழையை இனுக்கு இனுக்குன்னு ஆய்ஞ்சு, தொட்டில ஊறப் போட்டிருந்த வாழைத் தடையைப் பிரிச்சு, குழையைக் கட்டி சைக்கிள்ல வச்சிட்டு வீட்டைப் பாத்து வந்திட்டிருந்தேன். சோழச் செட்டியார் கிணத்துக்கிட்டே வந்து, மணல்ல சறுக்கி, சைக்கிளை கீழே போட்டுட்டேன். அப்பத்தான் பாத்தேன், ஒரு நல்லபாம்பு எனக்கு முன்னாடி படமெடுத்திட்டு நிக்கி. நான் என்னை யறியாமலேயே 'யாத்தே'ன்னு கத்திட் டேன். ஆனா, நல்லவேளையா பாம்பு சர சரன்னு பக்கத்துல இருந்த இலந்தைச் செடிக்குள்ள புகுந்திடிச்சி.

நான் நடுநடுன்னு நடுங்கிட்டு வீட்ல வந்து அம்மாட்ட சொன் னேன். ''நல்ல பாம்பைப் பாத்தா ஆளு வெலகிறணும். அரைகுறையா அடிச்சு விட்டுட்டா, அது நாப்பது நாளு விரதமிருந்து, நாப்பதாம் நாத்து அடிச்சவன் எங்க இருந்தாலும், எத்தாப் பெரிய சண்டியரா இருந்தாலும், கொத்திக் கொன் னுடும்''னா. ''இனிமே நல்ல பாம்பைக் கண்டா கையெடுத்துக் கும்பிடு. அது உன்னைய ஒன்னுஞ் செய்யாது''ன்னும் சொன்னா. நானுங் கேட்டுக்கிட்டேன்.

வழில பாம்பைப் பாத் ததுக்கே பயந்திட்டேன். வீட்டுக்குள்ளேயே பாம் புப் பட்டாளம் இருந்தா எப்படி இருக்கும்?

ஒரு நா சாயங்காலம் போல பெரி யப்பா புஞ்சைக்குப் போய்ட்டு வந்து, வண்டிய நிப்பாட்டி, காளை மாடுகளை மோக்காலைத் தூக்கி அவுத்து விட்டுக் கிட்டிருந்துச்சு. மாட்டுக் கழுத்து மணிகள் 'கிணிங் கிணிங்'னு கேட்டுக்கிட்டிருந்துச்சு. அப்பம்போது தெக்கு வீட்ல இருந்து சுப்பாச்சி, ''ஏலேய் பாம்புல, பாம்புல, கம்பெடுத்திட்டு ஓடியாங்கலன்''னு கத்தி னாள். பெரியப்பா, மாட்டு வண்டியி லிருந்து ஊணிக்கம்பை உருவிட்டு தெக்கு வீட்டுக்குள்ள நுழைஞ்சா, ஒரே இருட்டு. சிம்னி விளக்கு வெளிச்சத்துல பாம்பை அடிக்க முடியுமா? ''ஏலேய் தவுடா, அரிக் கன் லைட்ட எடுத்தால''ன்னு ஏன்ட்டச் சொன்னாரு. நானும் எடுத்திட்டு வந்து வெளிச்சங் காட்டினேன். இதுக்குள்ளேயும்



# நல்ல பாம்பு



செவக்காட்டுச் சித்திரங்கள்

**வே. இராமசாமி**



அப்பா பேட்டரி லைட்டைக் கொண்டு வந்திருச்சு. கைல ஆடு மேய்க்கிற காயாக்கம்பு.

பாம்பைக் காணலை. கடேசில நீச்சுத் தண்ணிப் பானை இருக்கிற மூக்கில ஒரு எலிப் பொந்துக்குள்ள போனது தெரிஞ்சு, பொந்தை கடப்பாரை போட்டுத் தோண்டிப் பாத்தா, குட்டி நல்லபாம்பு! ''இதை அடிக்கவா இம்புட்டுப் பேரு''ண்ட்டு, பெரியப்பா அதை அடிக்க என்னையும் மகேசையும் குப்பைல பால் ஊத்தி புதைக்கச் சொல்லி, ஒரு வரிச்சுக் கம்புல தூக்கித் தந்தாரு.

அப்பந்தான் புகைபோகும் புகைக்குழி



6

வழியா, இன்னொரு குட்டிப் பாம்பு வழிஞ்சு ஊர்ந்து அடுப்பு மேல விழுந்து, தவழ்ந்து வருது. பெரியப்பா அதையும் மண்டைல போட்டாரு. வீட்டுக்குப் பின்னால கோடியிலே இருந்து குட்டிக் குட்டி நல்ல பாம்பா வந்து மூணு வீட்லயும் அங்கிட்டும் இங்கிட்டும் அலையுதுக.

உடனே அம்மா, சித்தி, அக்கா பிள்ளைக நாங்கள்லாம் அழ ஆரம்பிச்சுட்டோம். பக்கத்து வீடுகள்ல எல்லாம் வந்திட்டாங்க. எங்கனயோ பெரிய நல்ல பாம்பு குஞ்சி பொரிச்சிடுச்சின்னு தெரிஞ்சு போச்சி. எல்லாம் வீட்டை விட்டு வெளியே வந்திட்டோம். அன்னிக்கு ராத்திரி ரெண்டு மாட்டு வண்டிலதான் எல்லாரும் படுத்திருந்தோம்.

அப்பாவும் பெரியப்பாவும் கரண்டைக் கால்ல இருந்து முட்டுக்கால் வரைக்கும் துணியைச் சுத்திக்கிட்டாங்க நல்ல மொத்து மொத்துன்னு. கால்ல வெட்டுனாலும் வெட்டுப்படாது. அதுமாதிரி உள்ளங் காலைச் சுத்தி நிறையச் சருகைத் தாள்களைச் சுத்திக்கிட்டாங்க. பாம்பு கொத்தினாலும் இப்ப ஒன்னும் ஆகாதில்லா? மூணு வீட்லயும் தீப்பந்தம் தயாரிச்சு கட்டிவிட்டாக. வெளிச்சம் வாசக் கதவைத் தாண்டி முற்றத்துல மஞ்சச் சதுரமாக் கெடக்கு. வீட்ல உள்ள பொருள்களையும் வெளியேத்திட்டாக. ஏய்ங்கப்பா! அடிக்காகன்னா அடிக்காக, விடிய விடியப் போட்டு நகக்கி அடிச்சு, பாம்புக்குட்டிகளை வெளில தூக்கிப் போடுதாக. கொல்லக் கொல்ல வந்துக்கிட்டே இருக்குக குட்டிக.

**பா**ம்புக்குட்டிக அடிபட்டுச் செத்த நாப்பதாம் நாள். தொலிஞ்சவன் வீட்ல வலிஞ்சவன் வந்து மிரட்ன மாதிரி, வீட்டுத் தலைமாட்ல வந்து நல்ல பாம்பு சீத்சீத்னு படமெடுத்துத் திரியுது. பெரியப்பாவும் எதிர்பார்த்த மாதிரி கம்பை எடுத்து விரட்டுதாரு. பாம்பு ஓடிப்போயி வைக்கப் படப்புக்கு அடியில் ஒளிஞ்சிக்கிடுச்சு. சௌந்திரன் இளுவைக் கம்பை எடுத்தாந்து ஒவ்வொரு கட்டா வைக்கோலை இழுத்து, கீழே தள்ளினான். இப்படியே எல்லாக் கட்டையும் தள்ளியாச்சு. ஒன்னே ஒன்னு மட்டும் மிச்சமிருந்தது. அடில கிடந்ததால வைக்கோல் மஞ்சள் நிறம் மாறி, வெள்ளையா இருக்கு. கட்டியிருந்த 'வைக்கோல்பிரி' பிரிஞ்சு அவுந்திருக்கு.



படத்துக்கு பின்னாடி நின்ன பெரியப்பா உசரத்துக்குப் பாம்பு நிக்கி. புறத்தால அவர் மட்டும் நின்னு விரிச்ச படத்துல போட்டாரு ஒரு போடு.

அந்த ஒத்த வைக்கக் கெட்டையும் இழுத்து தூரப் போட்டாச்சு. பொந்து மட்டும் தெரியுது. அதுல வேலுப் பெரியப்பா மம்பட்டியைப் போட்டுத் தோண்டுனாரு. தோண்டத் தோண்ட ஒன்னுங் காங்கலை. இன்னும் கொஞ்சம் வெட்டினதும் வால் தட்டுப்பட்டது. உடனே சௌந்திரன் அண்ணன் அடிக்கக் கம்பை ஓங்கினான். அப்பா அவனைத் தடுத்து, ''அடக்கோட்டிப் பயலே, எப்பவும் பொந்துக்கு வெளியே வால் தெரிஞ்சா, தலை கீழே இருக்குன்னு அர்த்தமில்ல. ஒட்டைக்குள்ள தலையை நுழைச்சதும் பாம்பு தலையை வளைச்சு, பொந்து மேலே கொண்டு வந்து உடம்பை அப்படியே உள்ள இறக்கிடும். வாலு தெரியுதேன்னு அடிக்கும்போது விர்ருன்னு எழும்பி கொத்திடும்''னு சத்தம் போட்டுச்சு.

அப்புறமா பொந்துமேல மிளகுமாரைப் போட்டுத் தீ வைச்சாக. தீ எரிந்து 'கண கண'ன்னு சத்தம் வந்தது. அப்பம்போது கொஞ்ச நேரம் ஒரு அரவமும் இல்லை. யாரும் எதிர்பார்க்காதபோது ஸ்ஸ்ஸ்ன்னு ரப்பர் மாதிரி எழும்பி, படம் எடுத்த மாணிக்கு வெளில வந்ததும் சுத்தி நின்ன எல்லாரும் திகைச்சுப் போய் கம்புகளைத் தவற விட்டுட்டு விலகி ஓடிட்டாங்க. பின்னே, ஒரு பாகம் (ரெண்டு கையை நீட்டி விரிக்கும் அளவு) நீளத்துக்கு வாலைத் தரையில் ஊணி பாம்பு நின்னா என்னவாகும்?

படத்துக்கு பின்னாடி நின்ன பெரியப்பா உசரத்துக்குப் பாம்பு நிக்கி. புறத்தால அவர் மட்டும் நின்னு விரிச்ச படத்துல போட்டாரு ஒரு போடு. அப்படியே மடங்கி விழுந்து செத்தார் பாம்பாண்டியார். படத்துல சின்னத்தூசு பட்டாலும் பாம்புக்கு உசிர் பிரிஞ்சிடும்னு சுப்பாச்சி அந்த நேரத்துலயும் ஒரு வார்த்தை விட்டாள்.

பிறகென்ன? பால் ஊத்தி புதைச்சாச்சி. சங்கரன் கோயில் கோமதி அம்மாளுக்கு செவ்வாக்கிழமை நாகப்பாம்பு படம் வாங்கி, காணிக்கை செலுத்திட்டு வந்தாரு அப்பா. சுப்பாச்சி மட்டும் ஒரே பாம்புக் கதையை பல தடவை பல டிசைனா இப்பமும் சொல்லிக்கிட்டிருக்கா.

**(மண்வாசம் வீசும்)**

# “கண்ணகியாக வருகிறேன்!”

நீண்ட நாட்களுக்குப் பிறகு 'தசாவ தாரம்' படத்தில் ரீ என்ட்ரியாகியிருக்கிறார் ஜெயப்ரதா. ஒரு பக்கம் அரசியல், மறுபக்கம் சினிமா என்று நேரமில்லாமல் வலம் வந்தாலும் 'கல்கி'க்கென நேரம் ஒதுக்கிப் பேசினார்...

''தமிழையும், தமிழக மக்களையும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏதோ தமிழ்ப் படங்களில் எனக்கு வந்த வாய்ப்புகளை எல்லாம் நான் மறுத்துவிட்டு பாலிவுட் பக்கம் சென்றுவிட்டதாகப் பலர் நினைக்கிறார்கள். தமிழில் நல்ல ஸ்கிரிப்ட்டுடன் அமைந்த படத்தில் நடிக்க வேண்டும் என நிஜமாகவே ஏங்கிக் கொண்டிருந்தேன். சினிமாவில் எனக்கென்று ஓர் அடையாளத்தைக் கொடுத்தது தமிழ் சினிமா தான். அதனை நான் மிகவும் மதிக்கிறேன், நேசிக்கிறேன்.

கமல்ஹாசன் நான் மிகவும் மதிக்கும் நபர். 'சலங்கை ஒலி'க்குப் பிறகு நான் அவரை பல பொது விழாக்களில் சந்தித்துப் பேசி இருக்கிறேன். ஒரு நாள் அவர் என்னை தொலைபேசியில் அழைத்து, தசாவதாரம் படத்தில் நடிக்க முடியுமா எனக் கேட்டார். உடனே 'சரி' சொல்லிவிட்டேன்.

என் சினிமா பயணம் ரொம்ப இனிமையானது. முன்பெல்லாம் வருடத்துக்கு 15 அல்லது 16 படங்கள் செய்வேன். இப்பொழுது வருடத்துக்கு 5 படங்கள்தான் பண்ணுகிறேன். அதுவும் இந்த வருடம் 5 படங்களுமே வெவ்வேறு மொழிப் படங்கள்.

அவ்வப்போது டான்ஸ், பாலே நிகழ்ச்சிகளும் செய்து வருகிறேன். 'அம்ரபாலி' என்ற இரண்டு மணி நேர பாலே டான்ஸ் நிகழ்ச்சிகளை பல ஊர்களிலும் நடத்திக்கொண்டிருக்கிறேன். சினிமா, அரசியல், நாட்டியம் இவை மூன்றிலுமே எனக்கு ஆர்வம் அதிகம்.

அரசியல் என்றால் என்னவென்றே தெரியாத என்னை, என்.டி.ஆர். அதில் சேரச்சொல்லி அழைத்தார். அப்பொழுது நான் சினிமா உலகில் ரொம்பப் பிரபலமாக இருந்தேன். அதுவும் ஒரு மிகப்பெரிய சவால்தான். எனக்கு வாழ்க்கையில் சவால்களைச் சந்திப்பது எப்பவும் பிடிக்கும்.



“தமிழில் நடிக்க வேண்டும் என்று

வாழ்க்கை என்றால் அது நிச்சயம் சவால்கள் நிறைந்த ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை எப்படிப் போராடி ஜெயிக்க வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்ள முடியும்.



# மீண்டும் ஜெயப்ரதா

அரசியலில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், நான் என்னை, என் சினிமாவை, என் நாட்டியத்தை எல்லாம் மறந்தேவிட்டேன். 4, 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முறை மும்பையில் உள்ள என் வீட்டுக்குச் சென்று பார்த்த பொழுது, என் வீடு தாறுமாறாக உருமாறி இருந்தது. அது ஒரு மழைக் காலம். என் வீட்டுக் கூரையிலிருந்து மழைத்துளி சொட்டியபடி இருக்க, என் வீட்டு சோபாக்கள் எல்லாம் அந்த மழை வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த காட்சி என்னை என்னவோ செய்துவிட்டது. 'என்ன ஆயிற்று ஜெயப்ரதாவுக்கு' என்று ஒரு நிமிடம் நினைத்துக்கொண்டேன். எதையோ இழந்தது போன்ற வருத்தம் மேலிட்டது. என்றாலும் மனம் தளராமல் 'இனி வாழ்க்கையில் ஜெயிக்கத்தான் போகிறேன்' எனத் தீர்மானித்துக்கொண்டு முலாயம் சிங்கின் வீட்டுக் கதவுகளைத் தட்டினேன். 'என் மனம் அமைதி அடைய வேண்டும். எனக்கு ராஜ்ய சபா, லோக் சபா என்று எந்த சீட்டும் வேண்டாம். உங்கள் கட்சியில் ஒரு இடம் கொடுங்கள்' எனக் கேட்டுக்கொண்டு சமாஜ்வாடியில் இணைந்தேன். ஆனால், நான் சமாஜ்வாடியில் இணைந்த ஒரே வாரத்தில் எனக்கு ராம்பூர் தொகுதியில் போட்டியிட கட்சி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. இதோ இன்று ராம்பூர் தொகுதியில் அவர்கள் வீட்டுச் சகோதரியாக, ஒரு மகளாக பல நல்ல திட்டங்கள் செய்து வருகிறேன்.

நான் இப்போது முற்றிலும் மாறிவிட்டேன். முன்பெல்லாம் ஒரு வீக் பெர்ஸனாக இருந்தேன். இன்று மனதளவில் மிகப்பெரிய தைரியசாலியாக மாறிவிட்டேன். மக்கள் சேவை, நாட்டியம், சினிமா இந்த மூன்றில் மட்டுமே தனிக் கவனம் செலுத்தி வருகிறேன். வேறு எதைப் பற்றியும் சிந்திக்க எனக்கு நேரமே இல்லை. பழைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்க நான் விரும்பவில்லை. ஒரு இடீர் இன்ப அதிர்ச்சியும்கூட உண்டு. கலைஞர் ஒரு சிறந்த எழுத்தாளர். கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட திரை வித்தகர். அவர் எழுத்தில் எழுச்சிமிக்க கண்ணகியாக 2008-ல், தமிழக மக்களைச் சந்திக்கப்போகிறேன்.''

**- நளினி சம்பத்குமார்**



**நிஜமாகவே ஏங்கிக் கொண்டிருந்தேன்!"**



* அருள்மொழி வர்மன்

'ஆரம்பத்திலேயே வந்திருந்தால் குணப்படுத்தியிருக்கலாம்' - ஒரு டாக்டரிடம் நாம் கேட்கவே விரும்பாத வாக்கியம் இது. 'ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேனா?' என்று நம்மைப் புலம்ப வைக்கக்கூடிய நோய்களும் உண்டு. அப்படித் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளாத நோய் குறித்து நம்மிடம் விளக்கினார் கண் மருத்துவர் டாக்டர் அருள்மொழிவர்மன்.

''பெரும்பாலும் அறிகுறியே இல்லாமல் தாக்கக்கூடிய நோய் அது. அப்படியே ஏதாவது அறிகுறி தென்பட்டாலும் அதை வேறு ஏதோ உடல்நலக் குறைவு என்று எண்ணிக் கொள்பவர்கள் பலர் உண்டு. அப்படித்தான் சமீபத்தில், வங்கி ஊழியர் ஒருவருக்குத் தொடர்ந்து வாந்தி வந்தது. வயிறு தொடர்பான சிக்கல் என்று தவறாக நினைத்துக்கொண்டு அதற்கான சிகிச்சையும் எடுத்துக்கொண்டார். பிறகுதான் ஒரு கண் இலேசாகச் சிவந்திருப்பது போல் படவே, என்னை அணுகினார். சோதித்துப் பார்த்ததில் கண் நீர் அழுத்தம் அதிகமாக இருப்பது தெரிய வந்தது'' என்றார் அருள்மொழிவர்மன்.

''குளுகோமா என்று அறியப்படும் இந்த நோய், பொதுவாக நாற்பது வயதுக்கு மேல் ஏற்படுகிறது. மரபணுக்கள்தான் இதற்கு முக்கிய காரணம்.

கண் என்பது திரவத்தால் நிரம்பிய ஒரு கோளம். அக்வஸ் ஹ்யூமர் (Aques Humor) எனும் திரவம் தொடர்ந்து கண்ணில் சுரந்து கொண்டிருக்கிறது. இது செல்வதற்கென்று ஒரு குறிப்பிட்ட பாதை உண்டு. அந்தப் பாதை ரத்த ஓட்டத்தில் கலக்கிறது. நம் கருவிழிக்கு ரத்த ஓட்டம் கிடையாது. அதற்குத் தேவைப்படும் சத்துக்களை அளிப்பது இந்தத் திரவம்தான். இது கண் பகுதியின் இறுதியில் உள்ள சல்லடை போன்ற (Trabecular Meshwork) பகுதியின் வழியாக வெளியேறுகிறது. இந்தச் சல்லடைப் பகுதியில் அடைப்பு ஏற்பட்டாலோ, அதன் கோணம் மாறினாலோ மேற்படி திரவம் கண்ணுக்குள் அதிக அளவில் தேங்கத் தொடங்குகிறது. கண் அழுத்தம் என்பது "12 - 18 mm/Hg" என்கிற அளவில் இருக்க வேண்டும். இந்த அளவு அதிகமாகும்போது கண்ணுக்குப் பின்னால் இருக்கும் கண் நரம்பை இது அழுத்துகிறது. இதனால் அந்த நரம்பு பலவீனம் அடைகிறது. இதன் விளைவாக சிலருக்குப் பக்கவாட்டுப் பார்வை முழுவதுமாகப் பாதிக்கப்படலாம். ஆனால், நேர் பார்வை தெளிவாக இருப்பதால் (பக்கவாட்டில் உள்ள காட்சிகளை முகத்தைத் திருப்பிப் பார்க்க முடிவதால்) இவர்கள் அந்தக் குறைபாட்டை அறியாமலேகூட இருந்து விடலாம். பாதிப்பு மிகவும் அதிகமாகும்போது சிகிச்சைக்கு வருவார்கள். ஆனால், வருத்தம் என்னவென்றால் இழந்த பார்வை இழந்ததுதான். இருக்கும் மிச்ச பார்வையைத்தான் பாதுகாக்க முடியும்.''


''இவ்வளவு பெரிய ஆபத்துக்கு அறி



குறிகள்கூட இல்லையென்றால் எப்படித் தான் இதைத் தவிர்ப்பது?'' என்றோம்.

''பொதுவாக, நாற்பது வயதுக்குமேல் வெள்ளெழுத்து வரும். கண் டாக்டரிடம் வருவார்கள். அப்போது இயல்பாகவே கண் அழுத்தத்தையும் கண் நரம்பையும் நாங்கள் சோதிப்போம். சிக்கல் இருந்தால் தெரிந்துவிடும். சிலர் கண்ணாடிக் கடைகளிலேயே கண்களைச் சோதித்துக் கண்ணாடி அணிந்து கொள்கிறார்கள். சரியான பவர் உள்ள கண்ணாடியையே அவர்கள் அணியக்கூடும். ஆனால், கண்களில் உள்ள வேறுசில சிக்கல்களை அவர்கள் அறிந்து கொள்ள முடியாமல் போய், பெரும் ஆபத்தில் முடியலாம்.





குளூகோமாவின் ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்களுக்குக் கண் சொட்டு மருந்தே போது

# பார்வை பறிபோக விடலாமா?

மானது. ஆனால், இந்தச் சிகிச்சையை அவர்கள் தங்கள் ஆயுள் முழுவதும் தொடர வேண்டியிருக்கும். சில நாட்கள் சொட்டு மருந்தை விட்டுக் கொள்ளவில்லையென்றாலும் கண் அழுத்தம் ஏறிவிடும்.

இதற்கு மாற்றாக அறுவை சிகிச்சை இருந்து வந்தது. ஆனால், இப்போது லேசர் சிகிச்சை அற்புதமான பலனளிக்கிறது. கண்ணில் உள்ள பாப்பா (Iris) பகுதியில் லேசர் மூலம் மிகச் சிறிய துவாரத்தை ஏற்படுத்தி, அதிகப்படி திரவத்தை வெளியேற்றிவிடுவோம் (இதை Iridotomy என்போம்). சமீபத்தில் அறிமுகமாகியுள்ள SLT (Selective Laser Trabeculoplasty) எனும் சிகிச்சையில் மேலே குறிப்பிட்டுள்ள சல்லடைப் பகுதி விரிவுபடுத்தப்படுவதால் குளூகோமா குணமாகிறது. மூன்று வருடங்களுக்குக் கவலை இல்லை. இந்தச் சிகிச்சையில் பக்கவிளைவுகள் எதுவும் கிடையாது என்பது கூடுதல் சிறப்பு.

லேசர் சிகிச்சையின்போது புறநோயாளியாகவே இருந்து சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். கண்ணில் பாண்டேஜ்கூடப் போடுவதில்லை. இதனால் கண்ணுக்கு எந்தவித வலியும் உண்டாவதில்லை.

கண் நரம்பு என்பது ஏதோ தனிப் பகுதி அல்ல. அதை மூளையின் ஒரு விரிவு என்றே சொல்லலாம். எனவே கண் நரம்பு பாதிக்கப்படும்போது, அது பக்கவாதத்தில் கூட கொண்டுபோய் விடும். இந்த நோயைப் பொறுத்த அளவில் விழிப்புணர்வு மிக முக்கியம்'' என்று எச்சரிக்கிறார் டாக்டர் அருள்மொழிவர்மன்.

– ஜி.எஸ்.எஸ்.

# அடையாளம்

பட்டவர்த்தியில் வந்து நின்றது பஸ். ஜன்னல் அருகே கார்த்திகா உட்கார்ந்திருந்தாள். காற்று அவள் தலை முடியைக் கலைத்துக் கொண்டிருந்தது.

சரவணனுக்குப் பக்கத்தில் மஞ்சு சீட்டில் சாய்ந்து வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

''அம்மா, அப்பா ஊரு வந்தாச்சு'' என்று கூறி மஞ்சுவை எழுப்பினாள் கார்த்திகா. மூவரும் பஸ்சில் இருந்து இறங்கினார்கள்.

''தம்பி வாங்க, அம்மா வாங்கம்மா. கொழந்த அப்படியே அவங்க பாட்டியை உரிச்சு வச்சுருக்கு'' என்று ரெங்கநாதன் வரவேற்றான்.

''நல்லா இருக்கியா ரெங்கநாதா?'' என்று கேட்டான் சரவணன்.

''ரொம்ப நல்லா இருக்கேன் தம்பி''

மாட்டு வண்டி ஊர்ப் பக்கம் செல்லத் தொடங்கியது.

சரவணன் சாய்ந்து உட்கார்ந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் வீடு வந்துவிடும். அவன் தாத்தா வாழ்ந்த - அவன் பிறந்த வீடு. திருவாரூரில் இருந்தபோது தாத்தா, பாட்டி வீட்டோடு தொடர்பு இருந்தது. இப்போ.... ப்ச்....

வயல், சேறு, விவசாயம் எல்லாம் பிடிக்காமல் டவுனுக்குப் போய்ப் படித்து, வங்கியில் வேலை கிடைத்துவிட்டது. இப்போது வசிப்பது கோயம்புத்தூரில். அவனுடைய சம்பளத்துக்கு ராம் நகரில்தான் ஒரு ஃப்ளாட் வாங்க முடிந்தது. அதற்காக வாங்கிய கடனிலிருந்தே இன்னும் மீள முடியவில்லை.

சம்பளப் பணம் எப்படிக் கரைகிறதென்றே தெரியாது. திறந்து பார்த்தால் பர்ஸ் காலியாக இருக்கும். கையில் நான்கு வளையல்கள், கழுத்தில் முத்துமாலை, காதில் ஒரு முத்துத் தோடு இருந்தால், உறவுக்காரர்கள் கல்யாணத்துக்கெல்லாம் மஞ்சுவால் கௌரவமாக தலை நிமிர்ந்து போகத் தோதாக இருக்கும்.

எங்கே... ம்... ஹூம்!

ஊரில் தோட்டமும் வீடும் இன்னும் மிச்சமிருந்தது. லோகநாதன், சும்மா பூட்டிக்கிடந்த வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தார்.

''தம்பி, சொல்றேன்னு தப்பா எடுத்துக் காதீங்க. நீங்களோ ஊர்ப் பக்கம் இனிமே எட்டிப் பார்க்கப் போறதில்லை. அப்புறம் வீட்டை எதுக்கு இன்னும் வச்சிக்கிட்டு? பேசாம வீட்டையும், தோட்டத்தையும் எனக்குக் கிரயம் பண்ணிக் கொடுத்துடுங்களேன்.''

போன முறை வந்தபோது லோகநாதன் வாயைத் திறந்து சொல்லிவிட்டார். மஞ்சுவுக்குப் பூரண சம்மதம். அதற்குத்தான் இந்த ஊர்ப் பயணம்.

வண்டி ஊரை அடைந்தது. சிவன் கோயிலுக்குச் சொந்தமான இலுப்பைத் தோப்பில் பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிக் கூடம் புதிதாகக் கட்டப்பட்டு இருந்தது. வடபுறம் இருந்த தோப்பில் வரிசையாகக் கடைகள் இருந்தன.

எதிரே அவன் வீடு சரித்திரத்தைத் தாங்கி நின்றுகொண்டிருந்தது. லோகநாதன் மனைவி சாவியுடன் வந்து எதிர்கொண்டாள்.

''வாங்க, அவுங்க டவுனுக்குச் சரக்கு போடப் போயிருக்காங்க'' என்று வெட்கப் புன்னகை மாறாமல் பேசினாள்.

ரெங்கநாதன் பெட்டிகளை வீட்டில் வைத்துவிட்டு கார்த்திகாவைத் தூக்கித் தோளில் ஏற்றிக்கொண்டு, சிவன் கோயிலை ஒட்டியுள்ள தென்னந்தோப்பை நோக்கிப் போனான்.

அதே தென்னந்தோப்பில்தான் சரவணன் ஒருமுறை ரெங்கநாதனிடம் மாட்டினான். கணக்குப் பிள்ளை மகள் பேபி மேல் அவனுக்குக் கன்றுக்குட்டிக் காதல். தென்னந்தோப்பில் அவனும் அவளும் மட்டும் தனித்திருக்கும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

அவளைப் படபடக்கும் நெஞ்சுடன் நெருங்கிய நேரம், ''நல்லா இருக்கு தம்பி நீங்க பண்றது?'' என்று குரல் கேட்டுத்

திரும்பினால், ரெங்கநாதன்.

அவ்வளவுதான்... ஒரே ஓட்டம்.

'யாராவது பார்த்தால்தான் என்ன? நான் அந்த பேபியைத்தான் கல்யாணம் பண்ணப் போறேன்!' தனக்குள் சொல்லிக்கொள்வான்.

பத்து நாள் காய்ச்சலில் பேபி போய்ச் சேர்ந்துவிட்டாள். களத்துமேட்டில் அவளை நினைத்துப் பல நாட்கள் மனதுக்குள் அழுதிருக்கிறான்.




**வீ**ட்டுக்குள் நுழைந்தான். நினைவுகள் மீண்டும் பின் நோக்கிச் சென்றன. கூடத்தில் தாத்தாவைக் கிடத்தி இருந்தது ஞாபகத்துக்கு வந்தது. அம்மாவும் அப்பாவும் உறவுகளும் அழுது அரற்ற, இறப்பின் தீவிரம் புரியாமல் சுவாமி மலை டூரிங் டாக்கீஸில் 'இன்றே கடைசி'யான 'ஆயிரத்தில் ஒருவன்' படத்துக்குப் போக முடியாததை எண்ணி துக்கப்பட்டுக் கொண்டிருந்தான் சரவணன். அதே கூடம்தான் அவன் அத்தையையும் வழி அனுப்பியது.

தெருவில் நடந்து, குளக்கரையில் இருந்த நாவல் மரத்தடியில் போய் அமர்ந்தவன், பின்னால் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பினான்.

''டேய் எங்களைத் தெரியலை?'' என்ற இருவரில் ஒருவரின் குரல் கேட்ட பின்னால்தான், சரவணனுக்கு கோமான் பிள்ளை மகன் நடராஜனை அடை யாளம் தெரிந்தது. கூட இருந்தது வாத்தியார் மகன் சம்பந்தம்.

''வந்திருக்கேன்னாங்க. பார்த்துட்டுப் போகலாம்னு

வந்தோம்'' என்றபடி அருகில் வந்து உட்கார்ந்தார்கள்.

''என்னடா இது? அடையாளமே தெரியாம மாறிட்டீங்க. என்னடா பண்ணிட்டிருக்கீங்க?''

''வெவசாயம்தான். வேற என்ன? நடராஜன் திருமண்டங்குடி சக்கரை ஆலையில் வேலை பார்க்கிறான். எங்கே போனா என்ன? இங்கேதானே வந்து விழணும். ஆமா, நீ எத்தனை நாள் தங்கறாப்பல, ஒரு மாசம் இருப்பேல்ல.''

''ஒரு மாசமா? நாளைக்குப் போயிருவேண்டா''

''ஏன், என்ன அவசரம்? சன்னியாசியா நீ? வீடு தோட்டம் இருக்கில்ல? இருந்து ஆண்டு அனுபவிக்க வேண்டியதுதானே?''

''வீட்டையும், தோட்டத்தையும் லோகநாதனுக்குக் கிரயம் பண்ணிக் கொடுத்துடலாம்னு இருக்கேன்.''

''இனி இந்த மண்ணுல காலை வைக்கப் போறதில்லன்னு சொல்லு. சரி,வர்றோம்... சாயங்காலம் பார்க்கலாம்.'' திடீரென்று ஒரு திரையை இழுத்துவிட்டுக்கொண்ட மாதிரி தோன்றியது.

**மா**லை... முற்றத்தில் மன உளைச்சலோடு மல்லாந்து படுத்திருந்த சரவணன், எப்போது தூங்கினான் என்று தெரியவில்லை.

யாரோ எழுப்பிய மாதிரி இருந்தது. கண் திறந்தால், பேபி நின்றிருந்தாள்.

''ஏய் பேபி.''

''மறந்து போயிட்டே இல்லே? உதறிட்டு ஓடிட்டே இல்லே? நான்தான் உருகி, உருகிப் போய் ஏமாந்துட்டேன்.''

''என்ன சொல்றே பேபி?''

''நீ எந்த ஊரில் வேலையில் இருந்தாலும், வருடத்துக்கு ஒரு முறையாவது இங்கே வருவே. அப்பவாவது என் ஞாபகம் உனக்கு வரும். இப்ப இந்த வீட்டையும் தோட்டத்தையும் விக்கப் போறே... என்னைய ஒரேயடியா மறந்திட்டு நம்ம பூமியை விட்டுப் போகப் போறியா? போ... போய் நல்லா இரு.''

''பேபி, என்னை என்ன செய்யச் சொல்றே?''

''பணங்காக கிடைக்குதுன்னா ஆத்தா, தாத்தாவைக்கூட வித்திடுவியா சரவணா?''

திகைத்துப் போய் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான். யாருமில்லை... யாருமே இல்லை... கனவு.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

''நான் வீட்டை விக்கப் போறதில்லை.''

''என்ன தம்பி இது? அதுக்காகத்தானே இவ்வளவு தூரம் வந்தீங்க!''

''நான் இந்த மண்ணுக்கே வந்திடலாம்னு இருக்கேன்.''

லோகநாதன் மகிழ்ச்சியும், திகைப்புமாய் அவனைப் பார்த்தார். மஞ்சுவும், கார்த்திகாவும் ஒன்றும் புரியாமல் நின்றார்கள். ●



''சைக்கிள்ல டபுள்ஸ் வந்ததுக்காக உங்களைக் கைது பண்றேன்...''

''நீங்க இந்தக் காலத்து போலீஸ்தானான்னு சந்தேகமா இருக்கு?''

''அப்ப உன்னை சந்தேகக் கேஸ்ல கைது பண்றேன்!''

- *தஞ்சை அனார்கலி*



* இளம் வயதில் கி.வீரமணி

# பிறந்த நாளன்று காணாமல் போனவர்!

திராவிடர் கழகம், அதன் தலைவர் கி.வீரமணியின் 75வது பிறந்தநாளை அண்மையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது. கி.வீரமணியுடன் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற தி.மு.க. பிரமுகர் பெரம்பூர் கந்தன், அவரைப் பற்றிச் சொல்கிறார் :

''நான் தி.மு.க.வில் இருந்தாலும், வீரமணி அவர்கள் திராவிடர் கழகம் தொடர்பான தகவல்களை என்னுடன் நம்பிக்கையுடன் பகிர்ந்துகொள்வார்.

ஒரு முறை பெரம்பூரில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. எல்லா ஏற்பாடுகளையும் செய்தேன். கூட்டம் முடிந்து வீடு திரும்பும்போது, வடசென்னை திராவிடர் கழகத் தலைவர் தட்சிணாமூர்த்தி சிலரால் வெட்டப்பட்டார். அப்போது வீரமணி அவர்கள் தர்மபுரியில் இருந்தார். தகவல் சொல்லப்பட, 'நான் அங்கு இருந்தால் என்ன செய்வேனோ, அதையே நீங்கள் செய்து உதவ வேண்டும்' என்று என்னிடம் கேட்டுக்கொண்டார். அவர் சொன்னபடி விரைந்து மருத்துவ உதவி செய்ய, மீண்டெழுந்தார் தட்சிணாமூர்த்தி. சென்னை வந்த வீரமணி, என் கைகளைப் பிடித்துக்கொண்டு நெகிழ்ந்து போய் நன்றி சொன்னார்.

என் திருமணத்துக்காக வீரமணி அவர்களிடம் பணம் கொடுத்து வைத்திருந்தேன். திடீரென்று தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு, அவர் மிசாவில் சிறைக்குச் சென்றுவிட்டார். பிறகு அவர் மனைவி அவரைப் பார்க்கச் சென்றபோது, என் திருமணச் செலவு குறித்து டைரியில் எழுதி வைத்திருப்பதாகவும், மீதிப் பணத்தை என்னிடம் ஒப்படைக்கும்படியும் சொல்லியிருக்கிறார். அதன் படிச் செய்தார் அவர் மனைவி. பெரியார் கடைப்பிடித்த நாணயம், வீரமணி அவர்களிடம் சிறிதும் பிசகாமல் இன்றும் இருக்கிறது.



* பெரம்பூர் கந்தன்

அவர் இயக்கத் தலைவராக இருந்தாலும், எல்லோரும் அவரை 'ஆசிரியர்' என்றே அன்புடன் அழைப்பார்கள். மணியம்மையார் இறந்த பின்பு தமது பிறந்தநாள் கொண்டாட்டங்களை அவர் அனுமதித்ததே இல்லை. பிறந்தநாளன்று காணாமல் போய்விடுவார். பல அன்பு உள்ளங்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த 75வது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு ஒப்புக்கொண்டார்.''

– கௌசி

படம் : ராஜன்

# காதலுக்குத் தூது போன விஜய்!

ஆங்கில எழுத்துக்களில் முதல் நான்கு ஏ.பி.சி.டி.யா... இல்லை திருட்டு வி.சி.டி.யா? பேனாவில் போடுவது இங்கா.. இல்லை பிங்கா?'' என்கிற ரீதியில் அடுக்கடுக்காய் கடுப்படிக்கிறார் விஜய் ஆதிராஜ். எங்கே? விஜய் டீ.வி.யில் ஞாயிறுதோறும் இரவு ஒளிபரப்பாகும் 'திறந்திடு சீசேம்' நிகழ்ச்சிக்கான ஆடம்பர மான செட்டின் நடுவில் நின்றுகொண்டு தான். அவரைச் சுற்றி அமர்ந்து கொண்டிருக்கும் பார்வையாளர்களும் போட்டியாளர்களும் விஜய் ஆதிராஜைவிட ஜ'ஊட் கையாக இருக்கிறார்கள். அவரையே கடுப்படிக்கும்விதமாக உரக்கக் குரல் கொடுக்க, ஒரே கலாட்டாதான்.

ஸ்டார் டீ.வி.யில் இரண்டு மூன்று அவ தாரங்கள் எடுத்து டீ.ஆர்.பி. ரேட்டிங்கில் ஏகத்துக்கு எகிறிய 'குல்ஜா சிம் சிம்' நிகழ்ச்சியின் தமிழ் வடிவம்தான் திறந்திடு சீசேம். இங்கேயும் எடுத்த எடுப்பிலேயே சூடுபிடித்துவிட்டது. நிகழ்ச்சியில் பங்கேற் கச் செல்பவர்கள் திடமான முடிவுகளை எடுப்பது எப்படி? குழப்பங்களிலிருந்து விடுபடுவது எப்படி? பறப்பதைப் பிடிப் பதற்காக, கையில் இருப்பதை விடலாமா? கூடாதா? போன்றவற்றுடன் ஒரு சில ஜோதிட, ஜாதக பலன் சொல்லும் புத்தகங் களையும் படித்துவிட்டுச் செல்லவும். காரணம், பங்கேற்கும் போட்டியாளர்களை அந்த அளவுக்கு ஆசைகாட்டி குழப்புகிறார் விஜய் ஆதிராஜ்.

அரங்கிலிருக்கும் மூன்று கதவுகளுள் இரண்டை மட்டும் சொல்லி அதில் ஒன் றைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறார். தேர்ந் தெடுத்த பிறகு, மூன்றாவது சாய்ஸ் கொடுத்து, 'இதுவா? அதுவா? எது வேண்டும்?' என்று கேட் கிறார். போட்டியாளர் மன திடத்துடன் இருந்தால், பாக் கெட்டில் இருந்து ஆயிரம் ரூபாய் நோட்டுகளை எடுத் துக் கண்ணெதிரே உரக்க எண்ண ஆரம்பிக்கிறார். 'இதோ பத்தாயிரம் ரூபாய்! எடுத்துக்கொண்டு நடையைக் கட்டுகிறீர்களா?' என்கிறார்.

'ஆசையை விட்டு ஒழி யுங்கள் என உபதேசம் செய்த புத்தரது சீடரே வந்தால்கூட அவருக்கும் நீங்கள் ஆசை காட்டுவீர்கள் போலிருக்கிறதே?' என்று விஜய் ஆதிராஜிடம் கேட்டால், ''அதில் தானே சுவாரஸ்யமே இருக்கிறது. என் நோக்கம் போட்டியாளர்கள் பரிசு கிடைக் காமல் ஏமாந்து போகவேண்டும் என்பது இல்லை. அவர்களைக் குழப்ப வேண்டும். அவர்கள் முடிவுகள் எடுக்கத் தடுமாற வேண்டும். இந்த கேம் ஷோவின் ஒவ் வொரு நிமிடத்தையும் போட்டியாளர் களுக்கு மட்டுமில்லாமல், டீ.வி. பார்க்கிற எல்லோருக்கும் சுவாரஸ்யம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். ஒவ்வொரு கதவுக் கும் பின்னால் என்ன பரிசு இருக்கிறது என்பது எனக்கே தெரியாது. அதன் காரண மாக நானும் ஒரு போட்டியாளரைப் போலவே, பார்வையாளரைப் போலவே ஒவ் வொரு நிமிடமும் ஆர்வமாக இருக்கிறேன்.

ஜெயா டீ.வி.யில் ஐந்து வருட காலம் ராகமாலிகா நிகழ்ச்சியை நான் தொகுத்து வழங்கினாலும், இசை பற்றிய என் அறிவு பெரிய பூஜ்ஜியம்தான். ஆனால், இந்த

நிகழ்ச்சி, என்னை முழுமையாக வெளிப்படுத்திக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. இந்த நிகழ்ச்சியை நடத்தும் ஒவ்வொரு வினாடியும் நான் முழுமையாக அனுபவித்து நடத்துகிறேன்'' என்று சிரிக்கிறார் விஜய் ஆதிராஜ்.

''இங்கே நான் பலவிதமான மனிதர்களைப் பார்க்கிறேன். சிலர் கிடைத்தவரை போதும் என்ற மனதுடன் கழன்றுகொள்கிறார்கள். இன்னும் சிலர் ஏமாந்து போனால் மிகவும் அப்செட் ஆகி அழ ஆரம்பித்துவிடுகிறார்கள். சிலரோ லட்ச ரூபாயை நழுவவிட்டாலும், ரொம்ப ஸ்போர்டிவாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்; எல்லோருமே முடிவு எடுக்கவும், எடுத்த முடிவில் உறுதியாக இருக்கவும் தயங்குகிறார்கள்'' என்று கூறும் விஜய் ஆதிராஜ், நினைவு கூர்ந்த ஒரு மறக்க முடியாத சம்பவம் இது:

''ஒரு புதுமணத் தம்பதி நிகழ்ச்சியில் பங்கேற்று இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள நகைகளை வென்றார்கள். வழக்கமாக ஒவ்வொரு போட்டியாளரும் தன்னுடன் மூன்று பேரை பார்வையாளராக அழைத்து வரலாம். எனவே, அந்தத் தம்பதியிடம், 'உங்களுடன் வந்திருக்கிறவர்கள் யார்? அவர்களையும் கூப்பிடுங்கள். உங்கள் வெற்றியைக் கொண்டாடலாம்' என்று நான் சொல்ல, அவர்கள் சில வினாடிகள் ஒன்றுமே பேசவில்லை. நான் மறுபடி விசாரிக்க, அவர்கள், 'நாங்கள் இருவரும் எங்கள் இரண்டு வீட்டார் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்துகொண்டவர்கள். இன்னும் எங்கள் பெற்றோரின் கோபம் தீரவில்லை. எங்களுடன் யாரையும் அழைத்து வரவில்லை' என்று வருத்தத்துடன் சொன்னார்கள். நான் இருவரது பெற்றோரையும் அமைதிப்படுத்தும் வகையில், 'நீங்கள் பெற்று வளர்த்த குழந்தைகளை நீங்களே வெறுக்கலாமா? பழையதை மறந்து விடுங்கள். இவர்கள் சந்தோஷத்தில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்' என்று வேண்டிக் கொண்டேன். அந்த எபிசோடு ஒளிபரப்பான பிறகு, அதைப் பார்த்த இரு குடும்பத்தினரும் சமாதானமாகிவிட்டார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்து மகிழ்ச்சி அடைந்தேன்.''

**– கௌதம் ராம்**




# ஒரு பெண், ஒரு புத்தகம், ஒரு நகரம்!

மருதன்

'இதோ, இந்தக் கைதானே இஸ்லாத்தையும் இஸ்லாமியர்களையும் தவறாகச் சித்திரித்து எழுதியது? ஒடித்துப் போட வேண்டாமா அந்தக் கைகளை? ஓர் இஸ்லாமியப் பெண்ணாக இருந்துகொண்டு இஸ்லாத்தையே அவதூறு செய்யும் துணிச்சல் எங்கிருந்து வந்தது உனக்கு? இத்தனை காலம் உன்னை தோள் மீது வைத்து சுமந்து வந்த சமூகத்தின் முகத்தில் அல்லவா உமிழ்ந்துவிட்டாய்? எந்த முகத்தோடு ஓடி வந்தாய்? ம்ஹூம், கொல்கத்தாவில் உனக்கு இடமில்லை. போ எங்காவது. வங்க தேசத்தில் அடித்துத் துரத்தினால் தூர தேசம் போ.'

கைகளை உயர்த்தி வாய் கிழிய ஆக்ரோஷம் கொப்பளிக்கச் சத்தம் போட்ட அவர்கள் கொல்கத்தா நகரவாசிகள். பீகாரிகள், வங்காளிகள். முக்கியமாக, இஸ்லாமியர்கள். லஜ்ஜாவை அவர்களில் எத்தனை பேர் படித்திருப்பார்கள் என்பது முக்கியமல்ல. அதற்கான அவசியமும் அவர்களுக்கு இல்லை. ஆயிரத்தெட்டுப் பிரச்னைகளைக் கவனித்தாக வேண்டும். குடும்பம், குழந்தைகள், ஸ்கூல் ஃபீஸ், ஒழுகும் மேற்கூரை, முடிந்தால் ஒரு டூவீலர், வேறு ஒரு பெரிய வீடு, இம்சிக்காத வேலை, சமூகப் பாதுகாப்பு. இத்தனைக்கும் மத்தியில் காலை நீட்டி வைத்துக்கொண்டு கதை புத்தகமா படிக்க முடியும்? அதுவும் எங்கோ ஒரு மூலையில், யாரோ ஒரு பெண் எழுதிய நாவலை?



* தஸ்லிமா

ஆனாலும், அவர்களுக்குக் கோபம் வந்திருக்கிறது. லஜ்ஜா மீது. தஸ்லிமா நஸ்ரீன் மீது. இந்திய அரசாங்கத்தின் மீது. அந்த ஆயிரத்தெட்டு பிரச்னைகளை அவர்கள் நொடியில் மறந்துவிட்டார்கள். இஸ்லாத்தை ஒரு பெண் விமர்சித்திருக்கிறாராம். முஸ்லிம்களைத் திட்டியிருக்கிறாராம். பாபர் மசூதி சம்பவத்தையடுத்து வங்க தேசத்தில் உள்ள இஸ்லாமியர்கள், அங்கே இருந்த இந்து சிறுபான்மையினர் மீது நடத்திய வன்கொடுமைகளை அம்பலப்படுத்தி இருக்கிறாராம். என்னத்துக்கு இந்த ஆகாத வேலை? ராஜா, ராணி, குதிரை என்று எதையாவது எழுதிக்கொள்ளட்டுமே? இவருக்கும் நாங்கள்தான் கிடைத்தோமா?

காங்கிரஸுக்கும் இடதுசாரிகளுக்கும் அவர்கள் ஆவக்காய் ஊறுகாய். கொஞ்சம் போல் அவ்வப்போது தொட்டுக் கொண்டால் போதுமானது. அதிகம் ஈஷிக் கொண்டால் ஆபத்து. பி.ஜே.பி. அவர்களைச் சட்டை செய்வதே இல்லை. என்ன செய்தாலும் அவர்கள் தாமரைச் சின்னத்தில் வாக்களிக்கப் போவதில்லை. வேண்டவும் வேண்டாம். மற்றபடி, அவர்கள் வாழ்வில் எந்தவொரு கட்சியும் எந்தவொரு முன்னேற்றத் திட்டமும் எந்தவொரு பலனும் குறுக்கிடுவது கிடையாது.

மன்மோகன் சிங்கின் தலைமையில்





செயல்பட்டு வரும் திட்டக் குழு, சமீபத்தில் செய்துள்ள பரிந்துரை இது: தலித்துகளுக்கு, ஆதிவாசிகளுக்கு, இஸ்லாமியர்களுக்கு உடனடியாகச் சில நலத்திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். இன்னின்ன திட்டங்கள். ஒவ்வொன்றும் இத்தனை காலம் பிடிக்கும். இவ்வளவு செலவாகும். மன்மோகன் சிங் அரசு இரண்டு கோரிக்கைகளை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளது. தலித்துகளுக்கும் ஆதிவாசிகளுக்கும் ஏதாவது செய்வோம். முஸ்லிம்களுக்கு இப்போது வேண்டாமே!

1992-ல் முதன் முறையாக கொல்கத்தா வீதிகளில் ராணுவம் நுழைந்தது. அதாவது, பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு. அப்போது நடந்த கல் வீச்சுகளை, கலவரங்களை இதே கொல்கத்தாவாசிகள் அச்சத்துடன் கண்களை விரித்து கவனித்திருக்கிறார்கள். எரியும் கார் டயர்களை, அதன் நெடியை, காதுகளைப் பிய்க்கும் சத்தங்களை அப்போது அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ராணுவம் கொல்கத்தாவுக்குள் பிரவேசித்திருக்கிறது. தஸ்லிமாவுக்கு எதிராகக் கோஷம் போடுபவர்களைத் தடுத்து நிறுத்த. அதே கார் டயர், அதே நெடி, அதே அச்சுறுத்தும் சத்தம்.

1992-ல் பிறந்த ஒரு குழந்தை இப்போது தஸ்லிமாவுக்கு எதிரான போராட்டத்தில் கல்வீச்சு நடத்தியிருக்க வாய்ப்புண்டு. லாரி டயரை உருட்டிக்கொண்டே வந்து எரியும் நெருப்பில் தள்ளிவிட்டிருக்க வாய்ப்புண்டு. ஏன்? இந்தப் பதினைந்து ஆண்டுகளாக அந்தக் குழந்தைகள் டி.வி. பார்த்திருக்கிறார்கள். செய்தித்தாள்களைப் படித்திருக்கிறார்கள். கவர் ஸ்டோரிகளை வாசித்திருக்கிறார்கள். அரசியல்வாதிகளைக் கவனித்திருக்கிறார்கள். 'நீ பத்திரமாக இருக்கிறாய், பயப்படாதே' என்று இதுவரை யாரும் அவர்களிடம் சொல்லியது கிடையாது.

அவர்கள் சில விஷயங்களைப் புரிந்து வைத்திருக்கிறார்கள். 'எங்களை இன ரீதியாக ஒடுக்குகிறார்கள். எங்களை அந்நியர்களாகவே பார்க்கிறார்கள். பிறப்பால், உணர்வால், நாங்கள் இந்தியர்களாக இருந்தாலும் எங்கள் அடையாளம் வேறு விதமாகவே இருக்கிறது. எங்களைச் சந்தேகக் கண்களோடு பார்க்கிறார்கள். குரோதத்துடன் அணுகுகிறார்கள். எங்களை நிராகரிக்கிறார்கள்.

நிராகரிப்பு இயலாமையாக மாறியிருக்கிறது. இயலாமை, வெறுப்பாக. வெறுப்பு, கோபமாக. போராட்டத்தையும் வன்முறையையும் பிரிக்கும் கோடு மிகவும் ஒல்லியானது. தக்கையானதும்கூட. கொல்கத்தா முஸ்லிம்கள் அந்தக் கோட்டைத் தாண்டியது தவறு. தஸ்லிமாவுக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்தது தவறு. 'எங்களிடம் உள்ள குறைகளை யாரும் வெளியில் சொல்லக்கூடாது' என்று நினைத்தது தவறு. 'யாராலும் கேள்வி கேட்கப்பட முடியாத ஒரு சமூகம் நாங்கள்' என்று நினைத்தது தவறு. ஆனால், தவறு அவர்களுடையது மட்டுமல்ல.

தஸ்லிமாவுக்கு அடைக்கலம் கிடைத்துவிட்டது. லஜ்ஜா மிக நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால், அவர்கள் அப்படியே இருக்கிறார்கள். நம் கவனத்தை அவர்களை நோக்கித் திருப்ப வேண்டிய தருணம் இது.

**உள்ளும் புறமும்**

# "இது வெறும் ஆட்டமல்ல!"

**நெ**ற்றி நிறைய விபூதி பூசி, நடுவே சந்தனக் கீற்றோடு பளிச்சென்று இருக்கிறார் அனிருத்தா நைட். பழம் பெரும் நடனக் கலைஞர் பாலசரசுவதியின் (பாலா) மகள் லக்ஷ்மி நைட்டின் மகன். சென்னையில் பாலசரசுவதி ஸ்க்ரிப்ஸ் இன்ஸ்டிடியூட் என்கிற நடனப் பள்ளி தொடங்கவிருப்பவரிடம் பேசினோம்.

"**ஏ**ழு வயதில் என் அரங்கேற்றம் நடந்தது. சின்ன வயதிலிருந்தே எனக்கு நடனத்தில் ஈடுபாடு இருந்து வந்தது. எங்கள் குடும்பத்தில், இந்த ஒன்பதாவது தலைமுறையில், நான்தான் முதல் ஆண் நடனக் கலைஞர். எனக்குப் பிறகு யாருமே இல்லை. நானும் ஈடுபடவில்லை என்றால், அப்படியே நின்றுபோய்விடுமே!

நான் அமெரிக்காவின் வெஸ்லியன் யூனிவர்சிட்டியில், இன்டர்நேஷனல் ரிலேஷன்ஸ் படித்தேன். என் அம்மாவுக்கு உடல்நிலை மோசமானதும் படித்த படிப்புக்கு வேலை பார்ப்பதா, தலைமுறை தலைமுறையாகக் காத்து வந்த நடனக் கலைக்கே போய்விடுவதா என்று ஒரு சின்னக் குழப்பம் வந்தது.

எனக்குக் கிடைத்தது போல எல்லோருக்கும் இந்தப் பாரம்பரியம் கிடைத்துவிடாது. இந்தப் பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும்; இதையே தொழிலாகக் கொள்வது எனத் தீர்மானித்தேன். அமெரிக்காவிலேயே கனக்டிக்கட்டில் 'பாலசரசுவதி இன்ஸ்டிடியூட் ஆஃப் பர்ஃபாமிங் ஆர்ட்ஸ்' ஆரம்பித்து நடத்தி வருகிறேன். வரும் பிப்ரவரியில், இதன் கிளையை நியூயார்க் நகரிலும் தொடங்கவிருக்கிறேன்.

பாலசரசுவதி என்றால் இன்றைக்கும் அங்கே பெரிய தாக்கம் இருக்கிறது. அமெரிக்காவின் 'மோஸ்ட் இன்ஃப்ளுயன்ஷியல் ஆர்ட்டிஸ்ட்ஸ்' என்று நூறு பேரைப் பட்டியலிட்டு, அதில் ஏழாவது இடத்தை 'பாலா'வுக்கு அளித்திருக்கிறார்கள். அங்கே இந்தக் கலையைப் புரிந்துகொள்வதைவிட, கலையின் அசாதாரண அழகைத்தான் ரசிக்கிறார்கள். இந்தக் கலையின் சக்தியை அவர்களால் முழுதும் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அதை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இது எண்டர்டெய்ன்மென்ட் அல்ல; ஆர்ட். இதை கிரகித்துக்கொள்ளும் தன்மையும், இதில் லயித்துப் போகிற தன்மையும் அவர்களிடம் இருக்கிறது. அதுதான் முக்கியம். இது வெறும் ஆட்டம் கிடையாது என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.


* அனிருத்தா நைட்

**பா**லசரசுவதி, லக்ஷ்மி நைட்டின் சாயல், பாணி எங்கேயும் போய்விடாது. மற்றவர்களைக் குறை சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். இந்தப் பாணி நாட்டியம், மற்ற நாட்டிய பாணிகளில் இருந்து வித்தியாசமானது. இந்தப் பாணியில் மட்டும்தான் பாட்டுக்கு

எக்கர்சக்க முக்கியத்துவம் தரப்படுகிறது.

நம் கலைகள் எல்லாமே பழைமையானவைதாம். ஆனால், ஒவ்வொரு தலைமுறைக்கும் அது புதிது. இந்தப் பாரம்பரியத்தைப் பார்த்து, 'இந்த ஜெனரேஷனிலும் இப்படி ஒரு பரம்பரை இருக்கிறது' என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஜனவரியில் நான் தொடங்கவிருக்கும் பாலசரசுவதி ஸ்க்ரிப்ஸ் இன்ஸ்டிடியூட்டில், 'ஸ்க்ரிப்ஸ்' என்பது மிக முக்கியமான ஒருவரைக் குறிக்கிறது. அவர் அமெரிக்காவில் கலைகளின் பெரிய ஆதரவாளர். அலி அக்பர்கான், அல்லா ராக்கா, ரவி சங்கர், பாலா எல்லோரும் அவருடைய தென்கிழக்கு ஆசிய அமைப்பில் இருந்தவர்கள். நம்முடைய கலை அங்கே பரவி, நிலைத்திருக்கிறது என்றால், அதற்கு அவர்தான் காரணம்.

வீணை தனம்மாள் பரம்பரையில் வந்தவர் பாலசரசுவதி. வீணை தனம்மாள் ஆர்க்கைவ்ஸ் (ஆவணங்கள்) என்று 600 ஒலி நாடாக்களை அமெரிக்காவில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அதன் பிரதிகளை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். சென்னைப் புறநகர் திருவடிசூலத்தில் நான் தொடங்கவிருக்கும் ஆராய்ச்சி - ஆவண மையத்தில் அதையெல்லாம் கேட்க முடியும்.



✻ பாலசரசுவதி பாணி நாட்டியத்தில் அனிருத்தா நைட்...

**எ**ன் நடனப் பள்ளியில் நிறையப் பேர் சேர வேண்டும் என்பது முக்கியமில்லை. பயிற்சியின் தரம் உயர்வாகவும், படிக்க வருகிறவர்களின் ஆர்வம் அதிகமாகவும் இருக்க வேண்டும். ஏனோதானோவென்று ஃபேஷனபிள் ஹாபியாக எடுத்துக்கொள்பவர்கள் வரவே வேண்டாம்.

இந்தப் பரம்பரை மறைந்துவிடவில்லை. அது மலர வேண்டும்; வளர வேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுக்கவே என் முயற்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்தப் பரம்பரையின் பணி தொடர வேண்டும் என்றுதான் கலையுணர்வு மிக்கவர்கள் விரும்புகிறார்கள்'' என்கிறார் அனிருத்தா நைட்.

**பா**லசரசுவதியின் நாட்டியமும் அபிநயமும் தமிழ்க் கலையுலகின் பொக்கிஷங்கள். அதைப் பாதுகாக்க புதிய தலைமுறை முனைந்திருப்பது போற்றுதலுக்குரியது.

– **சாருகேசி**

"பார்வையற்ற பெண்களின் பிரச்னைகள் மற்றவர்களுக்குத் தெரியாமல் இருப்பதோடு, இவர்களின் தேவைகளை மற்றவர்கள் பொருட்படுத்துவதும் இல்லை. இவர்கள் பிரச்னையை சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு வருவது அவசியம் மட்டுமல்ல அவசரமும் கூட'' என்கிறார் 'நந்தினி வாய்ஸ் ஃபார் தி டிப்ரைவ்டு' தன்னார்வ அமைப்பின் டிரஸ்டியான என்.எஸ்.வெங்கட்ராமன். பார்வையற்றோர் பிரச்னைகளை வெளிக்கொணர சென்னையில் சமீபத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது நந்தினி அமைப்பு. இதில் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னேறிய 22 பார்வையற்ற பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். கூட்டத்தின் முன் இவர்கள் தங்களின் வேதனையான வாழ்க்கையை எடுத்து வைத்தபோது, நெஞ்சு கனத்துப் போனது.



✱ சரஸ்வதி

"பார்வையுள்ளவர்களை மணம் செய்துகொள்ளும் பெண்களின் வாழ்க்கை வெற்றிகரமாக அமைவதில்லை"

# "நாங்கள்



✱ தண்டபாணி

சென்னை பல்லாவரத்தைச் சேர்ந்தவர் பார்வையற்றவர் தண்டபாணி. இவரது மனைவி விஜயலட்சுமிக்குப் பார்வையுண்டு. ஒருநாள் மாலை கடைக்குச் சென்றிருந்த விஜயலட்சுமியை மூன்று பேர் வழிமறித்து, மிகத் தகாத முறையில் நடந்து கொண்டுவிட்டனர். காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்ய தண்டபாணி முயற்சி மேற்கொண்டதை விவரித்தபோது 'போலீஸ் இப்படி

# என்ன செய்வோம்!"

யும் மானுடம் இல்லாமல் இருப்பார்களா?' என்ற எரிச்சலும் தார்மிகக் கோபமும்தான் ஏற்பட்டது. வழக்கைப் பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயாரிப்பதற்குள், காவல் துறை அந்தப் பார்வையற்றவரை சகட்டு மேனிக்கு அலைக்கழித்திருக்கிறது. ஊர் பொதுமக்கள் போராட்டம் நடத்த, பின்னரே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர் பாக உண்டான செலவுகளுக்காக, தம் பொறுப்பில் இருந்த பி.சி.ஓ.வை 15,000 ரூபாய்க்கு விற்றுவிட நேர்ந்திருக்கிறது. போலீஸ் இரண்டு பேரைக் கைதுசெய்து குண்டர்கள் சட்டத்தில் போட்டிருக்கிறது. ஆனால், இப்போது காவல் துறையில் உள்ள சிலர் 'நீ இந்தப் பகுதியிலிருந்து உடனடியாக காலி செய்து போய்விடு. இல்லையேல் உன் உயிருக்கு ஆபத்து' என்று பயமுறுத்துகிறார்களாம். "தீய சக்தி களுக்காக வக்காலத்து வாங்குறொர்கள். வழக்கை ஒன்றும் இல்லாமல் செய்து விடுவார்களோ என்று சந் தேகம் இருக்கிறது'' என்று சொன்னார் தண்டபாணி.

**செ**ன்னை ராணி மேரி கல்லூரி யில், ஆங்கில இலக்கியம் படிக்கும் சரஸ்வதி பேசும்போது, "சிறு வயதில் பார்வையற்ற பெண்களை தாய், தந்தை கவனித்துக் கொள்கிறார்கள். பின்னர் அவர்கள் மறைவுக்குப் பிறகு, உடன் பிறந்தவர்கள் சில காலத்துக்கு கவ னித்தாலும் பின் துரத்திவிடுகிறார்கள். பார்வையுள்ளவர்களை மணம் செய்து கொள்ளும் பெண்களின் வாழ்க்கை வெற்றி கரமாக அமைவதில்லை. படிக்கும்போது மட்டும்தான் விடுதி யில் தங்க முடியும். அதன் பிறகு வேலை கிடைக்கும் வரை தங்க இடம் கிடைக் காமல் அவதிப் படுகிறோம். இந்த நிலையில் எங்கள் பாதுகாப்புக்குக் கடும் சவால்கள் உண்டாகின்றன.



✱ வெங்கட்ராமன்

வேலையிலோ எங்களுக்கு ஒரு சதம்தான் இட ஒதுக்கீடு. பட்டப்படிப்பு, ஆசிரியர் படிப்பு, பட்ட மேற்படிப்பு படித்த நூற்றுக் கணக்கானவர்கள் வேலை கிடைக்காமல் படாதபாடு படுகிறோம். வேலை கிடைத் தால் சுற்றம் மீண்டும் பணத்தைப் பறிக்கச் சுற்றிக்கொள்கிறது. கனிவாகப் பேசி, உதவி செய்வதுபோல் நடித்து கற்பைச் சூறையாட முயல்வோரும் உண்டு. பார்வையற்றவர்களே இதுபோன்ற பிரச்னைகளைச் சமாளிக்க முடியாது. நாங்கள் என்னதான் செய் வோம்'' என்று மனம் உருகக் கேட்டார் சரஸ்வதி. "பொருளாதாரம், பாதுகாப்பு இவைகளே நாங்கள் சந்திக்கும் முக்கிய பிரச்னைகள்'' என்கிறார் இவர்.

"கணவனால் கைவிடப்பட்ட பெண் களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் தங்கும் விடுதி வசதி, படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு, அவர்கள் செய்யும் கைவினைப் பொருட்களை மார்க்கெட் செய்ய வசதி போன்றவைகளை அரசு உடனடியாகச் செய்து கொடுக்க வேண் டும்'' என்கிறார் வெங்கட்ராமன்.

– **ப்ரியன்**

படங்கள் : **ராஜன்**



# மரியாதை

டி.சீனிவாசன்

கார் சீராகச் சென்று கொண்டிருந்தது. ஊரை அடைய இன்னும் சில கிலோ மீட்டர்களே பாக்கி. சுவாமிநாதன் ஜன்னலோரம் பார்த்தபடி இருக்க, அவர் கண்ணில் பரமானந்தம் தென்பட்டார். ஒரு குடையைப் பிடித்தபடி ஓரமாக, மெதுவாகச் சென்று கொண்டிருந்தவரை கண்ட சுவாமிநாதன் துணுக்குற்றார்.

இருபது வருடங்களுக்கு முன்பு சுவாமிநாதன் நடந்து வேலைக்குச் செல்லும் நிலைமையில் இருந்தபோது, இதே பரமானந்தம் அந்த ஊரின் முதல் பணக்காரராக இருந்தவர். மனைவிக்குப் பெரிய நோய் வந்து, பிறகு மகன் போலீஸில் மாட்டி, கோர்ட் கேஸ் என்று அலைந்து, இப்போது சராசரி மனிதராய் மாறியிருக்கிறார். ஆனாலும் தானுண்டு தன் வேலையுண்டு என்று மற்றவர்களிடம் கண்ணியம் குறையாமல் பழகுபவர்; கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே என்னும் விதமாய் ஜீவிப்பவர். பலமுறை ரோட்டில் நடந்து சென்ற தம்மை, பரமானந்தம் தம் காரில் ஏற்றிச் சென்ற சம்பவம் சுவாமிநாதனுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

''டிரைவர் காரை நிறுத்து, நான் இறங்கிக்கிறேன். நீ போ''

காரிலிருந்து இறங்கிய சுவாமிநாதன், பரமானந்தத்துடன் இணைந்து நடக்கத் துவங்கினார்.

இருவரும் பேசிக்கொண்டே ஊர் வந்து சேர்ந்தனர்.

இரவு. சுவாமிநாதனின் மனைவி கேட்டாள்...

''ஏங்க, அவரை கார்ல அழைச்சுக்கிட்டு வர வேண்டியதுதானே?''

சுவாமிநாதன் சிறிதும் யோசிக்காமல் சொன்னார்:

''அது உதவி! ஆனா அதை அவர் ஏத்துக்க மாட்டாரு! ஆனா, நான் செஞ்சது மரியாதை! அதுதான் அவரோட மனசுக்கு நிறைவைக் கொடுத்திருக்கும்! இது அனுபவத்துலதான் புரியும்!''

# வட்டமேஜை



## நிஜமான ராஜா!

**ரா**.கி.ரங்கராஜனின் ஆறு நூல்கள் வெளியீட்டு விழா, அறுசுவை தொகுப்பு!

**மேற்கு மாம்பலம், வெ.நா.சிவகுமார்**

**இ**ல.கணேசன், நல்லவர்களை அரசியலுக்கு வரவேற்பது சரிதான். ஆனால், துணிந்து வரும் நல்லவர்களைச் சுற்றியிருக்கும் அரசியல்வாதிகள், நல்லவர்களாகவே அவர்களைத் தொடர விடுவதில்லையே!

**மதுரை, என்.பாலகிருஷ்ணன்**

'**ரௌ**டிகளின் ராஜ்ஜியம்' தலைப்பில் மக்களின் எண்ணங்களை, ஆதங்கத்தைத் தலையங்கமாகத் தந்துவிட்டீர்கள்.

**பாளையங்கோட்டை, கே.மோகனசுந்தரம்**

**மீ**டியாவா, மாஃபியாவா என ஹாரல்ட் இவான்ஸ் போல் எங்களுக்கும் ஆசிரியர் பக்கம் படித்ததும் சந்தேக பூதம் கிளம்பி விட்டது.

**திருவண்ணாமலை, சாமி**

**T**NPSC தலைவர் காசி விஸ்வநாதனின் பேட்டி, இளைய சமுதாயத்துக்கு வரப்பிரசாதம்.

**சென்னை - 73, கே.வி.ராமன்**

'**பா**ர்த்திபன் கனவு'க்கான ஓவியம் மிக அற்புதம். நிஜமாகவே ஒரு ராஜாவைப் பார்த்த பிரமிப்பு ஏற்படுகிறது.

**ஸ்ரீரங்கம், எஸ்.மீனா**

## ஸ்பீடு போஸ்ட்!

✉ இரண்டு ரூபாய் அரிசி - மின்சார அதிர்ச்சி 'ஷாக்' அடித்தது!

**சென்னை - 10, ஆர்.ஏ.அமுதன்**

✉ அப்துல் ரகுமான், வைரமுத்து போன்ற கலைஞர் தோழர்கள் விலகி இருந்தனர். சல்மா, தமிழச்சி போன்ற கனிமொழி தோழிகள் துணிந்து நுழைகின்றனர். வாழ்த்துவோம்.

**சென்னை - 78, அ.யாழினி பார்வதம்**

**அ**மரர் 'கல்கி' அவர்களுடைய பொன்னியின் செல்வனையும் அலெக்ஸாண்டர் டூமா எழுதியுள்ள த்ரீ மஸ்கிடீர்ஸ் (தொடர்) நாவல்களையும் ஒப்பு நோக்கி ஒற்றுமை - வேற்றுமைகளை ஆராய்ந்து வருகிறேன். கல்கி ராஜேந்திரன், 2.12.2007 கல்கி இதழில், 'ஆயிரம் டூமாக்கள் வந்தாலும் நெருங்க முடியாத இலக்கியச் செல்வம் பொன்னியின் செல்வன்' என்ற கருத்தை வெளியிட்டிருப்பது அழகல்ல.

**கோயமுத்தூர், இரா.கற்பகம்**

*(திருமதி இரா.கற்பகம் எழுதியுள்ள நீண்ட கடிதத்தின் சாரம் மேற்படி வரிகளே. இது குறித்து கல்கி ராஜேந்திரனின் கருத்தைக் கேட்டபோது அவர் கூறியது: "திருமதி இரா. கற்பகம் அவர்களுக்கு தமது அபிப்பிராயத்தை வெளியிட முழு உரிமை உண்டு; அதை மதிக்கிறேன். எனினும் 'ஆயிரம் டூமாக்கள் வந்தாலும் நெருங்க முடியாத தன்னிகரற்ற ஓர் இலக்கியச் செல்வம் பொன்னியின் செல்வன்' என்ற எனது கருத்தில் மாற்றம் ஏதுமில்லை. ஆயிரம் முறை இதைக் கூறுவேன்! டூமாவின் த்ரீ மஸ்கிடீர்ஸ் தொடர் நாவல்கள் தவிர, அவரது இதர பல நாவல்களையும் படித்து அனுபவித்த துணிவில் தான் இதைச் சொல்கிறேன்.")*

# தில்லான திருப்புமுனை!

ஒரே அடியில் ஒன்பதுபேர் சடசடவெனச் சரிய உதயமாகும் கதாநாயகன்; காட்சிக்குக் காட்சி வன்முறையில் ரத்தம் தெறிக்கும் திரைக்கதை; காற்றையும் காதையும் மாசுபடுத்தும் இரட்டை அர்த்த வசனங்கள்; ஆடை குறையக் குறைய கதாநாயகி போடும் குத்தாட்டம்... இன்னும் பிற அனர்த்தங்களையும் இடது கையால் ஒதுக்கிவிட்டு, வட தமிழக கிராமத்து வாழ்வின் அழகியலும் அழகற்றதும் கலந்த தரத்தோடு திரைக்கு வந்திருக்கிறது தங்கர்பச்சானின் 'ஒன்பது ரூபாய் நோட்டு'.



ஊரே மதிக்கும் பெரிய மனிதராகச் செல்வாக்கோடு வாழும் மாதவ படையாச்சி, தம் மகனின் சொல் சூடு தாங்க முடியாமல் மனைவியோடு வீட்டை விட்டு வெளியேறுவதும், போன இடத்தில் மனைவியைச் சாகக் கொடுத்துவிட்டு, மண்ணின் நினைவுகளைச் சுமந்துகொண்டு தனியாக ஊர் திரும்பி, மகன்களின் வறுமை நிலை கண்டு உயிர்விடுவதும்தான் கதை.

பேரன்பும் பெருங்கோபமும் கொண்ட கிழவன் மாதவ படையாச்சியாக படம் நெடுக வாழ்ந்திருக்கிறார் சத்யராஜ். மது அருந்திவிட்டு வீட்டில் கலாட்டா செய்யும் மகனைக் கண்டிக்கும்போது பெருங்கோபத்தையும், அதே மகன், ''உன்னைய விட்டா எனக்கு யாருய்யா இருக்கா, பாழாப்போன இந்தக் குடியை என்னையால மறக்க முடியலயே'' என்று கலங்கு

கையில் கட்டிப்பிடித்து ஆறுதல் சொல்லும் போது பேரன்பையும் நடிப்பில் கலந்து கொடுத்திருக்கிறார். களவுபோன பலாப் பழத்தை காலடி தடத்தை வைத்துக் கண்டுபிடிக்கும் சத்யராஜ், திருட்டுக்குத் துணை போன உள்ளூர்க்காரனை அவன் வாயாலேயே குற்றத்தை ஒப்புக்கொள்ள வைப்பது சிறுகதைக்கான செய்நேர்த்தி. மாங்காய் திருடும் பொடியன்களை மடக்கிப் பிடித்து அறிவுரை சொல்லி அனுப்பி வைப்பதும், 'மகனுக்கு வேலை வாங்க வச்சிருந்த அத்தனை பணத்தையும் புருஷன் குடிச்சே அழிச்சுட்டான். இப்ப நான் என்ன செய்வேன்' எனக் கலங்கி நிற்கும் பெண்ணிடம், வாழை விற்ற மொத்தப் பணத்தையும் கொடுத்து ஆறுதல் சொல்வதும் சத்யராஜ் நடிப்பில் விஸ்வரூபங்கள். யாரிடமும் சொல்லாமல் ஊரைவிட்டு வெளியேறும் போது வாழ்ந்த வீட்டை கண்ணீரோடு விழுந்து கும்பிடுவது, பத்து வருடங்கள் கழித்து ஊர் திரும்புகையில் பாழடைந்த வீட்டு நிலைப்படியில் தலை வைத்துப் படுப்பதென நம்மைக் கலங்கடித்து விடுகிறார் சத்யராஜ். தெருக் குழாயடியில் கோவணத்தோடு குளிக்கும்போது, 'இப்படிக் குளிச்சு எத்தனை நாளாச்சு' என்று கலங்கும் மாதவ படையாச்சியைப் போல, மண்ணையும் மக்களையும் சுமந்து கொண்டு தமிழகம் முழுக்க எத்தனை தகப்பன் சாமிகளோ!

சத்யராஜின் மனைவியாக அர்ச்சனா. கணவனை சாமியாகப் பார்க்கும் மனைவி பாத்திரத்தில் அதீத நடிப்பின் மூலம் அசத்தியிருக்கிறார். கணவன் அழைத்தவுடன் மறுப்பேதும் சொல்லாமல் கூடக் கிளம்பிப்

போவது தாம்பத்ய கவிதை. அவர் காட்சிக்குக் காட்சி அழுது அரற்றுவது கொஞ்சம் ஓவராகத் தெரிந்தாலும், அந்தக் குறை தெரியாதவாறு கதையை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் தங்கர்பச்சான்.

சத்யராஜின் நண்பராக நாசர். செய்நன்றி மறக்காத கதாபாத்திரம். நண்பனின் மனைவி பாம்பு கடித்து இறக்கையில், 'என்னை நம்பி வந்த உங்களை என்னையால காப்பாத்த முடியலயே' என்று கலங்கும் போது நடிப்பில் அனுபவம் மிளிர்கிறது. நாசரின் மனைவியாக ரோகிணி அழகாகப் பொருந்துகிறார். நடன இயக்குநராக நமக்கு அறிமுகமாகியிருந்த சிவசங்கர், நகைச்சுவை கலந்த வில்லன் பாத்திரத்தில்... தமிழ் சினிமாவுக்கு நல்ல குணசித்திர நடிகர் ரெடி!

**க**தை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்கி இருந்தாலும் அதிகம் ஸ்கோர் பண்ணுவதென்னவோ ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான்தான். கிராமம் நகரமென புகுந்து புறப்படும் கேமரா, கிராமத்து வாழ்வின் சின்னச் சின்ன நிகழ்வுகளையும் உயிரோட்டத்துடன் பதிவு செய்திருக்கிறது. இயல்பான வசனம், தெளிவான திரைக்கதை என படம் நெடுக நேர்த்தி. இசை பரத்வாஜ். காதை கௌரவப்படுத்தும் பாடல்கள். அத்தனையிலும் தெளிவாகப் புரிகிற எளிய வார்த்தைகள். ரத்தமும் சதையுமான அசல் கிராமத்து வாழ்வை வைரமுத்து கண்முன் நிறுத்த, ஒவ்வொரு காட்சியையும் ரசித்துத் தொகுத்திருக்கிறார் பி.லெனின்.

தமது நாவலின் இயல்பு மாறாமல் படம் தந்த தங்கர் பாராட்டுக்குரியவர். தமிழனின் வாழ்வுக்கும் வீழ்வுக்கும் காரணமான நிகழ்வுகளை, இதயம் நெகிழச் சொல்லியிருக்கும் இவர் போன்ற இயக்குநர்களின் ஆளுமையோடு, தமிழ் சினிமா அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருப்பது நல்லதொரு நிகழ்வு. அந்த வகையில் 'ஒன்பது ரூபாய் நோட்டு' தமிழ் சினிமாவின் தில்லான திருப்புமுனை.

**– கதிர்பாரதி**



# தர்மம் தழைக்கச் செய்பவள்

## ஸ்ரீலலிதா
## இரண்டாம் பாகம்

அம்பிகை பரமேசுவரி, இந்த உலகம் படைக்கப்படவேண்டும் என்பதற்காக எடுத்த திருமேனி ராஜராஜேஸ்வரி திருமேனி. அந்த ராஜராஜேஸ்வரி திருமேனிக்குத்தான் திரிபுரசுந்தரி என்று ஒரு திருநாமம் உண்டு. இவ்வாறு ராஜ ராஜேஸ்வரியாகவும் திரிபுரசுந்தரியாகவும் இருக்கக்கூடியவள், இந்த உலகத்தில் தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் தர்மம் தழைக்க வேண்டும் என்பதற்காகவும் எடுத்த இன்னொரு அவதாரம் லலிதாம்பிகை அவதாரம். லலிதாம்பிகையின் ஸ்வரூபமாகத்தான் காமாக்ஷியும் எழுந்தருளியிருக்கிறாள் என்பது புராணங்கள் சொல்லக்கூடிய கதை. அதனால் ராஜராஜேஸ்வரி, லலிதாம்பிகை, திரிபுரசுந்தரி, காமாக்ஷி - இவையெல்லாம் ஒரே விதமான திருமேனிகள் - நான்கு திருக்கரங்களோடு கூடிய திருமேனிகள். ஒரு ஜோடி திருக்கரங்களில் பாச-அங்குசமும் இன்னொன்றில் கரும்பு வில்லும் பஞ்ச பாணங்களும் தரித்தவளாக, செம்மேனி உடையவளாக இருக்கிறாள் என்பது இந்த நான்கு திருநாமங்களுக்கும் பொருந்தும்.


லலிதாம்பிகை என்பதற்கு இன்னும் கூடுதல் உயர்வு சேர்வதற்கு என்ன காரணமென்றால், உலகத்தைப் படைக்க வேண்டும் என்பதற்காக மட்டும் இல்லாமல், ஜகத் வியாபாரம் நடக்க வேண்டும் என்பதற்காக மட்டும் இல்லாமல், அப்படிப் படைக்கப்பட்ட உலகத்தில் தர்மத்தை ரக்ஷிக்க வேண்டும் என்பதற்காக-பண்டாசுரனை வதைக்க வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட அவதாரம் என்பதால், ராஜராஜேஸ்வரி என்று சொல்வதைவிட, திரிபுரசுந்தரி என்று சொல்வதைவிட, லலிதாம்பிகை என்று சொல்கிறபோது இன்னும் கூடுதல் உயர்வு அந்தத் திருமேனிக்கு உண்டு. இதை தேவி மஹாத்மிய விவரணைகள் சொல்கின்றன. அதனால்தான் லலிதாம்பிகை என்று சொன்னாலே, அவளுக்குரிய திருநாமங்களைச் சொன்னாலே அம்பாள் நிரம்ப ப்ரீதி அடைவாள் என்றும் சொல்லியிருக்கிறது.

பக்தர்கள் திருநாமங்களைச் சொல்லச் சொல்ல, அவற்றைக் கேட்டு ப்ரீதி அடையக்கூடியவளான அம்பிகையின் அந்தத் திருநாமங்களில் - ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில் - முதலில் வருபவை அவளுடைய திவ்ய ஸ்வரூப வர்ணனையான நாமங்கள் என்பதைப் பார்த்தோம். அவற்றுள் பலவற்றை நாம் ஏற்கெனவே சிந்தித்தோம். ஸ்வரூப வர்ணனைகள் ரொம்ப விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

### ஆதிசங்கரரின் வர்ணனைகள்

குறிப்பாக, சங்கர பகவத்பாதருடைய பல ச்லோகங்கள் அம்பாளுடைய ஸ்வரூப வர்ணனையை ரொம்ப விவரமாகச்

**சுதா சேஷய்யன்**


ஸ்ரீ அன்னபூரணி, காசி

சொல்லும். இப்படி விவரமாகச் சொல்ல வேண்டும் என்று ஆசார்யர் கருதியதற்கு, ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் மிக நுணுக்கமான விவர ணைகளும் ஒரு காரணம். அம்பாளுடைய திருமுகம் இப்படி இருந்தது, திருக்கண்கள் இப்படி இருந்தன என்பதை விவரித்துக் கொண்டே வந்தால், என்ன இருந்தாலும் சரி - ஆரம்பத்தில் மனம் அதற்குள் முழு சாகப் பொருந்தவில்லையானாலும் சரி, ஒவ்வொரு ஸ்வரூபமாக இப்படித்தான், இப்படித்தான், இப்படித்தான், இப்படித் தான் என்று சொல்லச் சொல்ல, அனு பவிக்க அனுபவிக்க, பேசப் பேச, கேட்கக் கேட்க, பாடப் பாட - எதுவாக இருந் தாலும் சரி, கொஞ்சம் நேரம் ஆனவுட னேயே மனம் அதிலே போய் ஐக்கியப்பட்டு, அம்பாளுடைய சன்னி தானத்திலே போய்



மானசீகமாக அமரக் கூடிய தன்மை ஏற்படுகிறது.

மனித மனமானது எத்தகையது என் றால், ஏதாவது ஒரு பிடிமானம் வேண்டும் அதற்கு. பிடிமானம் இல்லை என்றால் மனது அந்த இடத்திலே நிலைக்காது. அதனால்தான் சனாதன தர்மத்தில் நிர்க்குண மாக இருக்கக்கூடிய பிரம்மத்தைச் சொன் னாலும், அந்த நிர்க்குண பிரம்மத்துக்குப் பலவித வடிவங்களைக் கொடுத்து, ரூப வழிபாட்டை உருவ வழிபாட்டை அதிக மாக சிலாகிக்கிறது. காரணம், சராசரி மனித மனம் ஏதாவது ஒரு பிடிமானம் இல்லாது போனால் ஓர் இடத்தில் நிலைக்காது. அந்த இடத்தில் தன்னுடைய சிந்தனையைத் தேக்காது. எங்கேயோ போய்விடும். அப்படி எங்கேயோ போய்விடக்கூடிய மனத்தைப் பிடித்து நிறுத்த வேண்டுமா னால் ஓர் உருவம் வேண்டும். அந்த உருவத்தில் நிலைத்துவிட்டால், அதன் பிறகு மனம் மேலே மேலே போய் எதுவுமே இல்லாத அந்தகாரமாக இருக் கக்கூடிய இருளைப் பார்த்தாலும் ஜோதி ஸ்வரூபமாக இருக்கக்கூடிய பரபிரம் மத்தை தியானிக்கக்கூடிய அளவுக்குப் பயிற்சி, அந்த மனத்துக்கு ஏற்படலாமே தவிர, ஆரம்பத்தில், அந்தப் பயிற்சிக்கு முதல் படி, ஒரு ஸ்வரூபத்தில் கொண்டு போய் அந்த மனத்தை நிலை நிறுத்துவது தான்.

## மனத்தைக் கட்டும் சித்திரம்

அப்படி ஒரு ஸ்வரூபத்தின் மீது மனத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ப தற்காக புத்தகத்தை வைத்துக்கொண்டு எழுத்துக்களைப் பார்த்தாலும் சரி, யாரா வது சொல்லச் சொல்ல அந்த வர்ணனை களைக் கேட்டாலும் சரி, கவடிகளாக இருப்பின் அந்தச் கவடிகளில் உள்ள எழுத்துக்களைப் பார்த்தாலும் சரி, தானே பாடினாலும் சரி, பாடக் கேட்டாலும் சரி, மானசீகமாகக் கொண்டுபோய் அம்பாளு டைய சன்னிதியிலே நிற்க வைக்கக்கூடிய தன்மை அந்த ஸ்வரூப வர்ணனைக்கு உண்டு. அதனால்தான் ஆசார்யர் (ஆதி சங்கரர்) அந்த ஸ்வரூப வர்ணனைகளை மிகவும் விவரமாகச் செய்தார் என்பதுடன் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் இருக்கக் கூடிய திருநாமங்களை ஆதாரமாக வைத் துக்கொண்டு, அந்த ஆதாரத்தின் மீது அம்பாளுடைய சௌந்தர்யத்தை வர்ணித்

### ரீடர்ஸ் கார்னர்

*ரமணர் கிரிவலம் வந்தபொழுது ஒருவர் தரையைப் பெருக்கிக் கொண்டிருந்தார். ரமணரைப் பார்த்து, துடைப்பத்தைக் கீழே போட்டு விட்டு அவர் காலில் விழுந்தார். ரமணரோ, ''என்னப்பா, வேலையை ஏன் நிறுத்திவிட்டாய்? அது நடக்கட்டும். கடமையைப் பொறுப்புடன், கவனமாகச் செய்வதே இறைவனை வணங்குவது போன்றதாகும்'' என்றார்.*

**- பா.பனிமலர்**

தார்.

## சூரிய மண்டல சௌந்தரி

அழகான ஒரு நாமாவளி அம்பாளுக்கு இந்த சஹஸ்ரநாமத்தில் உண்டு. அம்பாள் எங்கே இருக்கிறாள் என்கிறபோது, சந்திர மண்டலத்தில் இருக்கக்கூடியவள் என்பதை முதலிலேயே பார்த்தோம். - **சந்திர மண்டல மத்யகா.**

இன்னொரு திருநாமம், **பானு மண்டல மத்யஸ்தா** - சூர்ய மண்டலத்துக்கு நடுவில் இருக்கக்கூடியவள்.

சந்திர மண்டலத்துக்கு மத்தியில் இருக்கக்கூடியவள், சூர்ய மண்டலத்துக்கு மத்தியிலும் இருக்கக்கூடியவள் என்றால் என்ன அர்த்தம்? சந்திர மண்டலமாக இருந்தாலும் சூர்ய மண்டலமாக இருந்தாலும் எந்தக் கோளாக இருந்தாலும் எத்தனை பிரகாசமாக இருந்தாலும் அதையெல்லாம் விஞ்சி நிற்கக்கூடியது அம்பாளுடைய பிரகாசம்.



பானு மண்டல மத்யஸ்தா என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்தோமானால் ஒரு விஷயம் புரியும் - ஒரு சூரியன் அல்ல; பல சூரியன்கள் உண்டு - பானு (சூரியன்) மண்டலம்!

நாம் அறிந்த சூரிய மண்டலம் பூமியையும் பிற கோள்களையும் நட்சத்திரங்களையும் உள்ளடக்கியது. அதற்கு நடுவிலே அம்பாள் பிரகாசிக்கிறாள் என்று சொல்லிவிட்டுப் போய்விடலாம். ஆனால், பானு மண்டலத்துக்கு நடுவிலே அம்பாள் பிரகாசிக்கிறாள் என்று விவரிக்கிறபோது, ஒரு சூரியன் மட்டுமல்ல, இன்னும் ஆயிரம் சூரியன்கள் என்று அர்த்தம் கொள்வதே அழகாக இருக்கும். சாதாரணமாக, புராணங்களிலேகூட அம்பாளுடைய பிரகாசத்தை கோடி சூர்ய பிரகாசம் என்று விவரிப்பது வழக்கம்.

ஒரு சூரியனுடைய பிரகாசமே நமக்கு இன்னும் சரியாகப் பார்க்கத் தெரியவில்லை. ஆயிரம் சூரியன்களின் பிரகாசம் என்றால் அது எப்படி இருக்கும்...?!. **பானு மண்டல மத்யஸ்தா** என்கிறபோது, கோடி சூரியன்களைச் சேர்த்து வைத்தால் எவ்வளவு பிரகாசம் இருக்குமோ, அவ்வளவையும் விஞ்சக்கூடியதாக இருக்கிறது அம்பாளுடைய பிரகாசம்.

இது ஒரு பக்கம். இதை ஆசார்யர் எடுத்துக்கொண்டு, அம்பாளை வர்ணிக்கிறார் - அந்தத் திருமுடியை வர்ணிக்கிறார் - அதன் மேலே இருக்கக்கூடிய அம்பாளின் கிரீடத்தைப் பார்க்கிறார் - நவரத்தினங்களால் செய்யப்பட்ட தங்கக் கிரீடம். அந்த நவரத்தினங்களெல்லாம் என்ன...? என்று கேள்வி எழுப்புகிறார். அவையெல்லாம் நிஜமாகவே சூரியன்கள். எல்லா சூரியன்களும் அம்பாளுடைய திருமுடியில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவ்வளவு பிரகாசத்தை - தங்களுடைய பிரகாசத்தை அம்பாளுக்குச் சமர்ப்பணம் செய்யக்கூடியவையாக இருக்கின்றன.

**(வளரும்)**

# கிரேஸியைக் கேளுங்கள்



● த.சத்தியநாராயணன், அயன்புரம்

**டாக்டரிடம் தைரியமாக ஊசி போட்டுக் கொண்டதுண்டா...?**

நான் 'ஜுரமாக' ஊசி போட்டுக்கொள்வதுதான் வழக்கம். அதாவது ஜுரம் குணமாக ஊசி போட்டுக் கொள்வேன். தோள்கள் தினவெடுத்து, நாம் தைரியமாக இருக்க, ஓர் ஊசி இருக்கிறது. அது வெள்ளையனை வீரமாக எதிர்த்த வ.ஊ.சி.!

● கா.சங்கர், சாலை அகரம்

**படிக்காத பையன்களை மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்கிறார்களே..?**

ஒரு கல்லூரி விழாவில், எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள் பேசியது குறித்துப் படித்தது ஞாபகத்துக்கு வருகிறது. பேச்சின் ஆரம்பத்திலேயே 'மாணவர்களே, நீங்கள் எல்லோரும் மாடு மேய்க்கப் போங்கள்' என்று அந்த ஞானபீடக்காரர் கூறி இடைவெளிவிட, மாணவர்களிடையே வியப்பும், அதிர்ச்சியும் கலந்தமயான அமைதி நிலவியதாம். தொடர்ந்து 'மாடு மேய்த்தவன்தான் கீதை சொன்னான்' என்று கூறி முடித்து, அவர் மாணவர்களைச் சிந்திக்க வைத்தாராம். ஜெயகாந்தன் எழுத்தில் சிறு கதை மன்னன். சொற்பொழிவில் சிறு கீதைக் கண்ணன்!

# நஷ்டமில்லாத

● அஜிதா, கம்பம்

**இன்றைய சூழ்நிலையில் நஷ்டமில்லாத பிஸினஸ் எது?**

எந்தச் சூழ்நிலையிலும் நஷ்டமில்லாத பிஸினஸ் 'மைண்ட் யுவர் பிஸினஸ்'தான். 'உனக்கு விதிக்கப்பட்ட ஸ்வதர்மத்தை மட்டும் செய்' என்று இதையே கண்ணன் கீதையில் கூறினார். சரி, அந்த ஸ்வதர்மம் எது என்று எப்படித் தெரிந்துகொள்வது? எதற்கும் பதில் பாரதியிடம் இருக்கிறது. 'தன் செயல் எண்ணித் தவிப்பது தீர்ந்

# சரித்திரமா... கொக்கா!

# பிசினஸ் எது?

இங்கு... நின் செயல் செய்து நிறைவு பெறும் வண்ணம்... நின்னைச் சரணடைந் தேன்' என்கிறார் மகாகவி. 'நானை' விட்டு அந்த 'நின்னைச்' சரணடைந்தால், பிஸி னஸில் தோல்வி ஏற்பட்டாலும், அது நஷ்டத்தில் லாபமாகத்தான் இருக்கும்.

● **குலசை நதீன், காயல்பட்டினம்**

***மனைவியின் சிரிப்பில் மயங்கியது உண்டா..?***

மயங்கியதால்தான் அவள் மனைவி ஆனாள்...

● **ஆர்.ஆர்.தமன், சென்னை**

***நாதத்துக்கு ஸ்வரம் சேர்ப்பது தம்பூரா வின் செயல்பாடு... தம்(மூச்சு) பூரா உபயோகித்து வாசிப்பது நாதஸ்வரம். நியாயமாகப் பார்த்தால் தம்பூராவுக்கு நாதஸ்வரம் என்றும், நாதஸ்வரத்துக்குத் தம்பூரா என்றும் பேர் வச்சிருக்கணும் இல்லியா?***

முதலாவதாக, தம்பூராவின் செயல் பாடு ஸ்வரம் சேர்ப்பது அல்ல, ஸ்ருதி கூட்டுவது. இரண்டாவதாக, நாகஸ்வரம் என்ற பெயர்தான் நாளடைவில் மருவி நாதஸ்வரம் ஆனது. மூன்றாவதாக, 'நிமிர்த்தி வைத்தால் தம்பூரா. அதையே படுக்க வைத்தால் வீணை' என்று சொல் லும் அளவுக்கு, சங்கீத அஞ்ஞானியான அடியேனிடம், இப்படி ஒரு சர்ச்சை தேவைதானா? ஏதேது... 'தமன்' சார், நீங்க போற ரேட்டுல நிறைய சர்தார்ஜிகள் சேர்ந்து வாசிக்கறதுதான் moreசிங்; வய லில் உட்கார்ந்து வாசிக்கறது வயலின்; பரீட்சைல ஃபெயிலான பசங்க வாசிக்கறது கோட்டு வாத்தியம்; மிருதுவான அங்கம் உடையவர்கள் வாசிப்பது மிருதங்கம் என்று, விட்டால் சொல்லிக்கொண்டே போவீர்கள் போலிருக்கிறதே!

● **வி.ஸ்ரீதரன், நாட்டரசன்கோட்டை**

***கிரேஸிக்கு சரித்திர அறிவு உண்டா?***

என்ன அப்படி இளப்பமா கேட்டுட் டீங்க? தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் சோழ நாட்டை ஆண்டது சோழர்கள். சேர நாட்டை ஆண்டது சேரர்கள். பாண்டிய நாட்டை ஆண்டது பாண்டியர்கள் என்று ஆதாரத்துடன், ஹிஸ்டரிகலாகக் கூவுவேன்.

● **மல்லிகா அன்பழகன், சென்னை**

***நாத்திகர்களும் நன்றாகத்தானே வாழ் கிறார்கள். ஆத்திகனாக வாழ வேண்டிய அவசியமென்ன?***

கடவுள் ஒரு சுமை தாங்கி. அதில் பாரத்தை இறக்கி வைத்துப் பயமில்லாமல் வாழும் பக்தி மார்க்கம் ஆத்திகம். தன் காலில் நின்று, கஷ்டமோ நஷ்டமோ தானே சுமந்து வாழும் கர்ம மார்க்கம், நாத்திகம். ஆத்திகனோ நாத்திகனோ, சுமக் கும் பாரம் (அதாவது செய்யும் தொழில்) நன்மையாக இருந்தால், நிச்சயம் நன்றாகத்தான் வாழ்வார்கள். நாத்திகனுக்கு 'செய்யும் தொழிலே தெய்வம்'. ஆத்திகனுக்கு 'தெய்வம் தொழலே தொழில்.' நாத்தி கனாகவும் இல்லாமல், ஆத்திகனாகவும் இல்லாமல், 'ஆத்துல ஒரு கால், நாத்துல ஒரு கால்' என்று இருந்தால், சற்று சிரமம். இல்லை ஆத்திகமும் வேண்டாம், நாத்திக மும் வேண்டாம் என்று திருமூலரைப் போலத் தன்னை உணர்ந்தவர்கள், 'ஈச னோடாயினும் ஆசை அறுமின்' என, கடவுளும் வேண்டாம், பாரமும் வேண் டாம் என்று 'சும்மா இருந்து சுகம் பெற்று வாழ்வார்கள்' ஞானமார்க்கத்தில், அதாவது சாத்விகம். ●



# ஆசிரியர் பக்கம்

அலுவலக ரீதியாக சக பணியாளருக்கு ஃபோன் செய்தால், அவர் குரலைக் கேட்பதற்கு முன் சின்மயியின் குரலோ ஹரிஹரனின் குரலோதான் கேட்கிறது! நமக்குப் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, ''நினைத்து நினைத்துப் பார்த்தால்... நெருங்கி அருகில் வருவேன்'' என்று ஆரம்பித்து அனுபல்லவி, சரணம்வரைகூட சில சமயம் காத்திருந்து காதுகளை நிரப்பிக்கொள்ள வேண்டும்!

அவசரமாக அழைத்துப் பேச நினைக்கிறபோது, 'குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா'கூட அமைதிக்குப் பதில் டென்ஷனை ஏற்படுத்துகிறது. 'அலைபாயுதே!' ஒலித்தாலோ அலுப்பு தட்டுகிறது.

இசையின்றித் திணிக்கப்படுகிற இசை, பெரும் ஹிம்சை!

இன்று இந்தத் திணிப்பு கால நேரமின்றி, திக்கு திசைதோறும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது!

நாம் ரேடியோவில் திரைப்படப் பாடல் கேட்க எண்ணுகிறபோது, அடுத்த வீட்டு ஸ்டீரியோவில் அரியக்குடியோ செம்மங்குடியோ - அலறவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாம்பே ஜெயஸ்ரீயின் அழகான யதுகுலகாம்போஜியைக் கேட்டுவிட்டு வெளியேவந்தால், சாலையில் ரிவர்ஸ் எடுக்கும் வாகனம் 'வசீகரா என் நெஞ்சினிலே' என்று சிணுங்கி உயிரெடுக்கிறது!

தொலைக்காட்சியில் தேவாரம் - திருவாசகம் ரசிக்க முனைந்தால், வீட்டில் உள்ளவர்களின் செல்ஃபோன் 'மணி' யோசை துப்பாக்கி சுடுகிற மாதிரியோ குதிரை ஓடுகிறமாதிரியோ கௌபாய் திரைப்படப் பின்னணி இசை கொடுக்கிறது!

அலுவலகப் பணிக்கிடையே அமைதி நாடுகிறபோது சக பணியாளர்களின் செல்ஃபோன்களில் கிளி கொஞ்சுகிறது, அல்லது குழந்தை அழுகிறது!

அதிகாலை வாக்கிங்கில், ஆங்காங்கே ஒலிக்கும் பறவை கானத்தைக் கேட்க ஆசைப்பட்டாலோ, பள்ளிக்கூட வேன்கள் நம் ஆசையில் மண்ணைப் போடுகின்றன! அந்தக் காலத்து 'கம் செப்டம்பர்' மெட்டு தொடங்கி, எந்தக் காலத்துக்குமான 'வந்தே மாதரம்' மெட்டு வரை, மொட்டை மொட்டை ஸ்வரங்களில் விதவிதமான ரிவர்ஸ் கியர் 'மியூசிக்' வீதியில் பெருக்கெடுக்கிறது.

வீட்டுக்கு வீடு தண்ணீர் கேன் கொண்டுசேர்க்கும் டெம்ப்போவுக்குத் தனி ரிவர்ஸ் டியூன்; டட்ட டட்ட டா டா! டட்ட டட்ட டாடா! டா டா டா டா டடட்ட டட்ட டா! - அந்த வேன் மொத்தத் தெருவையும் ரிவர்ஸிலேயே கடக்கிறபோது செவிகள் செத்துச் செத்துப் பிழைக்கின்றன.

நள்ளிரவில்கூட தப்பிக்க முடியாது. கட்டடப் பணிக்கு வரும் லாரிகள் சரக்கை இறக்கி வைக்கும்வரை அறிவிப்பாளினி கரகரக்க, பாடகி கிசுகிசுக்க பண்பலையை அலறவிட்டு நம் தூக்கத்தைக் கலைப்பது ஓட்டுனர்களின் பண்பாடாகி விட்டது! தெருக்கோடி காய்கறி வியாபாரியை ஏற்றிச் செல்ல வரும் டெம்ப்போ வேன் உச்ச டெசிபலில் 'சினேகிதனே! சினேகிதனே' என்று எலக்ட்ரானிக் ஒலியோடு ரிவர்ஸ் எடுக்கிற நேரம், சினேகிதமற்ற அதிகாலை மூன்று மணி!

சீஸன் வரையறையின்றித் தொடர்கின்றது சங்கீதக் கொடுமை! ●

As per BIS,
IS:2888-1983.



**உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு**
**தலைமுறை தலைமுறையாக**

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸிந்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸிந்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸிந்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.




**மேனிப் பராமரிப்பு என்றென்றும்**

Orchard B GCPMSOCN 1167/06

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No. TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Srilanka.